நவம்பர் 18 | 24 பக்கங்கள் | ரூபா 14.00

# சுடர் ஒளி

THE SUDAR OLI
සුඩර් ඔළි
வார மலர்



## தேர்தல் தீபாவளி பரிசு தமிழ்க் கட்சிகளின் கூட்டு

# அதிக அளவு சுயேச்சை அணிகள் மோதும் வவுனியா மாவட்டம்

## முஸ்லிம்களின் வாக்குகள் சிதறுண்டு போகும் நிலை

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வவுனியாவில் 8 சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடுகின்றன.

வன்னித் தேர்தல் தொகுதியில் அதிக அளவு சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடுவது இம் முறைதான்.

இந்த 8 சுயேச்சைக் குழுக்களில் 5 குழுக்கள் முஸ்லிம்களையும் இரு குழுக்கள் சிங்களவர்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் வரதராஜப் பெருமாள் அணி சுயேச்சையாகப் போட்யிடும் மற்றைய அணி. முதலில் 9 சுயேச்சைக் குழுக்கள் வேட்புமனுத் தாக்கல் செய்திருந்தன. ஒரு சுயேச்சைக் குழுவின் மனு நிராகரிக்கப்பட்டுவிட்டது.

கடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக போட்டியிட்ட ஆப்தீன் ரஹீம் தலைமையிலான சுயேச்சைக் குழுவே சுயேச்சைக் குழுக்களில் பலம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

எனினும் முஸ்லிம் தலைமையிலான சுயேச்சைக் குழுக்கள் முஸ்லிம் வாக்குகளை சிதறடிக்கச் செய்து முஸ்லிம் பிரதிநிதித்துவத்துக்கான வாய்ப்பைக் குறைத்து விடும் என்று அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

கடந்த பொதுத் தேர்தலில் ரெலோ சார்பாகப் போட்டியிட்டவர்களில் செல்வம் அடைக்கலநாதன், இராஜ கோணேஸ்வரன், வினோ ஆகிய மூவரும் வெற்றி பெற்றிருந்தனர். இவர்கள் இம்முறையும் போட்டியிடுகின்றனர். இம்முறை உதய சூரியன் சின்னத்தில் தமிழர் கூட்டமைப்பில் போட்டியிடுகின்றனர்.

மற்றும் தமிழர் கூட்டமைப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாக க. ஐயம்பிள்ளை தமிழ் காங்கிரஸ் சார்பாக கே. ஏ. செந்தில்நாதன் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

கடந்த தேர்தலில் தேசிய ஐக்கிய முன்னணி சார்பாக போட்டியிட்டு அதிக வாக்குகளைப் பெற்ற நூர்தீன் மசூர் இம் முறை முஸ்லிம் காங்கிரஸ் — ஐ.தே.க முதன்மை வேட்பாளராகப் போட்டியிடுகிறார்.

கடந்த தேர்தலில் போட்டியிட்டு ஓரளவு தமிழ் வாக்குகளைப் பெற்ற சாந்தகுமார புஞ்சிஹேவா இம்முறை முஸ்லிம் கா—ஐ.தே.க கூட்டில் போட்டியிடுகிறார். இவருக்கு இம் முறை தமிழ் வாக்குகள் கிடைக்குமா என்பதில் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பொதுத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பாகப் போட்டியிட்டு சொற்ப வாக்குகளினால் வெற்றி பெற்றவர் பிரேமரத்தின சுமதிபால. இவர் பிரதி அமைச்சராகவும் இருந்தவர். இவரின் தலைமையிலேயே இம் முறையும் பொதுஜன ஐக்கிய முன்னணி போட்டியிடுகிறது.

வவுனியாவில் உள்ள 94,853 வாக்காளர்களில் பெரும்பாலானவர்கள் இராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்குள் வாழ்கின்றனர்.



வன்னி மாவட்ட தமிழர் கூட்டமைப்பு வேட்பாளர்கள்

மன்னாரைப் பொறுத்த வரை 70,850 வாக்காளர்கள் உள்ளனர். ஒரு சாரார் இராணுவ கட்டுபாட்டு பகுதிக்குள்ளும் ஏனையோர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலும் வாழுகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 53,158 வாக்காளர்கள் உள்ளனர். இவர்களில் மணலாறைச் சேர்ந்தவர்களே வாக்களிக்கக் கூடிய நிலையில் உள்ளனர்.

வன்னி — தேர்தல் தொகுதியில் 167 வாக்குச் சாவடிகள் அமைக்கப்படும். இவற்றில் 50 வாக்குச் சாவடிகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைக்கப்பட உள்ளன. அதில் நான்கு வாக்குச் சாவடிகள் மணலாறு பிரதேசத்தில் கொத்தணி வாக்குச் சாவடிகளாக இயங்கும்.

கடந்த பொதுத் தேர்தலைவிட குறைவான கொத்தணி வாக்குச் சாவடிகளே இம்முறை வன்னியில் அமைக்கப்பட உள்ளன.

வவுனியாவில் வவுனியா மத்திய மகா வித்தியாலயம், பூவரசன்குளம் மகாவித்தியாலயம், செட்டிகுளம் மகா வித்தியாலயம், புதுக்குளம் மகா வித்தியாலயம், பிரமந்தநாதன் மகா வித்தியாலயம் ஆகியவற்றிலும்— மன்னாரில் பேசாலை மகா வித்தியாலயம், உயிலங்குளம் வித்தியாலயம், முருங்கன் மகா வித்தியாலயம், மடுரோட் சந்தி, நானாட்டான், மகா வித்தியாலயம் ஆகியவற்றிலும் கொத்தணி வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட உள்ளன.

அதே சமயம் தேர்தல் வன்முறைகளும் இம்முறை அதிகரித்து வருகின்றன.

வவுனியா தேர்தல் தொகுதியைப் பொறுத்த மட்டில் அத்தொகுதி புலிகள், தமிழ் குழுக்கள், அரசபடை, பொலிஸ் ஆகியோரை உள்ளடக்கியது. இதனால் அதிக அளவு தேர்தல் வன்முறைகள் கடந்த தேர்தலில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் மிகவும் குறைந்த வன்முறைகளே கடந்த தேர்தலின் போது இடம் பெற்றன.

இம்முறை இதுவரை சுமார் 15க்கு மேற்பட்ட சிறிய சம்பவங்களும் மூன்று பெரிய சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

தேர்தல் வன்செயல்கள் ஐ.தே.க வாகனம் மீதுநடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்துடன் ஆரம்பித்திருந்தன. பூந்தோட்ட பகுதியில் இச்சம்பவம் இடம் பெற்றது.

இதன் பின்பு சுயேச்சைக் குழு ஒன்றுக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் இடம் பெற்ற மோதலில் மூவர் வாள் வெட்டுக்கு உள்ளாகினர். இவர்களில் ஒருவரின் நிலை மிகவும் மோசமாக உள்ளது.

மற்றொரு சம்பவத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்துக்குள் புகுந்த நபர்கள், தார் பூசினர்.

அதுமட்டும் அல்ல தந்தை செல்வாவின் படத்திற்கும் தார் பூசியுள்ளனர்.

இதனை யார் செய்தது என்று தெரியாது. ஆனால் அந்த சுவரில் அதே தாரினால் நங்கூரச் சின்னம் அடிக்கப்பட்டுள்ளது.

— மகாமுனி




### அனுவும் அனுவும் மோதினால்...

உள்வீட்டுச் சண்டை முற்றி முற்றத்துக்கு வந்து விட்டதாம். மாமனாருக்கும் மருமகனுக்கும் நேரடி மோதல்கள் ஆரம்பித்து விட்டனவாம்.

அடுத்தது நானே என அனுவும் அனுவும் மோதிக் கொள்கின்றனர்.

இரண்டு அனுக்கள் மோதிக் கொண்டால் பூகம்பம் ஏற்படத்தானே செய்யும். இதனால் மாமனார் பழைமை விரும்பிகள் சிலருடன் கூடி மருமகனுக்கு எதிராக அணி ஒன்றைத் திரட்டுகின்றாராம்.

இது தொடர்பாக அம்மணியுடன் கதைக்கச் சென்ற ஜாலித் தாத்தாவை டெலிபோனில் கூட கதைக்க வேண்டாம் என திருப்பி அனுப்பி விட்டாராம் அம்மணி.

இதனால் மங்கூஸ் விளையும் பூமியில் போட்டியிடும் நபர்கள் நமக்கும் இதே கதிதானோ என்று தலையில் கை வைத்துக் கொண்டுள்ளனராம். இந்த விடயம் வீட்டு வேலைக்காரர்களினால் அம்பலமாகிவிட்டதாம்.

### மதன மாளிகையில் முத்தண்ணன்

நுவரெலியாவின் முதலானவரின் மாளிகையில் உள்நாட்டு உருப்படிகள் எதுவுமே இல்லையாம். திரைச்சீலை முதல் குளியல் அறை தளபாடங்கள் வரை எல்லாமே வெளிநாட்டு இறக்குமதிகள் தானாம்.

குடித்தனம் நடத்தும் இடத்துக்கு இவ்வளவு ஆடம்பரம் ஏன் என்று நண்பர் கேட்டாராம். நான் பதவியில் இருக்கும் வரை வீடு, அதன் பின் உங்களைப் போன்ற உல்லாசப் பிரியர்களின் விடுதி. அதற்காகத்தான் இந்த அத்திவாரம் என்றாராம் நுவரெலியா முத்து.

சிப்பிக்குள் இருந்தாலும் முத்து முத்துத்தான். நாமும் இருக்கின்றோமே எதையும் சேர்த்து வைக்காமல் என அலுத்துக் கொண்டாராம் அந்த மணியான நண்பர்.

### கதிரைப் போரில் மஹிந்தன்

பகைமைக் கட்சியின் ரம்மியமான தலைவருக்கு இரவு நேரங்களில் அடிக்கடி தொலைபேசி அழைப்புகள் வருகின்றனவாம். இது ஆதரவாளர்களிடம் இருந்து இல்லை யாம். மாறாக அம்மணியின் கீழ் அதிகாரத்தில் இருக்கும் முக்கிய புள்ளிகள் தான் இப்படி தொல்லை கொடுக்கின்றனராம்.

ஜாலித் தாத்தாவுக்கும் அனுராகம் பாடியவருக்கும் இடையில் நாற்காலி சண்டை முறுகல் நிலையில் இருக்கிறது. எப்படியும் என்னை அடுத்த அதிகாரி சபையில் எதிர் அணித் தலைவராக்கி விடுங்கள் என்று கேட்கின்றாராம் மீனவத் தலைவன் மஹிந்தன்.

காரணம் அம்மணி பக்கம் இருந்தாலும் பகைமைத்தலைவரின் பேச்சுக்கு செவிசாய்க்கும் பலர் அங்கு இருப்பது இந்த மஹிந்தனுக்கும் நன்கு தெரியுமாம். இதனை பகைமைத் தலைவர் பேனாக்காரர்களின் காதில் போட்டு விட்டார்.

### பாலூட்டி வளர்த்த கிளி

ஜாலித் தாத்தாவும் மைந்தனும் ஒரே தொகுதியில் தொங்கிக் கொண்டிருக்கின்றனர். அங்கே விருப்பு வாக்குப் பெறுவதில் ஜாலித்தாத்தாவும் மைந்தனும் நீயும் நானுமா? என கயிறிழுக்க ஆரம்பித்து விட்டனர்.

இது வாக்காளர் மத்தியில் இருந்து வீட்டுக்குள்ளும் வெடித்து விட்டதாம். இதனால் தேர்தல் பிரசார அலுவலகத்தில் இருந்து அறிக்கைகள், போஸ்டர்கள், நாற்காலி மேசைகள் எல்லாவற்றையும் தூக்கிக் கொண்டு தனிக் குடித்தனம் நடத்தப் போய்விட்டாராம்.

இதனால் வேதனை அடைந்த ஜாலித தாத்தா பாலூட்டி வளர்த்த கிளி நாளை வரும் கச்சேரிக்கு என சோக கீதம் பாட ஆரம்பித்துவிட்டாராம்.

### சொன்னது நீதானா?

மனோகரமானவரின் அமைப்பாளர்கள் கூட்டம் அந்த ஸ்போட்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

அங்கே சிறப்புப் பேச்சாளர் தேவனுக்கே ராசாவானவராம். அந்த ராஜன் பேசும்போது மனோகரமானவருக்கு தவறாமல் ஒன்றைப் போடச்சொன்னார். சரிதான், மற்ற இரண்டையும் யார் யாருக்கோ போடச் சொன்னார்! ஆனால் வெளியில் வந்தவுடன் தமிழர்கள் அனைவரும் ஐக்கியப்பட வேண்டும் என்ற அறிக்கையை பேனாக்காரர்களிடம் கொடுத்தாராம்.

அப்படியானால் உள்ளே பேசியதை மறந்துவிட்டா என்று ஒரு போடு போட்டாராம் ஒரு பேனாக்காரர்.

## முதியோர் இல்லம்

வன்னியில் யுத்தத்தாலும் இடம்பெயர்வுகளாலும் அல்லலுற்ற மக்களின் நிலையற்ற வாழ்க்கைப் பயணத்தில் முதியோர்களைச் சுமையாகக் கருதும் நிலைப்பாடு உருவானது.

சில அனாதரவான முதியோர்கள் தங்குமிட வசதியின்றி ஆலயங்கள், வைத்தியசாலை, மரநிழல்கள் என தஞ்சமடைந்து அல்லலுறுகின்றனர்.

இந்நிலையில் கிளிநொச்சி நகரில் அமைந்திருந்த யோகர் சுவாமிகள் திருவடி நிலையம் முதியோர் இல்லம் ஒன்றினை 1997 இல் ஆரம்பித்தது.

ஐந்து ஆண்டுகளை நிறைவு செய்து கொண்டிருக்கும் முதியோர் இல்லம் தற்போது 62 முதியோர்களை தன்னகத்தே கொண்டுள்ளது. 39 ஆண்களும் 23 பெண்களும் இங்கு பராமரிக்கப்படுகின்றனர். இவற்றுள் யாழ்ப்பாணம், கைதடி முதியோர் இல்லத்தில் இருந்து இடம்பெயர்ந்து பராமரிக்கப்படும் 16 ஆண்களும் 6 பெண்களும் அடங்குவர். தற்போது 62 முதியவர்கள் இங்கு பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.


## இலகுவில் ஆங்கிலம் கற்க ஓர் அரிய சந்தர்ப்பம்!

வகுப்புக்கள்

**Spoken English, Listening and Conversation, Reading and Discussion, Business English and writing skills**

என பல்வேறு நவீன முறைகளில்

யாழ்ப்பாணக் கல்லூரி, கொழும்பு மற்றும் யாழ்ப்பாணக் பல்கலைக்கழகங்களின் முன்னாள் விரிவுரையாளரும், ஜப்பானிய பல்கலைக்கழங்களில் நீண்ட அனுபவம் பெற்றவருமான

ஆசிரியர்: சீலன் கதிர்காமர்

அவர்களால் நடத்தப்படும்

வியாழன் முதல் ஞாயிறு வரை மாணவர்களின் தேவைக்கேற்ப உடனுக்குடன் வகுப்புகள் ஒழுங்கு செய்து தரப்படும்

மேலதிக விவரங்களுக்கு:

**CENFED**

**. No. 33, Frankfurt Place, Bambalapitiya, Colombo - 04. Tel: 588810, 071 - 753610**

அலுவலக நேரம்:

செவ்வாய் — சனி காலை 10.00 முதல் மாலை 5.00 மணிவரை

# கிழக்கில் தாக்குதல்களை அதிகரித்துள்ள புலிகள்

## உண்மையான இலக்குத் தெரியாது படையினர் தவிப்பு

தேர்தல் பிரசார நடவடிக்கைகள் ஆரம்பித்த சூட்டோடு கிழக்கில் புலிகள் தமது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியிருக்கிறார்கள்.

கிழக்கில் பல முக்கிய தலைவர்கள் பாரிய தாக்குதல்களுக்கான திட்டங்களை வெளிப்படுத்துகிறார்கள் என்று அடுக்கடுக்காக தகவல்கள் வெளியான போது எதிர்பார்த்தவாறு எந்தத் தாக்குதலும் அப்போது நடக்கவில்லை.

கிழக்கில் ஒரு வித கவனக் கலைப்பானாக இந்த ஆயத்தங்களை புலிகள் மேற்கொண்டனர். அந்தக் காலப்பகுதியில் கிழக்கு முதல் வடக்கு வரையான கடற்பரப்பில் கடற்சமர்களில் புலிகள் அதிக கவனம் காட்டினர்.

படையினரின் வருணகிரண படை ஒத்திகை நடவடிக்கைக்கு கண்ணாம் பூச்சி காட்டுவதும், ஆங்காங்கே சில படகு அணித் தாக்குதல்களில் ஈடுபடல், படையினரின் வடபகுதிக்கான விநியோக நடவடிக்கைகளைத் தாக்குதல் போன்ற நடவடிக்கைகளை புலிகள் மேற் கொண்டு வந்தனர்.

அப்போது கிழக்கில் தமது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியதாக படைத்தரப்பு வெளிக்காட்டிக் கொண்டதால் இவ்வாறான கடற்சமர்களை அவர்களால் வெற்றிகரமாக முன்னெடுக்கக் கூடியதாகயிருந்தது.

அத்துடன் அந்தக் காலப்பகுதியில் கிழக்கில் ஒரு தரை நடவடிக்கையை மேற்கொள்ளக் கூடிய ஆளணி வசதி புலிகளிடம் போதியளவு இருக்கவில்லை என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியது. அதனால் கடற்சமர்களில் ஈடுபட்டனர். அதேவேளை கடல் வழியில் தமக்குத் தேவையான ஆயுதங்களையும் உள்வாங்கிக் கொண்டனர். கடல் பகுதி கள முனையாக இருந்தபோதே புலிகள் இதை வெற்றிகரமாக நடத்தினர். இது குறித்து கடற்படையினரின் உயர் மட்டத்தில் ஏகப்பட்ட சிக்கல்கள். அவை தொடர்பான விசாரணை அறிக்கைகள் ஜனாதிபதியின் மேசை வரை சென்றன.

தற்போது புலிகள் கிழக்கில் ஆரம்பித்திருக்கும் தாக்குதல்கள் முக்கியமாக பொலிஸாருக்குச் சிம்ம சொப்பனமாக உள்ளன.

முகாமிலிருந்தாலும் அடி, விநியோக நடவடிக்கைகளுக்கும் அடி, மேலதிக துருப்புக்கள் வந்தாலும் அதற்கும் அடி,

இவ்வாறு கிழக்கை மிகவும் நேர்த்தியாக அளந்து வைத்திருக்கும் புலிகளுக்கு பொலிஸாரினதும், படையினரதும் நகர்வுகளை துல்லியமாகத் தாக்குவதில் கஷ்டம் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை.

கிழக்கில் இடம்பெறும் அநேக தாக்குதல்களில் பெரும்பாலும் கிழக்குப் பிரதேசத்தைச் சொந்த இடமாகக் கொண்ட புலிகளே பங்கு கொள்கின்றனர். எந்த மரத்தில் எத்தனை கிளைகள் என்று கூடத் தெரிந்த அவர்களுக்குப் பதுங்கியிருந்து தாக்குவதற்கும், தாக்குதலை முடித்துக் கொண்டு சுலபமாகத் தப்பிச் செல்வதற்கும் அதிக சிரமம் இருக்காது.

சமீபத்தில் இடம்பெற்றிருக்கும் புலிகளின் அதிரடித் தாக்குதல்களிலெல்லாம் புலிகள் மோட்டார் மற்றும் சிறியரக ஆயுதங்களையே பயன்படுத்தியிருக்கிறார்கள். அதைப் படைத்தரப்பே ஒப்புக் கொண்டுள்ளது.

அதே சமயம் புலிகளைப் பொறுத்தவரையில் கிழக்குச் சமர்கள் பல ஆயுதங்களைப் படையினரிடமிருந்து பெற்றுக் கொடுத்திருக்கின்றன.

புலிகளின் பாரிய தாக்குதல் ஒன்று இடம் பெறலாம் என்ற அச்சத்தில் முன்னர் களஞ்சியப்படுத்தப்பட்ட பலவகை ஆயுதங்கள் தற்போது பத்திரமாகப் புலிகளின் கைகளைச் சென்றடைந்திருக்கின்றன.

புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்கள் முல்லைத்தீவுக் காட்டுப் பகுதியினுள் உள்வாங்கப்பட்ட போதும். ஒரு கப்பல் நிறைந்த ஆயுத தளவாடங்கள் கிழக்கின் ஊடாகவே வடக்குக்கு நகர்த்தப்பட்டன.

பொதுமக்கள் மூலமே இறக்கப்பட்ட இந்த ஆயுதங்கள் குறித்து ஏற்கனவே ஊர்ஜிதமானது. அவற்றில் பெரும்பகுதி இன்னும் கிழக்கில் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கிறது என்று தெரிய வருகிறது.

அந்த வகையில் பொலிஸ் காவல் நிலையம் முன்னணிக் காவலரண்கள் என்ற மட்டத்தில் தாக்குதல்களை நடத்தும் புலிகளின் அடுத்தடுத்த இலக்குகள் என்ன?

தேர்தலை ஒட்டி எந்தப் பெரிய மோதல்களுக்கும் அவர்கள் தயாராக மாட்டார்கள் என்று இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

ஆட்சி மாற்றத்துக்கு புலிகள் காத்திருக்கிறார்கள் என்று அதை சிங்களப் பேரினவாதம் திரித்துக் கூறி தேர்தல் பிரசாரத்துக்கு முதலீடு செய்திருக்கிறது.

தேர்தலை ஒட்டிய தாக்குதல்களை எதிர்பார்க்க முன்னர் மாவீரர் தினத்தை ஒட்டி அச்சப்பட வேண்டிய கட்டாயம் படையினருக்கு ஏற்பட்டிருக்கிறது.

அந்த வகையில் புலிகளின் அடுத்த இலக்கு திருமலைத் தளமா? யாழ் புலமா? என்பது புரியாத புதிராக எழுந்திருக்கிறது.

— எறியன்

## தேர்தல் திருவிழாவும் தெருக்கூத்தன் பாடலும்



நேற்று ஏண்டா வரேல்லை?
நேராய்க் கேட்டார் வாத்தியார்.
பதம்பார்க்க அவர்கையில்
கடும் பிரம்பு ஆயத்தமாய்...

ஐயா, நான்...
அப்பாவின் ''போஸ்டர்'' ஒட்ட
போனேன் நேற்று!
பயலின் 'ஐடியா'வோ அசத்தல்!!
வாத்தியார் விட்டார் வழி, நகர்ந்து!!!

* * *

புருஷன் செத்து
வருஷம் பத்து!
புவனக்கா சாகக் கிடந்தாள்
மரத்துப் போன உடலுடன்!!
கதவைத் தட்டித் தபால்காரன்
காசுக் கடிதம் தர—
புருஷன் பென்ஷன் மாற்றலாகி
இப்பவாவது வந்ததே இறைவா!
—புவனம் கண்திறக்க,
உங்கட வாக்கு எங்களுக்கு!!
— இளித்தபடி நின்றார் வேட்டியார்
வெளியே!!!

* * *

இவர் அரசியல்வாதி
— யமனுக்கு அறிமுகம்
செய்தான் சித்திரகுப்தன்.
அப்படியே ஆளை அமுக்கி
அடுத்த பிளைட்டில்
அனுப்பிவிடு பூமிக்கு!!
இல்லாட்டி ஆபத்து
இனியெந்தன் கதிரைக்கு!!!
— மெல்லக் குசுகுசுத்தான்
யமனும், குப்தன் காதில்

— தீபன்

## லண்டன் வெம்லேயில் ராகமாலை இசை நிகழ்ச்சி

ரிபிசி கலையகம் ராஜி கிரியேஷன் பெருமையுடன் வழங்கும் ''ராக மாலை'' என்னும் உள்ளங்களையெல்லாம் கொள்ளை கொள்ளும் மாபெரும் இசை நிகழ்ச்சி எதிர்வரும் 23ஆம் திகதி மாலை 6.00மணிக்கு லண்டன் வெம்லே அறேனாவில் நடைபெறவுள்ளது.

அண்மைக் காலமாக இலங்கையிலும் உலகின் ஏனைய நாடுகளிலும் தனது இசைப் பயணத்தை வெற்றிகரமாக விஸ்தரித்துக் கொண்டே போகும் ''வராக நதிக் கரையோரம் ஒரே ஒரு பார்வை பார்த்தேன்'' என்ற பாடலின் மூலம் இசைப் பிரியர்களின் இதயங்களோடு சங்கமமாகிப் போன இளைய தலைமுறைப் பாடகர் சங்கர் மகாதேவன்' இசையுலகின் முடிசூடா மன்னன் என்றும் இசைச் சிகரம் என்றும் போற்றப்படும் இசையுலகின் சாதனையாளன் எஸ்.பி. பாலசுப்ரமணியம் மற்றும் இசை அரங்க நிகழ்ச்சிகளில் ரசிகர்களை தன்வசம் வசீகரித்துக் கொள்ளும் அனுராதாஸ்ரீராம், மகாலக்ஷ்மி, ஸ்ரீனிவாஸ் ஆகியோர் மேற்படி ''ராகமாலை'' இசை நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இரசிகர்களை கொள்ளையடிக்கவுள்ளனர்.

இவர்களோடு ''ட்றம்ஸ்'' இசையில் சரித்திரம் படைத்து முன்னணியில் திகழும் சிவமணியும் கலந்து கொண்டு இசை நிகழ்ச்சியின் போது ரசிகர்களை வசீகரிக்கப் போகிறார்.


என்டெனா பொருத்துதல்




Get it Installed by professionals

TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656.(TEL/FAX)
E-mail : telecave@eureka.lk



அவசர திருத்தங்கள்




Guaranteed repair & service by trained technicians

TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL
KOTAHENA : 478747 :75-352656.(
E-mail : teleca ureka.lk



சுடர் ஒளி
36/2 பிரெட்றிக்கா வீதி, கொழும்பு – 06. (இலங்கை)
36/2 FREDRICA ROAD, COLOMBO - 06. (SRI LANKA)
THE SUDAR OLI 36/2 (ශ්‍රී ලංකා)
VIBRANT TAMIL DAILY & WEEKLY TEL / FAX: 074 - 513112 / 5 E-Mail: sudar@uthayan.com


## ELECTION ADVERTISEMENT RATES
### தேர்தல் விளம்பரக் கட்டண விவரம்

| அளவு | கலர் | கறுப்பு/வெள்ளை |
|---|---|---|
| UNSPECIFIED | | |
| FULL PAGE | 48,000.00 | 33,000.00 |
| HALF PAGE | 25,120.00 | 17,280.00 |
| QUARTER PAGE | 12,560.00 | 8,640.00 |
| BACK PAGE | | |
| *100% EXTRA* | | |
| FULL PAGE | 75,288.00 | - |
| HALF PAGE | 42,400.00 | - |
| QUARTER PAGE | 21,200.00 | - |
| STRIP | | |
| 8X6 | 12,720.00 | - |
| PAGE SPECIFICATION | | |
| 50% EXTRA | | |
| FULL PAGE | 60,288.00 | 49,500.00 |
| HALF PAGE | 33,760.00 | 25,920.00 |
| QUARTER PAGE | 16,880.00 | 12,960.00 |
| COLUMN. C.M RATE | 157.00 | 108.00 |


அரக்க மனதிலும் இரக்கம் புகுந்த திருநாளாம்
இத்தீபாவளித் திருநாளிலிருந்து எம்மவர் மத்தியிலும்
அன்பு சுரக்க வேண்டி, அனைவர்க்கும் தம்மினிய
தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது.

ராஜா கிறீம் ஹவுஸ்




* குளிர்ச்சியின் சிகரம் ராஜா
* அறுசுவையின் சின்னம் ராஜா
சுகாதார முறைப்படி, தரமான,
சுவை குன்றா தயாரிப்புக்களே
ராஜாவின்
இத்தனை கால சேவையின் முத்திரை!

★ கொளுத்தும் வெயிலிலும் உங்களைக் குளிர்ச்சியில் மூழ்கடிக்க
புத்தம் புதியவகைத் தயாரிப்புக்களுடன் வரவேற்கின்றது.

ராஜா கிறீம் ஹவுஸ்

36, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(J19004)

64, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர் ஒளி

நவம்பர் 18, 2001

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 074- 513112 - 5
E-mail: sudar@uthayan.com

# இடைக்கால நிர்வாகம்

டிசம்பர் 5 பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி வெற்றி பெற்று ஆட்சி அமைக்குமானால்—

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நடவடிக்கைகளின் ஓர் அம்சமாக வடக்கு கிழக்கிற்கு குறிப்பிட்ட அளவு காலத்துக்கு ஓர் இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்படும்.

இப்படி ஐ.தே.க மற்றும் ஐக்கிய தேசிய முன்னணி ஆகியவற்றின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க உறுதி அளித்திருக்கிறார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இந்த உறுதி மொழி சேர்க்கப்பட்டிருக்கிறது.

இது பலருக்கும் பலவிதமான சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

மத்திய அரசு இருக்க இடைக்கால நிர்வாகம் என்ற பெயரில் வடக்கு கிழக்கில் இன்னொரு ''அரசை'' ஏற்படுத்துவதா?

இது நாட்டுப் பிரிவினைக்கு வழிசமைத்த மாதிரி ஆகாதா? இது அரசாங்கத் தரப்பில் எழுப்பப்படும் கேள்வியும் வெளிக்காட்டப்படும் அச்சமும் ஆகும்.

ஒரு காலத்தில் ஜனாதிபதியுடன் வெட்டுப் பகை கொண்டு இருந்து விட்டு இன்று அவருக்கும் அரசுக்கும் நெருங்கிய நட்பு அமைப்பாக மாறிவிட்ட மக்கள் விடுதலை முன்னணி ரணிலிடம் ஒரு கேள்வியை எழுப்புகிறது.

இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளிடம் கொடுக்கப் போகிறீர்களா என்பதே ஜே.வி.பியின் கேள்வி.

இடைக்கால நிர்வாகத்தோடு புலிகளைச் சம்பந்தப்படுத்தினால் தென்னிலங்கை மக்கள் கிலி கொள்வார்கள் என்பது மக்கள் விடுதலை முன்னணிக்கு நன்றாகவே தெரியும்.

தவிரவும் வடக்கு கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகத்தை ஐக்கிய தேசிய முன்னணி புலிகளிடம் ஒப்படைக்கப் போகிறது என்றால் சிங்கள மக்கள் அதை வன்மையாக எதிர்ப்பார்கள் என்பதையும் மக்கள் விடுதலை முன்னணி நன்கு அறியும்.

அதனால் தான் சிங்கள மக்களின் வாக்குகள் ஐக்கிய தேசிய முன்னணிக்குக் கிடைக்காமல் செய்வதற்கு மக்கள் விடுதலை முன்னணி இந்த உத்தியைக் கையாளுகிறது.

ஐக்கிய தேசிய முன்னணிக்குப் பதிலாக பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சி அமைக்குமானால்தாம் அவர்களின் குடுமியைப் பிடித்துக் கொண்டு சவாரி விடலாம் என்பது மக்கள் விடுதலை முன்னணியினரின் கனவு.

வடக்கு கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகம் என்பது புதிய விஷயம் அல்ல. முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் பேசி 1987 இல் இலங்கை இந்திய ஒப்பந்தத்தைச் செய்து கொண்ட காலகட்டத்திலேயே வடக்கு கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

அப்போது தமிழீழ விடுதலைப்புலிகளின் நம்பிக்கைக்கு உரியவர்களையும் உள்ளடக்கியதாகவே இடைக்கால நிர் வாக சபையை அமைக்க ஏற்பாடு செய்யப் பட்டது. ஆயினும் அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான உள் பிரச்சினைகள் காரணமாக அந்தத் திட்டம் நிறைவேறவில்லை.

இது ரணில் விக்கிரமசிங்காவுக்கு நன்றாகவே தெரியும்.

அவர் வடக்கு கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகம் பற்றியே அறிவித்திருக்கிறார். அந்த நிர்வாகத்துக்கு சபை ஒன்றை அமைப்பது பற்றி அவர் ஏதும் சொல்லவில்லை. மாறாக இடைக்கால நிர்வாகம் அரசாங்க அதிபர்கள் பொறுப்பில் இருக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அந்த நிர்வாகம் எப்படி எவ்வளவு பயனளிக்கிறது என்பதைப் பார்த்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும், என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

ஆக இடைக்கால நிர்வாகத்தில் புலிகள் புகுத்தப்படுவார்கள் என்பது மக்கள் விடுதலை முன்னணியின் ஊகம் மட்டுமே. ரணில் அப்படி ஏதும் தெரிவிக்கவில்லை.

வடக்கு கிழக்கு அரசாங்க அமைச்சர்கள் இடைக்கால நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இருப்பார்கள் என்றால் அவர்களுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டிய அவசியம் ஏற்படும்.

இப்போது அவர்கள் அரச பணிப்புரைகளுக்கு அமைய மேற் கொள்ளும் நிர்வாகத்தை இடைக்கால நிர்வாக அமைப்பில் சுதந்திரமாக மேற்கொள்ளக் கூடியதாக இருக்கலாம். அதை விட வேறு என்ன? இதில் அஞ்சுவதற்கு என்ன இருக்கிறது.?

# தேர்தலில் தமிழர் வழங்கிய ஆணை எப்பொழுதாவது நிறைவேறியதா?

## பயங்கரவாத ஒழிப்பு என்ற பெயரில் இன அழிப்புக்கு முயற்சி

நான் அரசியல் வாதிகளைச் சொல்லவில்லை. அவர்கள் இன்று இரு துருவங்களாக நிற்பார்கள்; நாளை ஒரே குட்டையில் ஊறிக் கிடப்பார்கள்.

இலங்கை அரசியலில் சேர முடியாத, சேரமாட்டாத இரு துருவங்களாக நாடு சுதந்திரமடைந்த காலத்திலிருந்து வடக்கும் கிழக்கும் இலங்கையின் இதர பகுதிகளுமே இருந்துவருகின்றன.

இலங்கையின் ஒற்றையாட்சி அமைப்பின் கீழுள்ள நாடாளுமன்றத்துக்குப் பொதுத் தேர்தல் நடைபெற்று மக்கள் தீர்ப்புப்படி அதிக ஆசனங்களைப் பெற்ற அரசியல் கட்சி ஆட்சி பீடத்துக்குத் தெரிவு செய்யப்படுகிறது.

நாடு முழுவதிலுமிருந்து மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து நாடாளுமன்றத்துக்கு அனுப்புகிறார்கள். அரசியல் கட்சித் தலைவர்களும் கட்சிகளும் தங்கள் கொள்ளைகளையும் வேலைத் திட்டங்களையும் கொள்கைப் பிரகடனங்களாக, தேர்தல் விஞ்ஞாபனங்களாக வாக்காளர் முன் சமர்ப்பித்து மக்கள் ஆணையைக் கேட்டுப் பெறுகிறார்கள்.

### காற்றில் பறந்த சமவுரிமை வாக்குறுதி

1947— ஆம் ஆண்டில் இலங்கையின் முதலாவது நாடாளுமன்றத்துக்குப் பொதுத் தேர்தல் நடந்தது. 1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நான்காம் திகதி இலங்கை சுதந்திரம் பெற்றது. இவ்விழா கொழும்பில் சுதந்திர சதுக்க மண்டபத்தில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

முதலாவது நாடாளுமன்றத்துக்கு நடந்த பொதுத் தேர்தலில் டி.எஸ். சேனநாயக்கா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி நாடு முழுவதும் போட்டியிட்டது. நாட்டு மக்கள் அனைவருக்கும் சம உரிமை அளிக்கப்படுமென்று டி.எஸ். சேனநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் வாக்குறுதியளித்தார்.

இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களுக்கு சிங்கள மக்களுடன் சமபலப் பிரதிநித்துவம் வேண்டுமென்று அரசியல் சீர்திருத்தக் குழுவான சோல்பரி ஆணைக்குழு முன்வாதாடி வெற்றி பெறத் தவறிய ஜீ.ஜீ. பொன்னம்பலம் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியை உருவாக்கி வடக்கிலும் கிழக்கிலும் சம உரிமை சமபலப் பிரதிநிதித்துவம் என்ற கோரிக்கையை முன்வைத்துத் தேர்தலில் போட்டியிட்டார்.

வடக்கிலும் கிழக்கிலும் ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடித்து ஜீ.ஜீ.யின் தமிழ்க் காங்கிரஸ் பெரும்பான்மையான இடங்களைக் கைப்பற்றி நாடாளுமன்றம் சென்றது. நாடுமுழுவதும் பல இடங்களில் போட்டியிட்ட இடதுசாரிகளும் ஓரளவு இடங்களைப் பெற்றனர்.

இந்தியவம்சாவளித் தோட்டத் தொழிலாளர்கள் வாழும் மலையகத்தில் தொண்டமான், அஸீஸ் தலைமையிலான இலங்கை இந்திய காங்கிரஸுக்கும் கணிசமான ஆசனங்கள் தேர்தலில் கிடைத்தன.

### பண்டாவின் குத்துக்கரணம்

நாடாளுமன்றத்தின் முதல் கூட்டத்தில் வடக்கு கிழக்கு மலையகத் தமிழ்ப் பிரதிநிதிகளும் இடது சாரிகளும் கணிசமான எண்ணிக்கையில் இருந்ததைக் கவனித்த பிரதமர் டி.எஸ். ஓராண்டுக்குள்ளேயே மலையகத் தமிழரின் குடியுரிமை வாக்குரிமைகளைப் பறித்தார்.

இதனால் தமிழ் காங்கிரஸ் பிளவுபட்டது. தமிழ் காங்கிரஸிலிருந்து வெளியேறியவர்கள் எஸ். ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை உருவாக்கினர். இலங்கையில் சமஷ்டி அமைப்பை ஏற்படுத்தி சிங்களவரும் தமிழரும் தத்தம் பிரதேசங்களில் சுயநிர்ணய உரிமையுடன் வாழ வழி வகுக்க வேண்டுமென்பதே இக்கட்சியின் கொள்கை.

ஒகஸ்போர்டிலிருந்து எஸ். டபிள்யு ஆர். டி.பண்டாரநாயக்கா இலங்கைக்கு சமஷ்டி ஆட்சிமுறையே பொருத்தமானது என முன்பு கூறியிருந்ததை சமஷ்டிக் கட்சியினர் நினைவுபடுத்தினர்.

ஆனால் பண்டாரநாயக்காவே சமஷ்டியை பின்னர் பிரிவினை என்றார்.

ஆனாலும் 1960—ஆம் ஆண்டில் மார்ச் மாதத்திலும் ஜூலை மாதத்திலும் நாடாளுமன்றத்துக்கு நடந்த இரு பொதுத் தேர்தல்களிலும் சமஷ்டிக் கட்சி நாட்டைப் பிரிக்கத் திட்டம் தீட்டுவதாகவும் சதிசெய்வதாகவும் அப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குத் தலைமை தாங்கிய சிறிமா பண்டார நாயக்காவும் ஐ.தே.கவுக்கு தலைமை தாங்கிய டட்லி சேனநாயக்காவும் மாறி மாறிக் குற்றம் சாட்டினர்.

### தமிழர் வழங்கிய ஆணை

இலங்கையில் சமஷ்டி ஆட்சி அமைப்பு முறை வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று 1952ஆம் ஆண்டிலிருந்து 1970 ஆம் ஆண்டுவரை வடக்கு கிழக்கு மாகாண மக்கள் தமிழ் அரசுக் கட்சிக்கு ஆணை வழங்கினர்.

1977 ஆம் ஆண்டும் பொதுத் தேர்தலில் சமஷ்டிக் கோரிக்கையைக் கைவிட்டு ''இழந்த தமிழீழ அரசை மீண்டும் அமைக்க'' வடக்கு கிழக்கு மாகாண மக்களிடம் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஆணைபெற்று நாடாளுமன்றத்துக்குச் சென்றனர்.

தமிழீழம் என்ற மக்கள் ஆணைக்கு நாடாளுமன்றத்தில் குரல் கொடுக்க முடியாமல் பெரும்பான்மை ஜனநாயக மக்களின் ஆணையைப் பெற்ற பெரும்பான்மைச் சமூகத்தினர் தடுத்து விட்டனர்.

ஜனநாயகம் பற்றி என்னதான் பேசினாலும் இலங்கையின் ஒற்றை ஆட்சி முறையும் தேர்தல் முறையும் பெரும்பான்மை ஜனநாயக முறையும் இருக்கும்வரை தமிழ் மக்கள் தங்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கும். ஆணையை நிறைவேற்றுவதற்கு வழியில்லை.

மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமை வாக்குரிமைகளைப் பறிப்பதற்கு மக்களின் ஆணையை டி.எஸ் சேனநாயகா பெற்றிருக்கவில்லை.

ஆனாலும் பெரும்பான்மை ஜனநாயக முறையினால் மலையக மக்களின் உரிமைகளைப் பறித்தார்.

### எதுவுமே நிறைவேறவில்லை

1956ஆம் ஆண்டில் சிங்களத்தை மட்டும் ஆட்சி மொழியாக்குவதற்கு சிங்கள மக்களிடமிருந்து பண்டார நாயக்காவும் அவரது கூட்டணி கட்சியினரும் ஆணையைப் பெற்றனர். ஐக்கிய தேசியக் கட்சியினரும் கூட இதற்கான ஆணையைப் பெற்றனர்.

ஆனால் அதே தேர்தலில் வடக்கு கிழக்கு மக்கள் தமிழ் மொழிக்கு சிங்கள மொழியுடன் சம அந்தஸ்து வழங்க வேண்டுமென்றும் சமஷ்டி ஆட்சி அமைப்பை உருவாக்க வேண்டுமென்றும் தமிழ்க் கட்சிகளுக்கு ஆணை வழங்கினர்.

இந்த ஆணையை பெரும்பான்மை ஜனநாயகம் நிராகரித்தது.

தமிழ் மக்கள் தங்கள் பிரதிநிதிகளுக்கு பொதுத்தேர்தல்களில் வழங்கிய ஆணைகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. தமிழ்ப் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் கொண்டு வர முன்னறிவித்தல் கொடுக்கும் தனிநபர் பிரேரணைகள்கூடப் பெரும்பாலும் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

இலங்கையில் தமிழ் மக்களுக்கும் ஜனநாயக உரிமை இருக்கிறது என்று பிரசாரம் செய்யக் கூடியதாக மட்டுமே இங்கு தமிழர்களுக்கு ஜனநாயக உரிமைகள் இருக்கின்றன. பெரும்பான்மை ஜனநாயகம் தனது தேவைகளை நிறைவேற்றுவதற்கும் தமிழ் மக்கள் தமக்குள்ள ஜனநாயக உரிமைகளை பெரும்பான்மைக் கட்சிகளுக்குள் பயன்படுத்துவதற்கும் உதவுகின்றன.

இதுவரை தமிழ் மக்கள் தங்கள் பிரதிநிதிகளுக்கு பொதுத் தேர்தல்களில் வழங்கிய எந்த ஆணையும் நாடாளுமன்றத்தில் தமிழ் பிரதிநிதிகளால் நிறைவேற்றப்பட்டதில்லை.

இனியும் தமிழ் பிரதிநிதிகள் தமிழ் மக்கள் கொடுக்கும் ஆணைகளை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாது.

### புலிகளுக்கு எதிராக கனடாவும்

நான்கு தமிழ்க் கட்சிகள் கூட்டமைப்புடன் விடுதலைப் புலிகள் நாடாளுமன்றத்தில் அங்கம் பெறப் போகின்றனர் என்றும் நாட்டுக்கும் ஜனநாயகத்துக்கும் இதனால் பெரிய ஆபத்து ஏற்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி சந்திரிக் காவே தேர்தல் பிரசாரக் கூட்டங்களிலும் மற்றும் நிகழ்ச்சிகளிலும் கூறி வருகிறார்.

நாடாளுமன்றத்துக்கே ஆபத்து வந்து விட்டதாக ஆளும் கட்சியினர் பயமுறுத்தி வருகின்றனர்.

சில பத்திரிகைகளும் புலிகள் மறைமுகமாக நாடாளுமன்றத்துக்கு வரப் போகின்றனர் என்றும்—

புலிகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறிவருகின்றன.

அதிகாரப் பரவலாக்கல் பற்றிப் பேசும் ரணில் விக்கிரம சிங்கா கூட அதை விளக்கிச் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறார்.

கடந்த ஐம்பதாண்டுகளாகச் சிறிது சிறிதாக வளர்ந்து விட்ட பிரிவினை வாதப் பூச்சாண்டி இப்பொழுது பயங்கரவாதப் பூதமாகப் பெரிதாக தேர்தலுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

அமெரிக்கா பிரிட்டனுடன் இப்பொழுது கனடாவும் விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்ந்திருப்பது தனக்குக் கிடைத்த வெற்றி என்று ஆளும் கட்சியினர் கூறுகின்றனர்.

பயங்கரவாத ஒழிப்பு என்ற பெயரில் இன ஒழிப்பை வெற்றிகரமாகச் செயல்படுத்த பேரினவாதிகள் கங்கணம் கட்டி நிற்கின்றனர்.

இந்நிலையில் இந்தப் பொதுத் தேர்தலில் என்ன இனிவரும் பொதுத் தேர்தல்களிலும் இலங்கையின் பெருபான்மை ஜனநாயகமுறையிலும் ஒற்றையாட்சி அமைப்பிலும் தமிழ்ப் பிரதிநிதிகள் வெற்றி பெற்று என்ன பயன்?

ஆளும் கட்சிக்கு கைதூக்கி ஆதரவு கொடுத்து சில சலுகைகளைப் பெற்று ஜனநாயகத்தின் வெற்றி பற்றிப் பேசலாம்.

தமிழ் மக்களின் பாதுகாப்பையோ, அவர்கள் அச்சமின்றி சுதந்திரமாக நடமாடவோ இத்தமிழ்ப் பிரதிநிதிகள் என்ன செய்ய முடியும்?

எந்தப் பெரிய கட்சிக்கும் தனியாக ஆட்சி அமைக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லையானால் பேரம் பேசி உரிமை பெறப்போவதாக சில தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் முஸ்லிம் கட்சிகள் சிலவும் சொல்லி வருகின்றன.

இப்படிப் பேரம் பேசுவதற்காகவே சிகலஉறுமய, ஜே.வி.பி போன்ற கட்சிகள் காத்திருக்கின்றன.

1660 மார்ச் தேர்தலின் பின் டட்லி ஆட்சியைக் கவிழ்த்த பின் ஜூலை மாதத் தேர்தலில் இதே பேரம் பேசும் நிலைவராமல் சிறிமா தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் கொடுத்து சிங்கள மக்கள் வாக்களித்தனர்.

இதே நிலை மீண்டும் வரமாட்டாதென்பது என்ன நிச்சயம்.

இலங்கையின் ஒற்றையாட்சி அமைப்பு முறையில் தமிழ் மக்கள் தங்களுடைய ஜனநாயக உரிமைகளை நிலைநாட்ட முடியாது; வென்றெடுக்கவும் முடியாது.

வடக்கு கிழக்கு மலையக மக்கள் அளிக் கும் ஆணையை, இதரபகுதி மக்கள் பெரும் பான்மைச் சமூகப்பிரதிநிதிகளுக்கு வழங் கும் ஆணை பயனில்லாமல் செய்து விடும்.

இங்கு தமிழ் மக்களினதும் இதர தேசிய சிறுபான்மை இனத்தவரினதும் ஜனநாயக உரிமைகள் வெறும் கேலிக் கூத்தாகவே இருக்கின்றன.

வடக்கும் கிழக்கும் மலையகமும் எப்படி தென்னிலங்கையுடன் இணைந்து செயற்பட்டாலும் துருவங்கள் ஒன்றுபட முடியுமா?

— எஸ்.எம்.ஜி.

# பிரபாவே நேரடியாக திட்டங்களை வகுத்தார்

**ஈழப்போர் வரலாற்றில் முல்லைத்தீவு இராணுவ முகாமை புலிகள் தாக்கி நிர்மூலமாக்கியது குறிப்பிடத்தக்க ஒரு சம்பவம்.**

**1996 ஜூலை 18ஆம் திகதி அதிகாலை ஆரம்பித்த 'ஓயாத அலைகள்' அதிரடிப் பாய்ச்சல் இராணுவ நடவடிக்கையினால் முல்லைத்தீவு இராணுவ முகாம் தகர்த்து அழிக்கப்பட்டது.**

**முகாமைத் தாக்குவதற்கு பிரபாகரன் வகுத்த திட்டங்கள் எவை? தாக்குதல் தினம் படை முகாம் உயர் அதிகாரி கொழும்பு சென்றது எப்படி? படியுங்கள்.**

ஒரு யுத்தத்தில் எதிரியின் இராணுவ வசதிகள், வளங்கள், உடைமைகள் ஆகியவற்றோடு ஆட்பலமும் கணிசமாக அழிக்கப்படும்போது தான் அது ஒரு இராணுவ வெற்றி என்று கருதப்படலாம் என்பது போரியல் அறிஞர்கள் கூறும் அரிச்சுவடி.

ஆனால் யாழ்ப்பாணத்தை கைப்பற்றும் படையினரின் ''சூரியப் பிரகாசம்'' நடவடிக்கைகளின் போது இத்தகைய பேரிழப்புகள் ஏதுமின்றியே புலிகள் வன்னிப் பெருநிலப் பரப்புக்கு தமது தளத்தை — களத்தை — மாற்றிக் கொண்டார்கள்.

இந்த இராணுவத்துறை 'அரிச்சுவடி' புரியாத அப்போதைய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றொஹான் தளுவத்தை, யாழ். குடாநாட்டின் கணிசமான பகுதிகளைக் கைப்பற்றியதும்,'' ''ராய்ட்டர்'' செய்தி ஸ்தாபனத்துக்கு வழங்கிய பேட்டியில்—

''புலிகளால் பூநகரி மீது மேற்கொள்ளப்பட்ட 'தவளைப் பாய்ச்சல்' போன்ற பெரிய தாக்குதல்களை இனி மேற்கொள்ள முடியாது'' எனத் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார்.

அவரின் இராணுவ அறிவுக்குக் கிடைத்த பதில்தான் முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதல்!

### கனகச்சிதமாகத் திரட்டப்பட்ட தகவல்கள்

முல்லைத்தீவு முகாமை 'இலக்கு' வைத்தபோதே முகாமின் அமைப்பு, காவலரண்களின் நிலை, அங்குள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள், முகாமைத் தாக்குவதற்கு வசதியாக நிலை எடுக்கக் கூடிய இடங்கள், தொடர்ச்சியான விநியோகத்துக்குப் பாதுகாப்பான பாதைகள் போன்றவை புலிகளின் உளவுப் பிரிவினரால் கனகச்சிதமாகத் தி ;ட்டப்பட்டன என்று கூறப்பட்டது.

ஒரு முகாம் மீது தாக்குதலைத் தொடுப்பதற்கான உளவு நடவடிக்கையில் ஈடுபடும் உளவாளி ஒருவர் உயிருடனோ அல்லது சடலமாகவோ முகாம் பகுதியில் சிக்கிக் கொண்டால் அல்லது அவரது நடமாட்டம் குறித்து எதிரி அறிந்து கொண்டால் எதிரி உஷாராகி விடுவான். இதைக் கவனத்திற் கொண்டே உளவு நடவடிக்கைத் திட்டங்கள் வகுக்கப்படுவது வழக்கம்.

முல்லைத்தீவு முகாம் பற்றிய உளவு நடவடிக்கையின்போது விடுதலைப் புலிகள் இந்த விவகாரத்தில் முழுக் கவனமாக இருந்தனர். முல்லைத்தீவு முகாமைத் தாக்குவதற்காக அந்த முகாம் குறித்து உளவு பார்க்கப்படுகின்றது என் ;சிறிதளவு சந்தேகம் கூட படைகளுக்கு ஏற்படாதவாறு புலிகளின் உளவுப் பிரிவு செயற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இத்தகைய தாக்குதல்களின் வெற்றிக்கு உளவுப் பிரிவினரே அடித்தளம் இடுவார்கள். முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதலிலும் புலிகளின் உளவுப் பிரிவு தனது பணியை நூற்றுக்கு நூறு வீதம் திறம்பட ஆற்றியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

### பிரபாவே நேரடியாக திட்டங்களை வகுத்தார்

உளவுப் பிரிவு மூலம் தகவல்களைத் திரட்டி தாக்குதல் திட்டத்தை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனே நேரடியாக வகுத்தார்.

தாக்குதல் திட்டத்தில் பின்வரும் முக்கிய விடயங்கள் அடங்கியிருந்தன.


* திடீர்த் தாக்குதல் ஒன்றை நடத்தி முகாமைக் கைப்பற்றி அதனைப் பூரணகட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது.
* முகாம் மீது தாக்குதல் நடக்கும் சமயத்தில் முகாமிலிருக்கும் படைகளுக்கு வெளியிலிருந்து வரக் கூடிய உதவிகளைத் தடுக்கும் வகையில் கடலிலும், தரையிலும் 'கட் அவுட்' போட்டுச் செயற்படுவது.
* முகாமில் உள்ள ஆயுதங்கள், இராணுவத் தளவாடங்கள், இராணுவ வாகனங்கள், ஜெனரேட்டர் போன்ற உபயோகப் பொருள்கள் மற்றும் இராணுவத் தகவல்கள் அடங்கிய ஆவணங்கள் போன்றவற்றை இயன்றளவு சேதமின்றிக் கைப்பற்றி, வன்னிப் பெருநிலப் பரப்பிலுள்ள புலிகளின் பாதுகாப்பான தளங்களுக்குக் கொண்டு செல்வது.
* முகாமிலிருந்த படையிரைத் தேடி அழிப்பது; உயரதிகாரிகள் உட்பட கணிசமான தொகையினரை மட்டும் கைது செய்வது.
* முகாமை இயன்ற காலம் வரை கைப்பற்றித் தக்கவைப்பது. தொடர்ந்து தாக்குப் பிடிக்க முடியாமல் போனால் முகாமைக் கைவிட்டு வெளியேறும் போது முகாமை முற்றாகத் தகர்த்து விட்டுச் செல்வது.

— இவை தான் தலைவர் பிரபாகரன் வகுத்த திட்டங்களில் அடங்கியிருந்த முக்கிய அம்சங்கள்.

இந்தத் தாக்குதல், நடவடிக்கைக்கு 'ஓயாத அலைகள்' என்று பிரபாகரன் பெயர் சூட்டியிருந்தார். அந்தப் பெயர்ப் பொருத்தத்தை ஸ்ரீ லங்கா பாதுகாப்பு உயர் அதிகாரிகளே சரியானது எனப் பின்னர் ஒப்புக் கொண்டனர்.

### தளபதிகள் இல்லாத சமயம்

தாக்குதலுக்கு உள்ளான முல்லைத்தீவு தளத்தில்தான் ஸ்ரீலங்கா இராணுவத்தின் 215 ஆவது பிரிகேட் தலைமையகம் அமைந்திருந்தது. அத்துடன் ஏழாவது




விஜபா காலாட் படை அணியும், சிங்கப்படை அணியின் ஏழாவது பட்டாலியனும் அங்கு நிலை கொண்டிருந்தன.

முகாம் தாக்குதலுக்கு உள்ளான சமயம் பிரிகேட் கொமாண்டர் கேணல் லோறன்ஸ் பெர்னாண்டோவோ அல்லது உதவிக் கொமாண்டர் லெப்டினன்ட் கேணல் குணரட்னாவோ முகாமில் இருக்கவில்லை. அவர்கள் கொழும்பு சென்றிருந்தனர்.

**ஓயாத அலைகள்**
**வெளிவராத தகவல்கள்**
**5**

அடுத்த சிரேஷ்ட அதிகாரியான — ஏழாவது விஜபா காலாட்படை அணியின் கட்டளைத் தளபதியான — மேஜர் அலிபா என்பவரே அச்சமயம் முகாமுக்குப் பொறுப்பதிகாரியாக இருந்தார்.

முகாமின் தளபதியும், உதவித் தளபதியும் இல்லாத சமயம் பார்த்து — தளத்தை பாதுகாத்து, படைகளை ஒன்று திரட்டி, எதிர்த்து நின்று போராட ஒருங்கிணைப்புச் செய்வதற்கு உரிய அதிகாரிகள் இல்லாத வேளை பார்த்து — புலிகள் இத்தாக்குதலைத் தொடுத்தார்களா? அல்லது புலிகளின் அதிர்ஷ்டம் காரணமாக அவர்கள் தாக்குதல் தொடுத்த சமயம் முகாமின் தளபதியும், உதவித் தளபதியும் இருக்கவில்லையா?

விடை தெரியாத கேள்விகள் இவை.

### தளபதிகளை கொழும்புக்கு அழைத்தது யார்?

ஆனால் இந்த இரு அதிகாரிகளும் முகாம் தாக்கப்படுவதற்கு முதல் நாள்தான் முல்லைத்தீவிலிருந்து புறப்பட்டு கொழும்பு வந்திருந்தார்கள்.

அராலித்துறையில் லெப்டினன்ட் ஜெனரல் கொப்பேக்கடுவவும் மற்றும் மூத்த இராணுவ அதிகாரிகளும் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திவரும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணையாளர்கள் அணிக்கு சூரியகுமார் என்ற பெயருடைய ஒரு தமிழ் நபர் உதவி வருபவர் போல் செயற்பட்டு வருகின்றார் என்றும்—

உண்மையில் மறைமுகமாகப் புலிகளுக்கு இந்த நபர் உதவி வருகின்றார் என்றும்—

அவரே முல்லை முகாம் [illegible]பதியை அந்த முகாம் தாக்குவதற்கு முதல்நாள் அவசர அவசரமாகக் கொழும்புக்கு அழைப்பித்தார் என்றும்—

பிரதான எதிர்க்கட்சி ஒன்றின் எம்.பி. ஒருவர் பின்னர் பகிரங்கமாகக் குற்றஞ் சுமத்தினார்.

மேற்படி ஆணைக்குழு விசாரணையில் சாட்சியமளிப்பதற்கு அந்தத் திகதியில் (ஜூலை 18 ஆம் திகதி) முல்லைத் தீவு முகாம் தளபதி கட்டாயம் கொழும்பில் நிற்கவேண்டும் என இந்த நபர் வற்புறுத்தியதால், முகாம் தளபதி தமது முகாமைவிட்டு வெளியேறி கொழும்புக்கு அவசரமாக வரவேண்டி நேர்ந்தது என்றும்—

ஆனால் அத்தினத்திலோ அல்லது அடுத்து வந்த தினங்களிலோ ஆணைக்குழு முன் ஆஜராகும்படி அழைக்கப்படவோ அல்லது ஆஜராக வேண்டிய தேவையோ முல்லைத்தீவு முகாம் தளபதிக்கு ஏற்படவில்லை என்றும் அந்த எம்.பி. சுட்டிக் காட்டினார்.

முல்லைத் தீவு முகாமை வீழ்த்தும் புலிகளின் முயற்சிக்கு உதவும் வகையில் அந்த நபர், முகாம் தளபதியை முகாமிலிருந்து அப்புறப்படுத்தியிருக்கின்றார் என்பதே அந்த எம்.பியின் குற்றச்சாட்டு.

ஆனால் முகாம் தாக்கப்பட்ட போது அங்கு அதனைச் சமாளிப்பதற்குத் தளபதியோ, உதவித் தளபதியோ இல்லாமல் போனது புலிகளுக்கு வாய்ப்பாயிற்று என்பது மட்டும் உண்மை.

### அமாவாசை இருட்டில் தாக்குதல் ஆரம்பம்

1996 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18 ஆம் திகதி அதிகாலை ஒரு மணி.

முல்லைத்தீவு முகாம் பகுதியை அமாவாசைக்கால பின்னிரவு இருட்டு கரிய போர்வையால் போர்த்தியிருந்தது.

பிரபாகரனின் திட்டப்படி கரும் போர்வையைப் பயன்படுத்திக் கொண்டு இருளில் பல முனைகளில் இருந்தும் புலிகளின் அணிகள் முகாமை நோக்கி நகரத் தொடங்கின.

### நான்கு பக்கத்தாலும் புலிகள் தாக்குதல்

முகாமை நோக்கி நகர்ந்த புலிகளின் தாக்குதல் அணிகள் வடக்கு, தெற்கு பாதுகாப்பு அரண்களை ஊடறுத்துக் கொண்டு முகாமுக்குள் நுழைந்ததாகவே முதலில் தகவல்கள் வெளியாகின.

ஆனால் புலிகளின் தாக்குதல் அணிகள் கடல் வழியாகவும், தரைவழியாகவும் — முகாமைச் சூழ நான்கு பக்கங்களாலும் — முகாமை நெருங்கித் தாக்கியிருக்கின்றனர்.

முகாமின் கிழக்குப் புறமாக கடல் வழியாகவும்—

மேற்குப் புறமாக நந்திக் கடல் என்ற பரந்த களப்பு வழியாகவும்—

வடக்கு எல்லைப்புறத்தில் வட்டுவாகல் கிராம பக்கத்தாலும்—


தெற்குப் புறமாக பரந்த புதர்க் காடுகள் வழியாகவும்—

விடுதலைப்புலிகளின் தாக்குதல் அணிகள் அந்தக் காரிருள் வேளை, சந்தடி, சத்தம், ஆரவாரமின்றி தமது பாரிய நகர்வை மேற்கொண்டு, முகாம் பகுதியை நெருங்கி முகாமை முற்றுகையிட்டு, நிலை எடுத்துக் கொண்டன.

(தொடரும்)



# கம்பியூட்டர் ஆட்டம் சூதாட்டம் ஆகிலாமா?



கோலம் வரையும் கலையில் சிறந்து விளங்குகிறார்கள் நமது பெண்கள். அதிகாலையில் வீட்டு வாசலில் கோலம் வரைவது தமிழர் வழக்கம். மலேஷியாவின் கோலாலம்பூர் நகரில் தீபாவளி விற்பனைகளை கட்டிய போது தமது விற்பனை நிலையத்தில் வாடிக்கையாளர்களைக் கவர்ந்திழுக்க பிரமாண்டமான கோலம் வரைவதில் அழகியர் இருவர் மூழ்கியிருந்த காட்சி.

# கோலாலம்பூர் நகரில் கோலம் வரையும் கலை



கம்பியூட்டர் தொழில் நுட்பம் உலகில் பரந்து விரிந்து போய் இருக்கிறது. நிர்வாகப் பணிகளுக்கான அதன் பயன்பாடுகள் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன. அதே நேரத்தில் கம்பியூட்டரில் பொழுது போக்கு விளையாட்டுகளும் முக்கிய இடத்தைப் பெற்று விட்டன. ''கம்பியூட்டர் கேம்ஸ்'' எனப்படும் இந்த விளையாட்டில் சிறார்களுக்கு பெரும் விருப்பம் உண்டு. ஆனால் சில ஆசிய நாடுகளில் கம்பியூட்டர் ஆட்டம் சூதாட்டம் ஆகிவிட்டது என்று புகார் எழுந்துள்ளது. கம்பியூட்டர் முன் அமர்ந்திருக்கும் இந்த இளைஞனின் முகபாவனையே அதன் தாக்கத்தை விளக்குகிறது தானே.

ஜப்பானில் அண்மைக் காலமாகக் பிரப்பங்கூடைகளுக்கு நல்ல மதிப்பு ஏற்பட்டிருக்கிறது. நவ நாகரீக பொலித்தின் பைகள் மண்ணில் தேங்கியிருந்து சூழல் அனர்த்தங்களை ஏற்படுத்தி விடுகின்றன. எனவே பழையபடி பிரப்பங் கூடைகளைப் பயன்படுத்தத்தொடங்கியிருக்கிறார்கள் ஜப்பானிய மக்கள். பிரப்பங் கூடைகளை விற்பனை செய்வதில் அழகிகளும் துணை புரிகிறார்கள்.




# பிரப்பங் கூடைக்கு ஆதரவாகப் பெண்கள்

## மசாலா மிக்ஸ்

ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதலில் பிரிட்டிஷ் விமானங்களும் கலந்து கொண்டு ஆப்கான் மக்களை வாட்டியெடுக்கின்றன. அதே நேரத்தில் பிரிட்டிஷ் விமானங்கள்

# பிரிட்டிஷ் விமானங்கள் டுபாய் நகரில் சாகசம்

டுபாய் நகர ஆகாய வெளியில் பறந்து சாகசம் செய்யவும் பின் நிற்கவில்லை. டுபாய் நகரில் நடைபெற்ற விண்வெளிக் கண்காட்சியில் இது ஒரு சிறப்பான நிகழ்ச்சி யாகும். வானைத் தொட்டு நிற்கும் மசூதி ஒன்றின் மினாரா கோபுரப் பின்னணியில் 9 விமானங்கள் பறக்கும் காட்சி.



# ஒளிந்திருக்கும் முகம் எது?



நவம்பர் 04, சுடர்ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகர் ராஜ்கிரணுடையது. சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு.

1. கே. பாரநிதாசன், வவுனியா.
2. ரா. சேகர், கம்பளை.
3. எம். எம்.புர்ஹான், அவிசாவளை.

சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுகள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

கடந்த வாரம் (11.11.2001) மசாலாமிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரிய நடிகர் யார்? சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகள் பெயர், விவரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.

இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது? ''கௌரவ''மான கதாநாயகியாக நடித்து புகழ் பெற்ற புன்னகை நடிகை-வில்லியாக நடிக்கவும் தயார் என்று கூறியிருக்கிறார்.

இந்த முகத்திற்குரிய நடிகையைக் கண்டுபிடித்து அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர்ஒளி'
36/2, பிரெட்ரிக்கா வீதி
கொழும்பு — 06.




வாடிக்கையாளர், நண்பர்கள் அனைவருக்கும் இன்பம் பொங்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

தீபத் திருநாளில் பொன்னகை பூண்டு புன்னகை பூத்திட எந்நாளும், என்றென்றும் தங்கத் தரணியில் தனித்துவம் மிளிர்ந்திட இந்நாளே நாடுங்கள்

நியூ விதுஷா நகைமாடம்
191 — H-K, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 - 2903

நியூ லலிதா ஜுவலறி
(ராஜா தியேட்டர் முன்பாக)
170, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தீவக மக்களின் நலன் கருதி
நியூ விதுஷாயினி நகைமாடம்
சுருவில் வீதி, ஊர்காவற்றுறை.

ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில் செய்துகொடுப்பவர்கள்

# இளைய தலைமுறையின் பலவீனம் எதிர்காலத்தை இருளாக்கிவிடும்!

## பெற்றோரின் மனநிலையில் மாற்றம் அவசியம்

"என்ன? அரசியல் அவதாரங்களின் ஆரவாரம் சகிக்க முடியாமல் போய்க் கொண்டிருக்கு. ஆளையால் திட்டுறதும், பழி சுமத்துறதும், நடந்து கொண்டிருக்கு. வெட்டுக் குத்து, ஆள் கடத்தல், அடிதடி என்று சூப்பர் சினிமாப்படம் பார்த்த மாதிரி இருக்கு." விரக்தியை மறைத்தபடி சொன்னான் லோகன்.

"அரசியல் இவ்வளவு கேவலமாகப் போனதுக்கு இளைய தலைமுறை தறி கெடுவதும், ஒரு காரணம். இன்று இளைஞர்களாக இருப்பவர்கள் தான் நாளை தலைவர்களாக மாறுகின்றனர். அதனால் இன்றைய இளைய தலைமுறை மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் ஆரோக்கியமாக வளரா விட்டால், நாளை நாட்டை வழி நடத்தத் திறமையான தலைவர்கள் இல்லாமல் போய் விடக் கூடும். அப்படி ஒரு நிலையில் முரடர்களும் முட்டாள்களும், கொடூரமானவர்களும்தான் தலைவர்களாவார்கள்" என்றார் மாஸ்டர்.

"ஏன்? இப்பமட்டும் என்ன கிழிபடுகுது, அப்பிடியானதுகள் தானே நாட்டை வழிநடத்துதுகள்" குறுக்கிட்டாள் சின்னாச்சி.

"அவையின்ரை பாட்டை விடுங்கோ, எங்கடை பாடு இன்னும் சிக்கலாகி விடும். உரிமைகளுக்கான எங்கடை போராட்டத்தை தொடர வேண்டிய இளைய தலைமுறை பலவீனப்பட்டால் எமது இனத்தின் எதிர்காலமே இருண்டு விடும் என்கிற பயம் உருவாகி வருகிறது" விளக்கினார் மாஸ்டர்.

"சேர், ஏதோ முக்கியமான விஷயம் சொல்லுறியள். ஆனால் என்ன சொல்லுறியள் என்று தான் விளங்கேல்லை." கடித்தான் டானியல்.

டானியலின் 'கடி'யைக் கவனிக்காமல் தொடர்ந்தார் மாஸ்டர்.

"யுத்தம், இடப்பெயர்வு போன்றவற்றால் இன்றைய இளைய தலைமுறை பெருமளவில் மனரீதியான பாதிப்புகளுக்கு உள்ளாகி வருகிறது. அகதி முகாம்களிலும், வறுமைக் கோட்டுக்கு கீழும் உள்ள சிறுவர்களைத் தான் நாங்கள் கணக்கெடுக்கின்றோமே தவிர, வசதியாக வாழும் குடும்பங்களில் உள்ள சிறுவர்களுக்கு ஒரு பிரச்சினையும் இருக்காது என்பதே சமுதாயத்தின் எண்ணம்.

"ஆனால் இந்தத் தட்டில் இருக்கும் சிறுவர்களுக்குத்தான் பெரும்பாலும் உயர் பதவிக ளில் அமரும் வாய்ப்பிருக்கிறது. ஆகவே அவர்கள் மனோவியல் பாதிப்புகளுடன் வளர்ந்து உயர்பதவிகளில் அமரும் போது, அவர்களின் குறைபாடுகள், சமுதாயத்தில் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதை நாம் உணரவேண்டும்" சொல்லி முடித்து மூச்சு வாங்கினார் மாஸ்டர்.

"அதெப்படி மாஸ்டர், முகாமிலையும், இடம்பெயர்ந்தும் இருக்கிற பிள்ளைகள் சத்தான சாப்பாடில்லாமலும், மன ரீதியாகத் தாக்கமடைந்தும் இருக்க வாய்ப்புண்டு. ஆனால் அதிகாரிகள், அலுவலர்கள், வர்த்தகர்கள் என்று வசதியான பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு என்ன குறை இருக்கப் போகுது? அவையைப் பற்றி ஏன் கவலைப்பட வேணும்" கேள்வி எழுப்பினான் லோகன்.

அதுவரை அமைதியாக இருந்த விநாசியர் தொண்டையைச் செருமிக் கொண்டு ஆரம்பித்தார்,...

"அங்கு தான் தம்பி, உம்மைப் போல கனபேர் பிழையாக நினைக்கினம்.

வசதியில்லாத குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு பெரிய எதிர்ப்புகள் இருக்கா. ஆகவே ஏமாற்றங்களும் அவர்களுக்கு குறைவு. அதே போல் சில பல தவறுகள் செய்ய நேர்ந்தாலும், வசதியற்ற குடும்பங்களில் அவற்றைப் பெரிதுபடுத்தவோ, அதனால் அந்தச் சிறுவர்களுக்கு மனரீதியான பாதிப்புகள் ஏற்படவோ, வாய்ப்புகள் குறைவு. ஊட்டமின்மை அல்லது அச்சம் போன்றவற்றாலேயே வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள பிள்ளைகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.



### தேரடி அரட்டை

"ஆனால் வசதியான குடும்பங்களில் அப்படியில்லை. வசதியான பெற்றோர் தங்கள் அந்தஸ்தை, கௌரவத்தை உயர்த்த எண்ணி, பெருமளவு எதிர்பார்ப்புகளை தங்கள் பிள்ளைகள் மீது திணித்து விடுகிறார்கள். இந்த நிலையில் வெளிச்சூழலில் சிறுவர்களுக்கு ஏற்படும் வெறுக்கத்தக்க அனுபவங்களால் உருவாகும் அழுத்தங்களும் சேர்ந்து கொள்ள அவர்கள் மனோவியல் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டவர்களாகவே வளர்கிறார்கள்.

"ஆனால் அவர்களது மனப் பாதிப்பை பெற்றோர் உணராது இருந்து விடுவதால், பெற்றவர்களின் கனவுகள் தகர்வதுடன், பிள்ளைகளின் எதிர்காலமும் பாழாகி விடுகிறது. ஆகவே இருப்பவர் இல்லாதவர் என்ற வேறுபாடு இல்லாது, எல்லாப் பெற்றோருமே, தத்தமது குழந்தைகளுக்கு ஏற்படும் மனரீதியான பாதிப்புகளை உதாசீனப்படுத்தாது, அக்கறையுடன் கவனிப்பது அவசியம்." நீண்ட உரையின் பின்னர் நிறுத்தினார் விநாசியர்.

"ஊட்டமில்லை யென்றால் உடம் பைப் பார்க்கத் தெரியும். மனப் பிரச்சினை இருக்கா இல்லையா என்பதை எப்படிக் கண்டுபிடிக்கிறது?" யோசனையுடன் கேட்டான் டானியல்.

"அதுக்கும் ஒரு வழி இருக்கு. ஒரு குழந்தையோ சிறுவனோ அல்லது சிறுமியோ தனது வழமையான பழக்க வழக்கங்களை நடைமுறைகளை மாற்றத் தொடங்கினால், – அதுவரை விருப்பமாக நேசித்த பொருளை அல்லது ஆட்களைப் புறக்கணிக்கத் தொடங்கினால், பெற்றோர் அவர்களில் கவனம் எடுக்க வேண்டும்.

"இவற்றால் மனப்பிரச்சினை அவர்களுக்கு இருப்பதாக அறுதியிட்டுக் கூற முடியாது. ஆனாலும் மனயியல் பாதிப்பு ஏற்படக் கூடிய சாத்தியம் உண்டு. ஆகவே தமது பிள்ளைகள் எதிர்காலத்தில் உயர்ந்த நிலையில் இருக்க வேண்டும் என்று விரும்பும் பெற்றோர், தமது பிள்ளைகள் தனிமையை நாடினால்,? வழக்கமான நடைமுறைகளை திடீரென்று மாற்றினால் கட்டாயம் கரிசனை எடுக்கவேண்டும்" ஆசிரிய அக்கறையை வெளிப்படுத்தினார் மாஸ்டர்.

"சரி, மாஸ்டர் அப்படி இருந்தால் என்ன செய்யிறது என்றும் சொல்லுங் கோவன்" கேட்டான் டானியல்.

"இந்த இடத்திலைதான் எங்கடை பெற்றோர்களின் மனநிலை மாறி நல்லதொரு மனப்பான்மை வரவேண்டும். எங்கடை ஆட்கள் வெள்ளைக்காரன் லெவலிலை நடிப்பினம். ஆனால் அவனின்ரை நல்ல மனப்பான்மையைப் பின்பற்ற மாட்டினம். அப்படிப் பின்பற்றத் தொடங்கினால் தான் நல்லகாலம் பிறக்கும்" சுற்றி வளைத்தார் விநாசியர்.

"இளநீர்க் கோம்பைக்குள்ளை கையை விட்ட குரங்கு மாதிரி, உந்த ஆள் விளங்காமல் கதைக்கிறதை விடாது போலயிருக்கு" பொய்க் கோபத்தைக் குரலில் காட்டினாள் சின்னாச்சி.

சின்னாச்சியின் பொய்க் கோபத்தைக் கண்டு சிரித்தபடியே தொடர்ந்தார் விநாசியர்.

"வெளிநாடுகளிலை மனயியல் பிரச்சினை என்பது கேலிக்கோ, அவமானத்துக்கோ உரியது அல்ல. "விசர்" என்பதற்கும் "மனப்பிரச்சினை" என்பதற்கும் முற்றிலுமாக வேறுபாடு இருக்கு. ஆகவே மனரீதியான பிரச்சினைகளுக்கு சிகிச்சை பெறுவது வெட்கப்பட வேண்டிய ஒன்றல்ல என்ற வெள்ளைக் காரனின் மனப்பாங்கு எங்கடை ஆட்களுக்கு வந்தால், நாளைய தமிழினம் நல்லாய் இருக்கும்"

"சரியண்ணை, வெளிநாடுகளிலை மனயியல் மருத்துவர்கள், ஆலோசகர்கள் நிறையப் பேர் இருக்கினம். இங்கே அப்படியே?' கேட்டான் லோகன்.

"இங்கேயும், அரசு மருத்துவமனைகளில் மனநல சிகிச்சை வழங்கப்படுகிறது, அவற்றைத் தவிர சமூகநல அமைப்புகளும் மனநல ஆலோசனைகளை மேற்கொள்கின்றன. இதில் சிறப்பு என்ன என்றால், சிகிச்சைக்காகச் செல்லும் சிறுவர் பற்றியோ, அவர்களது பெற்றோர், குடும்பச் சூழ்நிலை பற்றியோ படு இரகசியமாகவே வைக்கப்படும்.

"ஆகவே எவரும் துணிந்து சென்று மனநல சிகிச்சை பெறலாம். இளைய தலை முறையினருக்கு ஏற்படும் மனப் பிரச்சினைகளை நீக்கி, ஆரோக்கியமான சிந்தனைகளுடன் அவர்களை வளர்க்கும் பெற்றோர்கள், தமது பிள்ளைகளுக்கு மட்டுமல்ல, சமுதாயத்துக்கும் பெரும் நன்மை செய்தவர்களாவார்கள்"

கூறிவிட்டு எழுந்தார் விநாசியர்.

தேரடி கலைந்தது

—ஏகலைவன்

# திருமலையில் இரு ஆசனங்களை பெறும் முயற்சியில் கூட்டமைப்பு

## ஈ.பி.டி.பியினால் வாக்குகள் சிதறுண்டு போகுமா?

கடந்த மாதம் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதும் திருகோணமலையில் தேர்தல் திருவிழாவுக்கான பிரசாரத் தேர் உருள ஆரம்பித்துவிட்டது.

போட்டியிடும் சகல கட்சிகளும் பிரசாரத்தில் ஈடுபடத் தொடங்கியுள்ளன. ஈ.பி.டி.பி இன்னும் முழுவேகத்தில் பிரசாரத்தில் ஈடுபடவில்லை. ஆனால் நான்கு கட்சிகள் அங்கம் வகிக்கும் தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பு இராணுவக் கட்டுப்பாடு உள்ள பகுதிகளையும் தாண்டிப் பிரசாரத்தில் ஈடுபட்டிருப்பதைக் காண முடிகின்றது.

'உதய சூரியன்' சின்னத்தில் போட்டியிடும் தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் இரா. சம்பந்தன்.

அவர் பிரசாரத்தில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்.

சென்ற தடவை திருகோணமலையில் இருந்து ஒரு தமிழராவது தெரிவு செய்யப்படவில்லை. இம்முறை அப்படியொரு நிலைமை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் பல தரப்பினரும் அக்கறை செலுத்தி வருகின்றனர். நான்கு கட்சிகள் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதன் நோக்கமும் இது தான். திருகோணமலையில் தமிழர் வாக்குகள் சிதறுண்டு போகாவிடில் இரு தமிழர்கள் தெரிவாக வாய்ப்பு இருந்து வருகிறது.

சில வாரங்களுக்கு முன்பு எல்லாளன் படை என்ற பெயரில் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரம்; இம் மாதம் 15 ஆம் திகதி குளக்கோட்டன் படை என்ற பெயரில் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரம். தமிழ் வாக்காளர்களில் பலரும் வெளியிட்டுக் கொண்டிருகின்ற கருத்துக்கள், தமிழ் கட்சிகள் கூட்டமைப்பின் சங்கமம் இவை அனைத்தையும் உற்று நோக்கும் போது தமிழர் பிரதிநிதித்துவம் இழக்கப்படக் கூடாது என்பதில் தமிழ் தரப்பினர் மிகுந்த அக்கறையுடன் இருக்கின்றனர் என்பதை உணரக் கூடியதாக இருக்கின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலை, மூதூர், சேருவில என்று மூன்று தேர்தல் தொகுதிகள் உள்ளன. ஒரு போனஸ் ஆசனத்துடன் நான்கு ஆசனங்கள் பெற வாய்ப்பிருக்கின்றது.

ஆனால் மிகவும் நெருக்கடியான போட்டி நிலவுவதால் முடிவு எவ்வாறு இருக்கும் என்பதுதான் இன்றைய கேள்வி?

திருமலையில் ஐ.தே.கட்சியின் முதன்மை வேட்பாளர் சின்ன மஹ்றூப் மற்றும் நவரெட்னராஜா வரதன், கிருஷ்ணகுமார், அணில் சாந்த, ரஞ்சினி சேனாசிங்க, தபீர் தௌபீக், தௌபீக் ஆகியோர் ஏனைய வேட்பாளர்கள். கடைசி இருவரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்தவர்கள்.

வேட்பாளர்களில் இருவர் மக்கள் மத்தியில் ஓரளவு செல்வாக்குப் பெற்றவர்கள். தமிழர்களின் வாக்குகளையும் பெற்று தற்போது வீசும் ஐ.தே.க ஆதரவு அலையையும் பயன்படுத்தி தனது பிரசார வேகத்தை அது முடுக்கி விட்டுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் இம்முறை ஒரு தமிழரும் போட்டியிடவில்லை என்றாலும் பொ.ஐ.முன்னணியில் போட்டியிடும் நஜீப் ஏ.மஜீத், ஹசன் மௌலானா ஆகிய இரு முஸ்லிம்களும் தமிழர் மத்தியில் ஓரளவு பிரபல்யமானவர்கள்.

ஜே.வி.பி.யை பொறுத்த வரையில் தமிழர் வாக்குகளில் பாதிப்பு ஏற்படாது. ஆனால் பொதுஜன ஐக்கிய முன்னணி வாக்குகளே பிரியும்.

ஈ.பி.டி.பி தனது முதன்மை வேட்பாளராக த. புஷ்பராசாவை நிறுத்தி உள்ளது.

கடந்த காலங்களில் தான் செய்த பணிகளை மனதில் கொண்டு பொது மக்களின் ஆதரவை நம்பி ஈ.பி.டி.பி தேர்தல் களத்தில் குதித்துள்ளது.

ஈ.பி.டி.பி அமைப்பும் போட்டியிடுவதால் தமிழர் வாக்குகள் சிதறுண்டு போகப் போகின்றன என்கின்றனர் ஒரு சாரார்.

தமிழ் மக்களுக்கு உதவி செய்வது என்பது வேறு நாடாளுமன்றம் செல்பவர் தமிழனுக்காகத் துணிந்து குரல் கொடுக்க வேண்டும். தமிழருக்கு எதிரான சட்டங்களுக்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் கை உயர்த்துபவர்கள் எமக்குத் தேவை என்கின்றனர் இன்னொரு சாரார்.

மொத்தத்தில் நான்கு கட்சிகள் கூட்டமைப்பின் தேர்தல் பிரவேசம் திருமலையில் ஒரு புதிய திருப்பம் தான்.

எஸ்.எஸ்.ஆர்.



# ஜெயலலிதாவுக்கு எதிரான 21 ஊழல் வழக்குகள் வாபஸ்!

## தமிழக அரசின் தீர்மானம் நெருக்கடியை ஏற்படுத்துமா?

ஊழல் வழக்குகளில் குற்றவாளியாகக் காணப்பட்டு அதன் மூலம் சிறைத் தண்டனை பெற்றவர் ஜெயலலிதா. அந்தத் தீர்ப்புகளை எதிர்த்து அவர் அப்பீல் செய்தார். இருந்த போதிலும் அவர் தேர்தலில் போட்டியிடும் தகுதியை இழந்தார்.

அவ்விதம் தகுதி இழந்தவர் வேறொரு நபராக இருந்திருந்தால் சமூகத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பார். ஆனால் ஜெயலலிதாவோ தமிழக முதலமைச்சராகவே வந்தார்.

முன்னாள் நடிகை என்ற ஒரே கவர்ச்சிப் பின்னணியைத் தனது பக்க பலமாகக் கொண்டு ஜெயலலிதா தமிழக அரசியலில் வரலாறு படைத்திருக்கிறார். ஆயினும் அந்த வரலாறு ஒரு வீர வரலாறு என்றோ தமிழகத்திற்கு பெருமை சேர்க்கும் வரலாறு என்றோ கூற முடியாதிருக்கிறது.

தமிழக மக்களில் ஒரு பிரிவினர் தன் மீது கொண்டுள்ள பற்று, பாசம் ஆகியவற்றை ஜெயலலிதா தவறான முறையில் பயன்படுத்தி தனக்குப் பெருமை சேர்த்தார். ஆனால் தனது பங்களிப்பை விரும்பிய அந்த மக்களுக்கு பெருமையை அவர் தேடிக் கொடுத்தாரா என்பது தெரியவில்லை.

தமிழகத்தை ஆட்சி செய்த எந்த முதலமைச்சர்களும் செய்திராத அளவுக்கு ஊழல்களை ஜெயலலிதா செய்திருக்கிறார் என்பது அவர் மீதுள்ள முக்கிய குற்றச்சாட்டு. அத்துடன் அவர் மீது எண்ணற்ற ஊழல் புகார்கள் செய்யப்பட்டன. சில ஊழல் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டார்.

மிகவும் கேவலமான இடத்துக்குத் தள்ளப்பட்ட அரசியல் வாதி என்ற அகௌரவம் அவரைத் தேடி வந்தது. இருப்பினும் ஜெயலலிதாவை குப்பையில் வீசி எறிந்து விட முடியவில்லை.

தமிழக முதலமைச்சர் என்ற பதவி ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்டது. சட்ட விரோதம் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதனால் அவரிடமிருந்து முதலமைச்சர் பதவி பறிக்கப்பட்டது. சட்டத்தினால் செய்ய முடிந்தது அவ்வளவுதான்.

ஆனால் அதே ஜெயலலிதா தனது நம்பிக்கைக்குரிய ஒருவரை முதலமைச்சராக நியமித்து ''ரிமோட் கொண்ட்ரோல்'' மூலம் ஆட்சி நிர்வாகம் நடத்துவதை எந்த சக்தியாலும் தடுக்க முடியல்லை.

ஜெயலலிதாவுக்கு முதலமைச்சர் நியமனத்தை வழங்கிய முன்னாள் தமிழக ஆளுநர் பாத்திமா பீபி அவருக்கு ஆறுமாதக் கெடு விதித்திருந்தார். அந்தக் கெடு தற்போதுதான், அதாவது நவம்பர் 13 ஆம் திகதி முடிவடைந்திருக்கிறது. ஆனால் அதற்குள் பீபியும் ஜெயாவும் மாற்றப்பட்டு விட்டார்கள்.



அந்த ஆறு மாதக் கெடுவைப் பூர்த்தி செய்து கொடுக்க முடியாமல் மூலையில் ஒதுங்கி விட்டார் ஜெயலலிதா. ஆயினும் அவரை மக்கள் ஒதுக்கித் தள்ளத் தயாராக இல்லை. எனவே அந்த மக்கள் சக்தியை பக்கபலமாகக் கொண்டு தனது சகல தடைக் கற்களையும் விலக்கிக் கொள்ள முனைந்திருக் கிறார் ஜெயலலிதா.

ஜெயலலிதாவுக்கு மூன்று வருட காலச் சிறைத் தண்டனைகளை வழங்கிய வழக்குகள் அப்பீல் விசாரணைகளில் இருக்கின்றன. அப்பீல் விசாரணையில் தனது பக்கம் வெற்றியைத் தேடிக்கொள்ள அவர் முனைந்திருக்கிறார்.

அதே நேரத்தில் ஜெயலலிதா மீது தொடரப்பட்டு விசாரணைகள் முடியாத நிலையில் இருக்கும் வழக்குகளை தமிழகத்தின் ''பொம்மை'' அரசாங்கம் குப்பைத் தொட்டியில் வீசுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

ஜெயலலிதா மீதான ரூ.100 கோடி கிரனைட் ஊழல் வழக்கில் குற்றப்பத்திரிகை தயாரிப்புப் பணி நிறுத்தப்பட்டது. இந்த வழக்கு உட்பட முதல் தகவல் அறிக்கை நிலையில் உள்ள 22 வழக்குகளை கைவிட முடிவு செய்துள்ளனர்.

1991 முதல் 96 வரையிலான அ.தி.மு.க ஆட்சியில் நடந்த ஊழல்களை விசாரிப்பதற்காக தி.மு.க ஆட்சியில் 3 தனி நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன. இவற்றில் மொத்தமாக 47 வழக்குகள் தொடரப்பட்டன. அவற்றில் 17 வழக்குகளில் தீர்ப்பு வந்து விட்டது. தற்போது 8 வழக்குகளில் விசாரணை நடந்து வருகிறது. மீதி 22 வழக்குகள் முதல்தகவல் அறிக்கை நிலையிலேயே தொடர்ந்து உள்ளன.

முதலாவது தனி நீதிமன்றத்தில் ஜெயலலிதா மீதான ரூ.6,665 கோடி சொத்துகுவிப்பு ஊழல் வழக்கு ரூ.2,829 கோடி ஸ்பிக் பங்கு ஊழல் வழக்கு, முன்னாள் ஐ.பி.எஸ் அதிகாரிகள் அரிஹரன், வீரராகவன் ஆகியோர் மீதான தீயணைப்பு, கருவி ஊழல் வழக்கு ஆகியனவும் உள்ளன.

இரண்டாவது தனி நீதிமன்றத்தில் ஜெயலலிதா, கண்ணப்பன் மீதான நிலக்கரி ஊழல் வழக்கு, முன்னாள் தலைமை செயலாளர் அரிபாஸ்கர் மீதான சொத்துக்குவிப்பு வழக்கு ஆகியவையும்.

மூன்றாவது தனி நீதிமன்றத்தில் முன்னாள் மந்திரி இந்திரகுமாரி மீதான இலவச வேட்டி சேலை, இலவச செருப்பு, ஊழல் வழக்குகள் ஆர்.ஆர். இண்டஸ்ட்ரீஸ் மீதான டான்சி ஊழல் வழக்கு ஆகியன தற்போது நடந்து வருகின்றன.

ஜெயலலிதா மீதான நிலக்கரி ஊழல் வழக்கில் இருதரப்பு சாட்சி விசாரணை முடிந்து இறுதிக் கட்ட வாதத்துக்காக விசாரணை தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

ஜெயலலிதா மீதான ஸ்பிக் ஊழல் வழக்கு விசாரணை ஆரம்பக் கட்டத்திலேயே உள்ளது. மிக அதிகமான சாட்சிகளைக் கொண்ட சொத்து குவிப்பு வழக்கு எப்போது முடியும் என்று யாருக்கும் தெரியாத நிலையில் உள்ளது.

இந்த நிலையில் கடந்த ஜூன் மாதம் முதல் மேலும் ஒரு வருடத்துக்கு தனி நீதிமன்றங்களின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது. அது முடிவதற்குள் நிலுவை யில் உள்ள 8 வழக்குகளும் முடியுமா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

முதல் தகவல் அறிக்கை நிலையில் உள்ள 22 வழக்குகளில் ஜெயலலிதா முன்னாள் மந்திரி கரூர் சின்னசாமி ஐ.ஏ.எஸ் அதிகாரி தியாணேசுவரன் ஆகியோர் மீதான ரூ.100 கோடி கிரனைட் ஊழல் வழக்கு முக்கியமானது.

இந்த ஆண்டு தொடக்கத்தில் இந்த வழக்கில் குற்றப்பத்திரிகை வேகமாக தயாரிக்கப்பட்டு வந்தது. எந்த நேரத்திலும் குற்றப்பத்திரிகையை பொலிஸார் தாக்கல் செய்வார்கள் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் ஆட்சி மாறியதும் காட்சி மாறியது. குற்றப்பத்திரிகை தயாரிக்கும் பணி கிடப்பில் போடப்பட்டது. இப்போது இந்த வழக்கை வாபஸ் பெற முடிவு செய்யப்பட்டு இருப்பதாகத் தெரிகிறது.

அதேபோல ஜெயலலிதா மீதான ரூ.2 கோடி மீனா விளம்பரம் சம்பந்தப்பட்ட வழக்கு முன்னாள் மந்திரிகள் செங்கோட்டையன், செல்வகணபதி, கு.ப.கிருஷ்ணன்,முன்னாள் எம்.எல்.ஏ. தவசி உட்பட பலர் மீதான சொத்து குவிப்பு உள்ளிட்ட 21 வழக்குகளும் கைவிடப்படும்.

இந்த வழக்குகளை எல்லாம் வாபஸ் பெறுவது பற்றி சமீபத்தில் முதல்வர் பன்னீர்செல்வம் தலைமையில் நடந்த அமைச்சரவை கூட்டத்திலும் விவாதித்து முடிவு எடுக்கப்பட்டதாக தெரிகிறது.

விரைவில் பொலிஸாரே இந்த வழக்குகளில் போதுமான ஆதாரங்கள் இல்லை என்று நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து வழக்குகளை வாபஸ் பெறுவார்கள் என்றும் கூறப்படுகிறது.

தனிநீதிமன்றங்களின் பதவிக்காலம் முடிந்ததும் மீண்டும் பதவிக்காலம் நீடிக்கப்படமாட்டாது. தனி நீதிமன்றங்களை மூடிவிட்டு ஏற்கனவே உள்ள நீதிமன்றங்களுக்கு இந்த வழக்குகள் மாற்றப்படும் என்றும் கூறப்படுகிறது. நிதிப்பற்றாக் குறையை காரணம் காட்டி இந்த முடிவு எடுக்கப்படும் என்று தெரிகிறது.

ஜெயலலிதாவின் திட்டப்படி அவர் மீதான வழக்குகள் வாபஸ் பெறப்பட்டால் அவருக்கு ஏற்படக்கூடிய நன்மை என்ன என்ற கேள்வி எழுகிறது. ஏற்கனவே விசாரிக்கப்பட்ட வ்ழக்குகளின் தீர்ப்பினால் ஜெயலலிதா தண்டிக்கப்பட்டிருக்கிறார். எனவே அந்த வழக்குகளின் அப்பீல் விசாரணைகளில் ஏதாவது சாதகமான தீர்ப்பு கிடைத்தால் தான் ஜெயலலிதாவின் திட்டம் பலிக்கும்.

மாறாக அவர் மீது சிறைத்தண்டனையை உயர் நீதி மன்றம் அங்கீகரித்து விட்டால் என்ன நடக்கும்? இந்தக் கேள்வி தான் தமிழகத்தில் இன்று விஸ்வரூபம் பெற்றிருக்கிறது.

– கதாசி

# யாழ் எரிபொருள் தட்டுப்பாடு மக்கள் மத்தியில் ஐயப்பாடு

குடாநாட்டில் மின் விநியோகம் சீர்குலைந்திருக்கிறது.

ஏற்கனவே அமுல் செய்யப்பட்டு வந்த முன்னிரவு நேர மின் வெட்டுக்கு மேலதிகமாக பகலில் ஏழு மணித்தியால மின்வெட்டும் நள்ளிரவுக்குப் பின் ஐந்து மணிநேர மின்வெட்டும் அமுல் செய்யப்படுகிறது. இந்த நேரம் தவிர மின் கிடைக்கின்ற ஏனைய சமயங்களிலும் அது உச்சப் பாவனைக்குத் தாக்குப் பிடிக்கும் வலு இல்லாததால் மின் அடிக்கடி துண்டிக்கப்பட்டுப் போகிறது.

இந்த நிலைமையால் மின்சேவை முற்றாகச் சீர்குலைந்து போயிருக்கிறது எனச் சொல்லலாம். 'துன்கிந்த'என்கின்ற எண்ணெய்க் கப்பல் தாக்கி அழிக்கப்பட்டதால் குடாநாட்டுக்கு எண்ணெய் ஏற்றிவரும் கப்பல்களின் பயண ஒழுங்கு குழம்பிப் போய்விட்டது. அடுத்த கப்பல் எப்போது வரும் என்பது தெரியாததால் கையிருப்பில் உள்ள எரிபொருளைச் சிக்கனமாகப் பயன்படுத்தி மின்சேவை முற்றாகச் சீர்குலைவதைத் தடுக்கவே மின்வெட்டை புதிதாக அமுல் செய்கின்றோம். இப்படிக் காரணம் கூறியிருக்கிறது மின்சார சபை.

குடாநாடு எங்கும் எரிபொருள் நிலையங்களில் மக்கள் முண்டியடித்தபோதும் மண்ணெண்ணெய் மற்றும் வாகனங்களுக்கான எரிபொருள்களைப் பெறமுடியவில்லை. அதேநேரம் வெளிச்சந்தையில் யானை விலைக்கு அவற்றைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

குடாநாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் எரிபொருள் தட்டுப்பாட்டுக்குப் பின்னணியில் இராணுவத் தரப்பினர் இருப்பது வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது.

'துன்கிந்த' கப்பல் தாக்கப்பட்ட கையோடு பலாலி படைத் தலைமையகத்தில் இருந்து விடுக்கப்பட்ட ஓர் அறிக்கையில் ''புலிகளின் இந்த நடவடிக்கையால் பொதுமக்களுக்கான மின் விநியோகமும் எரிபொருள் விநியோகமும் அடுத்துவரும் நாட்களில் சீர்குலைந்துபோகும்'' என்றவாறு தெரிவிக்கப்பட் டிருந்தது. ஆனால் ஒரு கப்பல், அதுவும் அதில் ஏற்றிவரப்பட்ட எரிபொருள் பொதுமக்களுக்குரியதா என்பது உறுதி செய்யப்படாத நிலையில் – தாக்கப்பட்டதன் மூலம் உடனடியாக எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை.

அப்படியிருக்க–

குடாநாடெங்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள்களை பவுஸர் மூலம் வழங்குவது தடைப்பட்டது. ஜெனரேட்டர்களை இயக்கும் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு வரலாம் என்று எதிர்பார்த்து மின்வெட்டை அமுலுக்குக் கொண்டு வந்தது மின்சார சபை.

பொதுவாக எரிபொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் வேளைகளில் எல்லாம் காங்கேசன்துறையில் போதியளவு கையிருப்பில் இருப்பதாகக் கூறும் பெற்றோலியக் கூட்டுத் தாபன அதிகாரிகள் தட்டுப்பாட்டுக்குரிய காரணத்தையோ அல்லது கையிருப்பில் இருக்கும் எரிபொருள்களின் மொத்த அளவு விவரங்களையோ வெளியிட்டு பொதுமக்களைத் தெளிவுபடுத்துவது கிடையாது.

இதற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் கூறும் ஒரே காரணம் 'பாதுகாப்புப் பிரச்சினை' என்பதாகும்.

பொதுமக்களின் விநியோகத்துக்கான எரிபொருள்களின் கையிருப்பு அளவை வெளியிடுவதில் பாதுகாப்புப் பிரச்சினை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனாலும் அவ்வாறு




அவற்றை வெளியிடக் கூடாது என்று படை அதிகாரிகள் தடுக்கிறார்கள் என்பதையும் வெளியில் கூறும் துணிச்சல் கூட்டுத்தாபன அதிகாரிகளுக்கு இருப்பதாகவும் தெரியவில்லை.

ஆனாலும்–

இந்தமுறை நிலைமை மிக மோசமாகி வந்ததால் எரி பொருள் விநியோகத்தில் ஏற்பட்ட பாதிப்புக்கான உண்மையான காரணத்தை யாழ். பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் பத்திரிகைகளுக்கு மெல்லக் கசியவிட்டுவிட்டன.

எரிபொருள் தாராளமாகக் கையிருப்பில் இருக்கிறது. ஆனால் படையினர் தான் விநியோகத்தைக் கட்டுப்படுத்துகிறார்கள் என்று அந்த வட்டாரங்கள் உண்மை நிலையை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்திருக்கின்றன.

குடாநாட்டுக்கான எரிபொருள்களைச் சேமித்து வைக்கும் பாரிய எண்ணெய்க் குதங்கள் காங்கேசன்துறையில் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள்ளேயே அமைந்திருக்கின்றன. அங்கிருந்தே எரிபொருள்கள் பெற்றோலியக் கூட்டுத்தாபன பவுஸர்கள் மூலம் எரிபொருள் விநியோக நிலையங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

எண்ணெய் விநியோகம் முழுக்க முழுக்கப் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் இருந்தே மேற்கொள்ளப்படுவதால் அதை எந்தவேளையும் நிறுத்தவோ, கட்டுப்படுத்தவோ அவர்களுக்கு வாய்ப்பாகிறது.

ஏனைய அத்தியாவசியப் பொருள்களின் விநியோகம் நேரடியாக சிவில் அதிகாரிகள் மூலம் மேற் கொள்ளப்படும் போது இந்த எரிபொருள் விநியோகத்தில் மட்டும் பாதுகாப்புத் தரப்பினரின் தலையீடுகள் இருந்து வருவது அதிகாரிகளிடையே அதிருப்தியை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்தத் தடவை எரிபொருள் விநியோகத்தைப் படையினர் கட்டுப்படுத்தி வைத்திருப்பதற்கு பின்வருவன காரணங்களாக இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகின்றது.

எரிபொருள் கப்பலைத் தாக்கியதன் மூலம் புலிகள் யாழ்ப்பாணத்து மக்களின் அன்றாட வாழ்க்கையைச் சீர்குலைத்து விட்டார்கள் என்பதை உணர்த்துவது அவற்றில் ஒன்று.

கப்பல் தாக்கப்பட்ட கையோடு படையினர் விடுத்த அறிக்கை எதிர்காலப் பாதிப்புக்களை கோடிகாட்டும் வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

அந்த அறிக்கை மக்கள் மத்தியில் தாக்கத்தை – புலிகளுக்கு எதிரான சீற்றத்தை – ஏற்படுத்தும் என்று படைத்தரப்பில் எதிர்பார்க்கப்பட்டிருக்கலாம். ஆனால் தங்கள் இலக்கை அடைய அந்த அறிக்கை மட்டும் போதாது எனக் கருதி அறிக்கையில் கூறப்பட்டதை செயலிலும் மக்களுக்கு உணர்த்தப் படைத்தரப்பு முயன்றிருக்கின்றது போலும், எரிபொருள் மீதான கட்டுப்பாடு இதையே உணர்த்துகின்றது.

– வலிகாமத்தான்

# லண்டனில் ஜனாதிபதியை குடைந்த செய்தியாளர்கள்

நாடு எத்தகைய நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டாலும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க லண்டனுக்கான விஜயங்களை அடிக்கடி மேற்கொள்கிறார். தனது பிள்ளைகளுடன் கூடிக் குலாவி விட்டு வருகிறார்.

இம்முறை அவருடைய விஜயம் சர்வதேச செய்தி ஊடகங்களின் கழுகுக் கண்களில் அகப்பட்டுக் கொண்டது. ஆளுக்காள் அவரைத் துருவித் துருவி பேட்டி கண்டனர். ஜனாதிபதியும் விடவில்லை. ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு விதமாக கருத்துக்களைத் தெரிவித்தார்.

ஆனால் நாடு திரும்பியவுடன்தான் அவரது கட்சியிலிருந்து மாற்று கட்சிக்குத் தாவியவர்கள் 'என்ன கதைத்தீர்? என்று கழுத்தைப் பிடித்திருக்கின்றனர். அது வேறு.

ஜனாதிபதி சந்திரிகா வெளிநாட்டு ஊடகங்களுக்கு வழங்கிய செவ்விகள் பலத்த சர்ச்சைக்குள்ளாகியவை என்பது உண்மை.

விடுதலைப் புலிகளின் போராட்டத்தை பயங்கரவாதம் என்று செவ்விகளில் அவர் அடிக்கடி விமர்சித்தார்.

பி.பி.ஸி தொலைக்காட்சி சேவையில் காரசாரமான விவாதம் (Hard Talk) என்ற நிகழ்ச்சியில் டிப் செபஸ்ரியான் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவை செவ்வி கண்டார். தனது ஆட்சியின் கீழ் இலங்கையில் நிகழ்ந்த மனித உரிமைகள் மீறல் சம்பவங்கள் குறித்த கேள்விகளுக்குப் பதில் கூற முடியாமல் திணறினார்.

டிப் செபஸ்ரியான் அமெரிக்க இராஜங்கத் அமைச்சின் 2000 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் மனித உரிமைகள் மீறல் சம்பவங்கள் பற்றிய அறிக்கையை ஜனாதிபதியின் முன் கொண்டு வந்தார். அப்படி ஒரு அறிக்கை இருப்பதே தனக்குத் தெரியாது என்றார் ஜனாதிபதி. 1996 ஆம் ஆண்டுக்குரிய அல்லது 1997 ஆம் ஆண்டுக்குரிய அறிக்கைகளைத் தாம் வாசித்ததாகவும் இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னேற்றகரமான நிலையை அடைந்துள்ளன என்று அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றும் ஜனாதிபதி அங்கு விவாதித்தார்.

ஆனால் தம்மிடம் இருப்பது அமெரிக்க இராஜங்கஅமைச்சின் ஆகப் பிந்திய அறிக்கை என்று செவ்வியாளர் சுட்டிக்காட்டினார். தமிழ் மக்கள் மீதான கொலை, கற்பழிப்பு, சித்திரவதை என்பவை தொடர்பான செவ்வியாளரின் கேள்விகளுக்கு ஜனாதிபதி பதிலளித்தார்.



சந்திரிக்கா

''ஐ.தே.கவின் கடந்த கால ஆட்சிகளில் தான் தமிழ் மக்களுக்கு எதிராகப் பாரிய வன்முறைகள் இடம்பெற்றன. அவற்றை எமது ஆட்சியில் நாம் பெரிதும் கட்டுப்படுத்தியிருக்கிறோம். எமது ஆட்சியில் ஒரு சில சம்பவங்கள் தவிர பெரிதாக எந்த மனித உரிமைகள் மீறல் சம்பவங்களும் நடக்கவில்லை. ஐ.தே.க ஆட்சியாளர்களால் வேலையில் சேர்க்கப்பட்ட படையினரே எமது ஆட்சியில் சில வன்முறைகளைச் செய்தனர்.

''குறிப்பிட்டுக் கூறுவதானால் யாழ்ப்பாணம் அரச படையினரால் மீளக் கைப்பற்றப்பட்டபோது பல தமிழ் மக்கள் கொல்லப்பட்ட சம்பவம் அவ்வாறான ஒன்றே ஆகும். ஆனால் அரசு அவை பற்றி விசாரணைகள் நடத்தியது'' இப்படி ஜனாதிபதி கூறினார்.

வன்னிக்குப் பொருளாதாரத் தடை கிடையாது. ஐ.தே.கவின் ஆட்சியின் போது இருந்த பொருளாதாரத் தடையை தாம் ஆட்சிக்கு வந்து சில வாரங்களில் அகற்றி விட்டதாகக் கூட சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

அப்படியானால் வன்னியில் மக்கள் ஏன் கஷ்டப்படுகிறார்கள்? என்று செபஸ்ரியான் குறுக்கிட்டார்.

வன்னியில் மாத்திரமல்ல நாடு முழுவதும் தான் மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்றார் ஜனாதிபதி.

விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்றும், அவர்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அல்லர் எனவும் சர்வதேச ஊடகங்கள் ஊடாக பிரசாரம் செய்ய முயற்சித்தார் ஜனாதிபதி.

அவர் ஓயவில்லை. லண்டனில் பிரிட்டனின் உள் விவகாரத்துறை அமைச்சர் டேவிட் பிளங்கட்டைச் சந்தித்தார். அங்கு புலிகளின் நிதி திரட்டும் நடவடிக்கைகளை முடக்குமாறு கோரிக்கை விடுத்து விட்டு நாடு திரும்பியுள்ளார்.

புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்குக்கிட்டிய அனைத்து சூழ்நிலைகளையும் நிராகரித்து விட்டது அரசு. தற்போது சமாதான முயற்சிகளை மீளத்துரிதப்படுத்துவது பற்றிப் பேசுகிறது.

வெளிவிவகார அமைச்சர் மற்றும் பிரதமர் ஆகியோருடன் இணைந்து தனது அரசுக்கே உரிய பாசாங்குத்தனம் நிரம்பிய அரசியல் நகர்வுகளை அரசு முன்னெடுக்க முயற்சிக்கிறது.

ஜனாதிபதியுடனான அண்மைய செவ்விகள் வெளி நாட்டு ஊடகங்களின் அணுகுமுறைகள் கூட சர்வதேச சமூகம் இலங்கை இனப்பிரச்சினையை ஒரு நடுநிலையில் நின்று அவதானித்துவருகிறது என்பதைவெளிக்காட்டியிருக்கின்றன.

— சேனாவரையன்

## என் பிரிய காதலியே!

காத்திருந்து காத்திருந்து
காதலன் நான் களைத்து விட்டேன்!
பூத்திருந்த என் புன்னகையை — அடி
பூட்டு போட்டு நிறுத்தி விட்டேன்!
என் இனிய காதலியே — நீ
எங்கு தான் போய்த் தொலைந்தாயோ!
இதயம் சுவாசிக்க மறுக்கின்றன — என்
இமைகள் கூட தூங்காதிருக்கின்றன!
உன் வரவை எதிர்பார்க்கின்றேன்
உயிர் போகுமுன் வந்து விடு!
யுத்த ஆயுதங்களால்
இரத்தம் தோய்ந்த இந்த வீட்டிலே
சத்தம் இல்லாத அமைதியை தர
புத்தம் புது மலராய் நீ பிறந்திடு!
அழகியே உனை கண்டிட
அன்பன் நான் யாசித்து
தானங்கள் பல தருகின்றேன் — என் பிரிய
சமாதானக காதலியே தாமதியாமல் வந்திடு!

அ. அமலநாஜேஸ்வரி (றாஜி)
நெடுந்தீவு — 12.

## அவதான அரசியலில்...

நாற்காலிகளுக்கு பாரமாகப் போகும் தமிழ்
நாவன்மைத் தலைவர்களே!
நாங்கள் இன்னமும் சிறையிலிருக்கின்றோம்.
இங்கே இறப்புகள் எண்ணப்படுகின்றன.
சம்பவங்கள் சொல்லப்படுவதிலும்
எழுதப்படுவதே அதிகமாக இருக்கின்றது.

சரித்திரம் தவறு விட்டதாக
சரி சொல்லி செல்லாதீர்
சரித்திரத்தில் நீரும்
நவயுக நாயகர்கள் தான்.
காலம் உமக்காக காத்திருக்கும்
கலியுகம் என்று கண்கெட்டு திரியாதீர்.

பேதலித்து நிற்கும் எம் இனத்தின்
பெறுபேறு காண்பதென்றால்
காதலித்து கதிரை செல்வீர் — எம்
கருத்தாழம் காத்திடுவீர்.

தமிழன்பன், பேராதனை.

## சீதனம்

சீதனம் எனும் சிறையில்
அடைபட்ட பெண்கள் எத்தனை
இளைஞனே!
இரக்கமற்ற உன் செயலால்
ஏமாந்த இதயங்கள் எத்தனை
உன் ஆண்மைக்கு விலை பேசும்
இந்த இழி நிலைமை வேண்டுமா.
புனிதமான திருமண உறவிற்கு
லட்சமும், காரும் நிபந்தனையாக்கும்
ஆண் வர்க்கமே!
நீங்கள் கடைகெட்ட பிச்சைக்காரரே.

க. மதிவதனி,
புலோலி, பருத்தித்துறை.

## ''இனிவரும்... பொழுது...,
## ''நிச்சயம் புலரும்!

''கார்மேகம் கலைந்த பின்,
கனிந்து விட்ட ஒளிவட்டம்;— மீண்டும்
''ஏர்பூட்டி உழுவதற்கென...
எங்கோ ஒளி வீசுகின்றது!

''சீர்கெட்டு சிதைந்த எம்!
சினேகித இரத்தங்களின்!
''வேர்விட்டு போகாமலிருக்க...,
வேட்கையும் புலருகிறது!

''சோர்வென்று, விழுகாதே...,
சோதர்களே...; என்றும்
''மார்தட்டி மண்ணிலே...
மறுமலர்ச்சி செய்வோம்!

''ஈரேழு ஜென்மமாய் இணைப்பை —
இரத்தத்தில்
ஈடேற்றி உறுதியாய் தொடர்ந்தால் — வாழ்வில்
''இருள் களைந்து இன்பத்தை பெறவே...,
இனிவரும் பொழுதே ...'' நிச்சயம்! புலரும்.

ஜெயா. சரவணேஸ்வரி, ஹொப்டன்.

[redacted]

## எழுதுகின்றேன்

எழுது, எழுதென்றாய்
எழுதுகின்றேன்
கவிதைகளாக,
அத்தனையும்
உந்தனுக்காக
என் பேனாவில்
மை இருக்கும் வரையல்ல
என்
இதயத்தில்
உயிர்...
இருக்கும் வரை

— சேனையூர், இரா.
இரத்தினா

## யுத்தப் பிரதேசம்

மக்களும் இருக்கிறார்கள்
மணவிழாவும் நடக்கிறது
கோயிலிலே திருவிழாவும்
கோலாகலமாய் நடக்கிறது
பாடசாலை நடக்கிறது —
அங்கு
பரீட்சையும் நடக்கிறது
இ.போ.ச சேவையும்
இனிதாக நடக்கிறது
ஆனால்
வீதிகளுக்கு மட்டுமிது
யுத்தப் பிரதேசம்.....!

அரியாலை நித்தி

## புதுமைப் பெண்

நானுனை பற்றி நாலு வரி அறிந்தேன்
நாயகியே — நீ நல்லவளா? கெட்டவளா?
நாலு பேர் உனை நைய்யாண்டி செய்து நாய்க்
குணத்தைக் காட்ட நல்லவளே — நீ
புலியானாய் புழுதிபட போட்டுதைத்தாய்
நால்வரும் நாய் ஓட்டம் ஓட நான்
உனை தொடர்ந்தேன் ஓ..... நீ புதுமைப் பெண்

K.N. குருபரன்

## கவிதைப் பூங்கா

## சிந்து பாடுவோம்

போரும் வாழ்வும் கலந்த வாழ்வு
உங்கள் வாழ்வுதான் தமிழ்
ஈழம் காணும் வரையும் நீங்கள்
ஓயா புலிகள் தான்
பனியும் மழையும் இடியும் மின்னல்
உங்கள் நேரில் தான் — பகை
அழியும் வரையும் தொடரும் போரும்
இன்று ஒன்று தான்.

னிதன் மனிதனாக வாழ
வேண்டும் மண்ணிலே — அவன்
ாழ்வில் அடிமை வாழ்வு வாழ்ந்த
வாழ்வு இல்லையே
கொடுமை தன்னை அழித்த வீரம்
தமிழன் வாழ்விலே — அவன்
கொள்கை மறந்து கொலைஞர் காலில்
வீழ்ந்த தில்லையே

அழிவது இல்லை வாழ்வது என்று
அறிந்து வந்தவர் — நாம்
அனைவரும் கூடி அழித்திடுவோம்
பகை என்று சென்றவர்
போரிடு புலியே புறப்படு போர்க்களம்
முடித்திடு பகையதை — மூடி
சூடிடு தமிழரசாக்கிடு வாழும்
தமிழா நெஞ்சமே.

'சிந்து பாடுவோம்'
சத்திய தேவன் காட்டிய வழியில்
சென்று வெல்லுவோம் — எங்கள்
சரித்திர நாயகன் கனவினை நெஞ்சில்
இருத்திக் கொள்ளுவோம்
வெற்றிகள் நூறெனக் குவித்துமே மண்ணில்
விடிவு கொள்ளுவோம் — புலி
வென்றிடும் காலம் நமதிது என்று
சிந்துகள் பாடுவோம்.

க. இ. இந்திரன்

## தீபாவளி

எல்லோருக்கும் தீபாவளிக் கொண்டாட்டம்
எங்கெங்கும் கடைகளிலே பெருங்கூட்டம்
வாணங்கள் பறக்கவிடும் பூக்கூட்டம்
பாலர்கள் உண்ணத்தான் தின்பண்டம்!

ம.பிரியங்கா, கொழும்பு — 15.

## கவிதைத்துளிகள்

உன் முதல் பார்வையின் போது காதலின் வேகம் கண்டேன்.
உன்னை மறுபடியும் காணாதபோது காதலின் தவிப்புக் கண்டேன்.
என் காதலை நீ ஏற்றபோது காதலின் இன்பம் கண்டேன்.
உன்துன்பம் அறிந்த போது காதலின் வேகம் கண்டேன்.
உன் துன்பத்தைத் துடைக்கும் போது காதலின் சுமை கண்டேன்.
உன்னை நான் பிரியும் போது காதலின் வேதனை கண்டேன்.

சி. காண்டீபன் இலுப்பைக்கடவை, மன்னார்.

# தீபாவளி கலாட்டாக்கள்

**கரஸ்**

## கலாட்டா — 1

நான் பிறைவேட் கம்பனி ஒன்றில் வேலை பார்க்கின்றேன் என்பதை எவரும் ஊகித்துக் கொள்ளும் தடயங்கள் இரண்டு உண்டு.

ஒன்று : அதிகாலை ஆறுமணிக்கு வீட்டை விட்டுக் கிளம்பினால் இரவு ஏழு மணிக்குத்தான் வீடு திரும்புகின்றேன். இரண்டு : ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த நாட்களில் என்னை வீட்டில் காண முடியாது.

எனது கிளாஸ்மேட் ஒருவன் ரீச்சராக இருக்கிறான். இன்னொருவன் கச்சேரி கிளார்க்காக இருக்கின்றான். நான் மட்டுமல்ல எனது மனைவி கூட பொறாமைப்படும் அளவிற்கு அவர்களது உத்தியோகம் நடைபெறுகிறது.

ரீச்சர் மூன்று ஏக்கர் தோட்டம் வைத்திருக்கின்றான். ஐந்து ஏக்கர் வயல் விதைக்கின்றான். அத்துடன் டியூட்டறிக்கு போய் ஆயிரம், ஆயிரத்தி ஐந்நூறு உழைக்கின்றான். ஓய்வு ஒழிச்சல் இல்லாத வேலை என்று வாயில் விரல் வைக்காதீர்கள். பள்ளிக்கூட நேரத்தில் ஆனந்தமான நித்திரை. றெஸ்ற் போதாதா?

கச்சேரி கிளார்க் வாரத்தில் ஞாயிற்றுக்கிழமை மட்டும் வேலை செய்கின்றான் (வீட்டில்) மற்றப்படி ஆபீசில் ஐந்து பத்து நிமிஷம் பைல்களை ஒரு நோட்டம் விடுவான். பின்னர் கச்சேரியை ஒவ்வொரு செக்ஸனாக ஒரு ரவுண்ட் அடிப்பது. இடையிடையே போன் பேசுவது. ஸ்டெனோவுடன் அரட்டை... நித்திரை... வீடு... நாளாந்தம் வீட்டுச் செலவுக்கும் தனது 'டீ' செலவுக்குமாக சம்திங் பெற்றுக் கொள்ளுகின்றான்.



என்னைப் பொறுத்தளவில் மாடாய் உழைத்தும் மாதம் முடிவில் கிடைக்கும் சம்பளத்தை ஏக்கத்துடன் காத்திருந்து வாங்கி பிச்சுப் பிடுங்கி துண்டு விழும் தொகையை அடுத்த மாதம் சரிப்பண்ண முற்பட்டு அடுத்த மாதமும் துண்டு விழுந்து விடும்.

இப்படியே மொத்தம் ஒரு லட்சம் ரூபாய் நான்கு சதவீத வட்டியில் வாயைப் பிளந்து நிற்க வாழ்வா சாவா என்ற திரிசங்கு சுவர்க்க நிலையில் நிற்கின்றேன்.

இந்தநிலையிலும் 'அடுத்தவர்களுக்கு நாம் என்ன சளைத்தவர்களா' என்ற நிலையில் மனைவி தீபாவளிப்பட்டியலைப் போட்டு நீட்டினாள். பட்டியலுக்கு மனதில் பில் போட்டுப் பார்த்தேன். மொத்தம் ஐயாயிரத்துக்கு அதிகமாகப் பிடிக்கும். எந்த அயிட்டத்தையும் 'ஒமிட்' பண்ண முடியாது. ஒமிட் பண்ணும் பட்சத்தில் அதனால் ஏற்படும் சலனத்திற்கு என்னால் ஈடுகொடுக்க முடியாது.

ஆனால் ஒன்றே ஒன்று மட்டும் செய்யலாம்; ஒரு அயிட்டத்தைக் கூட்டலாம். அதனால் செலவு கொஞ்சம் கூடும். என்றாலும் பின்னுக்குச் சுகம் இருக்கு. மனைவியிடம் சொன்னேன் : ''அம்மணீ! இந்தச் சிட்டையில் அடியேனுக்கு ஒரு அயிட்டமும் சேர்க்கப்படாததையிட்டு மனம் வருந்துகின்றேன்.''

அந்த சிட்டையை முழுவதுமாக ஏற்றுக் கொண்டு விட்டேன் என்ற பூரிப்பில் வாயெல்லாம் பல்லாக நின்றவள், ''என்னை, மன்னியுங்கோ (முப்பது வருஷ தாம்பத்திய வாழ்வில் முதல் தடவையாக தனது தவறை ஏற்றுக் கொண்டு என்மேல் அர்ஜிக்கப்பட்ட சொல்) உங்கடை அயிட்டத்தை நீங்களே 'சூஸ்' பண்ணுங்கள் எண்டு விட்டிட்டன்'' என்றாள் பௌவியமாக.

''அப்போ நான் எழுதட்டே''

''ஓமோம் எழுதுங்கோ''

எழுதி விட்டு அவளிடம் நீட்டினேன். அவள் உதட்டைப் பிரித்துப் படித்தாள்.

''கா... வி''

''இந்தாருங்கோ சாவி''

''எதற்கு?''

''நான் அம்மா வீட்டை போகப் போறன்.''

முகாரி ராகம் வயலினில் முனகத் தொடங்கியது.

''ஐயையோ... இஞ்சாரும் நான் பகிடிக் கெல்லே எழுதினனான். நீரும் நம்பீட்டீரே!''

நான் முகபாவனையை மாற்றி மழுப்பினேன்.

'நடிக்கத் தெரியாத சம்சாரியின் வாழ்க்கை நாலு நாளில் முறியும்.'

## கலாட்டா — 2



''என்னங்க... தீபாவளி வருது நீங்க மௌனமா இருக்கீங்களே?'' ''ஏன்'' என்னை பராக்கோடச் சொல்றியா?''

''ஊஹூம் அதுக் கொன்னும் குறைச்சலில்ல.. நாலு பேரைப் போல நாமளும் கொண்டாட வேண்டாமா?''

''ஆமா... கொண்டாடிட்டால் போச்சு!''

''என்ன... தீவாளியை தலையில் தூக்கி வைச்சு கொண்டாடுறதா?... புடைவை, பலகாரம் இதெல்லாம் வேணும்?''

''ஆமாம் இப்ப நாங்க என்ன நேகெட்டா உண்ணா விரதமா இருக்கோம்?''

''அடடா இந்த மனுஷனுக்கு என்ன வந்திடிச்சு குழந்தை குட்டிங்க நினைப்பே இல்லை.''

''இந்தாடியம்மா உனக்கு மட்டும் தான் குழந்தை குட்டி நினைப்பிருக்கென்று நினைக்காதே எனக்கும் நிறைய இருக்கு. டெயிலி தியானத்திலிருக்கிறப்போ பஞ்சாட்சரத்தை ஓதிண்டிருக்கேன் எண்ட நினைப்பா? போடீ... நம்ம குழந்தைகள் எத்தனையென்று எண்ணின் டிருப்பேன்.''

''ஐயையோ: தேவ தூஷணம் சொல்றீங்களே இது அடுக்குமா?''

''சொல்லிட்டாத்தான் என்னவாம். அந்த ஒருத்தனின் அட்டகாசத்துக்கு ஒழித்த பயந்தாங் கொள்ளிங்கதானே நீங்க போற்றுகிறதேவங்க.''

''ஐயையோ... அது புராணக் கதைங்க அதை நம்பாதீங்க. தேவங்க நினைச்சால் அந்த அசுரனை ஒரு நொடியில் அழித்து விடுவாங்க.''

''அப்படியா! அப்போ புராணக்கதை பொய் என்கிறியா?''

''ஆமா... ஆமா அது பொய்க் கதை. சுத்தப் பொய்''

''அப்படீன்னா நாமும் அந்த பொய் கதையை நம்பி தீபாவளியை கொண்டாட வேண்டாம். என்ன விளங்கிச்சுதா?''

## கலாட்டா — 3

''நல்லெண்ணெய் இரண்டு லீட்டர்... அரப்பு அரைக் கிலோ... தேசிக்காய் இருபது... நாலுகிலோ சீனி... மல்லி ஒரு கிலோ... பெருஞ்சீரகம் காக்கிலோ... தவிடு நாலு கிலோ... புண்ணாக்கு ஆறு கிலோ... அரிசி பத்துக் கிலோ...''

''பொறடி அம்மா... கொஞ்சம் பொறு.. எ

பட்டியல் நீண்டு கொண்டே போகுது... ஏன் சில்லறைக்கடை போடப் போறியோ?''

''என்னங்கோ! அப்பிடிச் சொல்லுறீங்க

நாளையிண்டைக்கு தீபாவளி வருகுதல்ல...''

''ஓஹோ! தீபாவளியா... அதுக்கு கடை

எடுக்கச் சொல்லிறியா?''

''அப்ப நீங்க ஒரு பில்லை போடுங்கோவ

''ஏன் நான் போடுவான்... நீ போட்ட பில்லை

திருத்தம் செய்யப் போறன். நல்லெண்ணை ரண்

லீட்டருக்கும் முன்னூறு ரூபா வேணும். இவ்வள

நல்லெண்ணை தேவையே? அதை அரை லீட்டர்

''என்னப்பா: எங்கடை பொடியன்களின்

தலையை நீங்கள் பாக்கேல்லியே?''

''ஏன் பாக்கேல்ல... வறணி கிளியாப் பத்தை

அதைத் தான் சொல்ல வாறன்... நீ அவசரப்படுறாய்

எட்டுப் பொடியளையும் ஒரே தடவையில் சலூனுக்

அனுப்பி யூல் பிறைனர் கிராப் அடிப்பிப்பது. ஒரே

தடவையில் அனுப்புவதால் சலூனில் ஒரு டிஸ்கவு

கோரலாம். இதனால் எப்படியும் ஒரு லீட்டர் எண்

காசை மீதப்படுத்தலாம். அதே வீதத்தில் தேசிக்காய்,

எல்லாத்திலும் மீதப்படுத்தலாம். சீனி நாலுகிலோ

எழுதியிருக்கிறியே. உனக்கு மூளை இருக்கா?''

''என்னைக் கேளாதேங்கோ பொடியளைக் கேளுங்கோ''

''சீனி அதிகம் பாவிச்சால் சாக்கரை வியாதி வருமெண்டு சொல்லாதையன்?''

''சொன்னேன். அப்படியெண்டால் தாங்கள்

ஏறும்பூசி அடிப்பிப்பமாம், கிண்டல்

படியே: அப்போ சீனியில மாட்டெலும்பு

தெ அவங்கட காதில போட்டுப்

துக் கதையா தேங்கோ... மாட்டிறைச்சி

ளுக்கு உயிர்.''

நயை விடுவம். அதுசரி புண் ணாக்கு

க்கு?... அதுவும் அவங்களுக்கோ?''

பொறியள்?''

''அதுவும் கு

பதினாறு முழ சீலையெண்டு எழுதிக் கிடக்கு... உமக்கேன் பதினாறு முழம். எட்டு முழம் போதும். மகளுக்கு ஆறு முழ சீலை எழுதியிருக்கு அதை மூண்டு முழமாக்கிவிடு தாவணியாகப் போடட்டும்.''


''அப்ப உங்கள் நாலுமுழ வேட்டியையும் இரண்டு முழமாக்குவம்''

எனக்கு இரண்டு முழம் கூட வேண்டாம்... ஆனா... ஆனா...''

''என்ன இழுக்கிறியள்?''

''ஒண்டுமில்ல... எனக்கு.. ஒரு...''

''ம்ம்.. சொல்லுங்கோவன்?''



''எனக்கு ஒரு போத்தில் வேணும்.''

''அதுக்கேன் விழுங்கிக் கக்குறியள். கோடியில

ய பழைய போத்திலுகள் அடுக்கி வைச்சிருக்கு

எடுங்கோவன்.''

து இல்ல... ஒரு போத்தில் சாராயம்...''

ன்ன?... சாராயமோ? பேந்தென்ன மீதப்படுத்

தொகையை நிரவ உது காணும் தானே.''

# வன்முறைக்க
# மாறும் குடும்ப

அமெரிக்காவில் ஒரு தெருவில் நடந்து சென்றால் ஒவ்வொரு இரண்டாவது வீட்டிலும் ஏதாவது ஒரு வடிவில் குடும்பத்தில் வன்முறை நடந்து கொண்டிருக்கும் என ஆய்வுத் தகவல்கள் கூறுகின்றன. நான்கு வீடுகளில் ஒன்றில் அது அடிக்கடி நடைபெறும். எதிர்பார்ப்பதற்கு நேர்மாறாக, இரவில் தெருக்களில் நடக்கவே பயப்படுகிற அநேகர், வீட்டில் அதை விட ஆபத்தில் இருக்கின்றனர். ஆனால் குடும்பத்தில் வன்முறை அமெரிக்காவில் மட்டும் நடைபெறும் சம்பவமல்ல.

உலகம் முழுவதும் அது நடைபெறுகிறது. உதாரணமாக டென்மார்க்கில் நடைபெறும் மூன்று கொலைகளில் இரண்டு குடும்பத்திற்குள் சம்பவிக்கின்றன. அந்தந்த நாட்டைப் பொறுத்து நடைபெறும் எல்லாக் கொலைகளி லும் 22 முதல் 63 சதவீதம் வரை குடும்பத்திற்குள் சம்பவிக்கின்றன என்பதாக ஆபிரிக்காவில் நடத்திய ஆராய்ச்சி ஒன்று தெரிவிக்கிறது.

மேலும் லத்தீன் அமெரிக்காவில் அநேக ஆட்கள், குறிப்பாக பெண்கள், இழிவுபடுத்தப்பட்டு தாக்கப்பட்டு அல்லது மூர்க்கர்களினால் கொல்லப்படுகின்றனர்.

கனடாவில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் நூறு பெண்கள் அவர்களுடைய க

ஒருமித்து வாழும்

றனர். கனடாவை

சனத்தொகையுள்

வருடமும் சுமார் 4

காதலர்களாலோ

ஒவ்வொரு வருட

அவர்களுடைய பெற்றோராலும், அதே எண்ணிக்கையுள்ள பெற்றோர் தமது பிள்ளைகளாலும் கொல்லப்படுகின்றனர்.

இவ்வாறு, உலகம் முழுவதும் கணவன்மார் மனைவிமாரைத் தாக்குகின்றனர். மனைவிமார் கணவன்மாரை அடிக்கின்றனர். பெற்றோர் பிள்ளைகளை அடிக்கின்றனர். பிள்ளைகள் பெற்றோரைத் தாக்குகின்றனர். மற்றும் பிள்ளைகள் ஒருவருக்கொருவர் வன்முறையாக நடந்து கொள்கின்றனர் எனத் தெரியவருகிறது.

உண்மையில் பாலியல் பலாத்காரம், கொள்ளைக்காரனின் தாக்குதல் மற்றும் வாகன விபத்துக்கள் ஆகிய இவை எல்லாம் ஒன்று சேர்ந்து ஏற்படுத்தி விடும் காயங்களைவிட மனைவியை அடிப்பது அதிக காயங்களை ஏற்படுத்தி விடு

என நியூயோர்க்கின் மாவட்ட வழக்கறிஞர் கூறுகிறார்.

வர் மேலும் கூறுகையில், பெண்களுக்கெதிரான

றையும் குடும்பத்திற்குள் வன்முறையும் சர்வசாதாரண

விட்டன என்பதும்... கொடுமை செய்பவர்கள் சாதாரண

என்பதும் தெளிவாகியிருக்கிறது. இது மக்களின்

கையின் எல்லா வகுப்பினரிடையேயும், இனத்தவரிடை

காணப்படும் வழமையான பிரச்சினையாக இருக்கிறது

றார்.

ரமேஷ்காந்த் ஜெயசீலன்

ா: என்னடா பாபு
இன்னைக்கு
ஸ்கூலுக்கு 'கட்'
போட்டுட்டு
வந்திட்டியா.

பாபு: ஆமா நான் 'கப் கட்'
வெட்டிக்கிட்டு
வகுப்புக்கு
வந்தேன்னு
சொல்லி எங்க
டீச்சர் வீட்டுக்கு
அனுப்பி
வச்சிட்டாங்க!



சுடர் ஒளி
சிறுகதை

# யாருக்கும் வெட்கமில்லை

செ.சுப்பிரமணியபிள்ளை




ஓய் ஆரப்பா! கியூ வரிசையைக் குழப்பிறது? ஒழுங்காக வரிசையில் நில்லுங்கோ! இல்லாவிட்டால் ஒருவரையும் அம்மாவைப் பார்க்க விடமாட்டன்.

அரச அதிபர் அலுவலகத்தின் முன்னால் பியூன் கத்தினான். மீண்டும் ஆவேசமாகச் சொன்னான்.

''இந்தாப்பா நீல சேட், வரிசையைக் குழப்பாதே! ஒழுங்காக நில். ஒழுங்காக நிற்கமுடியா விட்டால் வீட்டை போய்ப் படு!''

நீல சேட் அணிந்திருந்த நவநீதன் மாஸ்ரர் கூனிக்குறுகி நின்றார். தனது மாணவர்கள் அல்லது மாணவிகள் அருகில் நிற்கிறார்களோவென்று நோட்டம் விட்டார். இந்த மிரட்டலைத் தனது மாணவச் செல்வங்கள் பார்த்து விட்டால்?

நாளை பாடசாலையில் இதுதான் பேச்சு.

''நேற்று லொள்ளர் (இது நவநீதன் மாஸ்ரரின் செல்லப் பெயர்) கச்சேரியில் திட்டு வாங்கினாராம். லொள்ளர் கியூவைக் குழப்பப் பார்த்தார்; பியூன் கேவலமாய்ப் பேசிப் போட்டானாம்''

இது பாடசாலை மாணவர்களிடையே கிளுகிளுப்பை ஏற்படுத்தும் வரலாற்றுச் சம்பவமாகவிருக்கும். அதிஷ்டவசமாக மாணவ மாணவிகள் பியூனின் வரவேற்புரையைக் கேட்கவில்லை.

நவநீதன் மாஸ்ரர் அரச அதிபரைக் காண கியூவில் நின்றார். கையில் ஒரு பைல். அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட தனது காணிக்கு நஷ்டஈடு பெற்றுவிட நாலு வருஷமாய் நாயாய் அலைகின்றார்.

எத்தனை அரசாங்க அதிபர்களைக் கண்டுபேசிவிட் டார். கடிதங்கள், அறிக்கைகள், படங்கள், கோட்டு உத்த ரவு நகல்கள், மனைவியின் மரண சேர்ட்டிபிக்கேட். இவற் றைச் சேர்த்துச் சேர்த்து அவர் கரங்கள் சோர்ந்து விட்டன.

இன்று அரச அதிபர் நவநீதம் நல்லருள்நாதனைக் காணத்தவமிருக்கின்றார் நவநீதன் மாஸ்டர்.

நவநீதம் இப்பொழுது அரச அதிபர் ஆகிவிட்டார். அவருக்கு அதனை நினைக்க ஆச்சரியம் ஒரு புறம்; தனது தோல்விகளை நினைத்து வேதனை மறுபுறம்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நவநீதமும் நவநீதன் மாஸ்ரரும் முதலாம் வருடத்தில் சகமாணவர்க நவநீதம் அப்பொழுது எவ்வளவு அழகு. அவள் விரிவுரையை முடித்து விடுதிக்குச் செல்வதனைப் பார்ப்பதற்கே மாணவர்கள் கூட்டம் வழிவழியே நிற்கும். ''கண்களோ அரவிந்தம் கால்களும் அஃதே'' இதுதான் நவநீதத்திற்கு முற்றும் பொருந்தும் உவமானம். நவநீதத்திற்கும், நவநீதனுக்கும் பெயர்ப் பொருத்தம். எனவே சோடிகட்டி விட்டார்கள். மாணவர்களின் கேலி, நவநீதத்தின் பெண் உள்ளத்தை அசைக்க முடியவில்லை.

ஆனால் நவநீதனின் உள்ளத்தில் ஆசை அரும்பியது. முதலில் கேலி செய்த மாணவர்களைக் கண்டித்தவர். பின்னர் அப்படிக் கேலி செய்யும்படி அவரே மாணவர்களைத் தூண்டினார். அவர்கள் கேலியில் விவரிக்க முடியாத குதூகலம். ஆனால் நவநீதன் மிகவும் பயந்த சுபாவம் உள்ளவர். வெக்கறை.

நவநீதனின் தோழன் ஒருவன் நவநீதத்தின் தோழியை அணுகினான். தோழி நவநீதத் திடம் கேட்டுப் பார்த்தாள்.

''பல்கலைக் கழகத்திற்கு வந்தால் படிக்க வேண்டும். நவநீதனின் பெற்றோர் அறிந் தால் அவர்கள் எவ்வ ளவு கவலைப் படுவினம்''

நவநீதம் மிகவும் கண்ணியமாகப் பதில் சொல்லி அனுப்பினாள். நவநீதனுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. அவளைக் கண்டாலே சங்கடம். அவள் செல்லுகின்ற பாதைகளைத் தவிர்த்து வந்தார். அவள் செல்லுகின்ற கூட்டங்களுக்குப் போவதில்லை என்று முடிவு செய்தார். அவள் வீதியில் வருவது தெரிந்தால் வேறுவழியாகப் போய்விடுவார். மாணவர்கள் ''நவநீதத்திற்கு ஒரு நவநீதன் அழகுக் கோட்டைக் கேற்ற காவலன்'' என்று கேலி செய்தால், பேசாமல் அறைக் குள் போய் உட்கார்ந்து விடுவார். சீ என்ன காரியம் செய்து விட்டேன் என்று புலம்புவார்.

கால நீரோட்டம் விரைந்து ஓடியது. நவநீதன் பொதுக் கலைத் தேர்வில் ''பாஸ்'' சித்தி பெற்றார். அப்போது பொதுக் கலைத் தராதரப்பத்திரம் தன்னைக் கிடுகிடு பாதாளத்தில் தள்ளிவிடும் என்று அவர் நினைக்கவில்லை. இரண்டு வருடம் வேலை இல்லாமல் அலைந்து விட்டு எம். பி யின் கையைக் காலைப் பிடித்து ஆசிரியர் பதவி ஒன்றைப் பெற்றுக் கொண்டார்.

ஆனால் நவநீதத்தின் வாழ்வில் வெற்றிகள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து குவிந்தன. பொருளா தார

பட்டதாரி, இலங்கை நிர்வாகப் பரீட்சையில் சித்தி. இருபது வருட சேவைக்குப் பின் அரச அதிபராக அமர்ந்து கொண்டாள்.

நவநீதனுக்கு ஆசிரியர் வேலை கிடைத்தாலும் அதனைச் சரிவர அனுபவிக்க அவரால் முடியவில்லை. இதற்குக் காரணம் அவருடைய பயந்த சுபாவந்தான். பல அதிபர்களிடம் திட்டு வாங்கி, நாளொரு துன்ப மும் பொழுதொரு கஷ்டமுமாக இருபது வருட சேவையை முடித்து விட்டார்.

அவர் கற்பித்த ஒவ்வொரு பாடசாலையிலும் மாணவர்கள் அவருக்கு ஒவ்வொரு செல்லப் பெயரைச் சூட்டி மகிழ்ந்தனர். ''தவளையர்'', 'அடைக்கோழி', 'பனியர்', 'லொள்ளர்' என்று பல விருது களை அவர் பெற்றிருந்தார்.

அவருக்கு வாய்த்த மனைவி வாழ் நாள் முழுவ தும் லொக்கு லொக்கென்று இருமி நான்கு குழந்தைகளைப் பெற்றுக் கொடுத்து விட்டு மறு உலகத்திற்குப் போய் விட்டாள்.

நவநீதன் மாஸ்ரர் தனக்குத் திருமணமான புதிதில் நவநீதத்தை அடிக்கடி பகிரங்க மேடைகளில் பார்த்திருக்கிறார். என்ன கம்பீரம் — என்ன குரல் வளம், என்ன அழகு — ஆனால் அவளின் கண்ணில் படாமல் வீட்டிற்கு திரும்பிவிடுவார். 45 வயதிலும் அவருக்குச் சிறிது சலனம் ஏற்படுவதுண்டு. அப்பொழுதெல்லாம் —

''என்னைப் போல சிலரையும் படைத்து
அதற்கும் இதற்கும் ஏங்க வைத்தான்''

என்ற பட்டுக்கோட்டையாரின் பாடல் வரிகளை அவர் வாய் முணுமுணுக்கும்.

கியூ வரிசையில் நின்ற நவநீதன் மாஸ்ரர் நத்தை வேகத்தில் செல்லும் நீண்ட வரிசையைப் பார்த்துச் சினமடைந்தார். சடுதியாக அரச அதிபர் நவநீதம் தமது அலுவலகத்துக்கு வெளியே வந்தாள். நவநீதன் மாஸ்ரரை அவள் கண்கள் காணத்தவறவில்லை.

மீண்டும் தனது அலுவலகத்திற்குச் சென்று பியூனைக் கூப்பிட்டாள்.

''வெளியே நீல சேட்டுடன் நிற்பவரை வரச் சொல்'' என்றார். வாடி வதங்கிய நவநீதன் மாஸ்ரர் முகத்தில் வெட்கமோ சங்கோஜமோ இல்லை. காலத் தின் பதிவுகள் அவரின் நாணம், வெட்கம், தயக்கம், கூச்சம் எல்லாவற்றையும் அடித்து நொருக்கி விட்டன

''என்ன மாஸ்ரர் என்ன பிரச்சினை'' நவநீதம் அதிகாரியின் மிடுக்குடன் கேட்டாள்.

''எனது நஷ்டஈடு விஷயம் மேடம் நாலு வருஷமா அலைகிறேன். இன்னும் ஒன்றும் சரிவரவில்லை''

''சரிபைலைத் தாருங்கள்.'' நவநீதன் இரண்டு கைகளாலும் மிகுந்த பயபக்தியுடன் பைலைக் கொடுத் தார். ''முடிந்ததைச் செய்கிறேன்'' நவநீதம் கூறினாள்.

நவநீதன் இரண்டு கரங்களையும் உயர்த்தி அவளைக் கும்பிட்டார். இப்போ நவநீதனைப் பொறுத்தளவில் யாருக்கும் வெட்கமில்லை.

(யாவும் கற்பனை)

# ராசி பலன்

18.11.2001 முதல் 24.11.2001
பொ.சந்திரன்.

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

செவ்வாய், சுக்கிரன், சந்திரன் போன்ற கிரகங்களால் நன்மையுண்டு. ராகு, கேதுக்கள் ஓ அளவு நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் கவனம் குறையலாம். மன அமைதி இருக்காது. எடுத்த செயலை செய்து முடிக்கலாம். வீடு, வாகனங்களால் லாபம் இருக்காது. பிரயாண வாய்ப்புண்டு. உடல் ஆரோக்கியம் உண்டு. தொழிலில் சீரான முன்னேற்றம் இருக்கும். நண்பர்களால் பண விரயம் ஏற்படலாம்.

**இடபம்: கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

குரு, புதன், சூரியன் போன்ற கிரகங்களால் நன்மையுண்டு. சுக்கிரன், செவ்வாயால் ஓர் அளவு நன்மை யுண்டு. பணம் இருக்கும். கல்வியில் கவனம் இருக்கும். மன அமைதி இருக்கும். எடுத்த கருமத்தை இலகுவில் செய்து முடிக்கலாம். பிரயாண வாய்ப்புண்டு. திருமண வாய்ப் புண்டு. வீடு, வாகனம் லாபம் தரும். உடல் ஆரோக்கியம் சிறிது பாதிக்கலாம். தொழில் துறையில் எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்காது.

**மிதுனம் : மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3**

சுக்கிரன், சந்திரன் இரு கிரகங்களாலும் நன் மையுண்டு. செவ்வாய், புதன் இரு கிரகங்களாலும் ஓர் அளவு நன்மையுண்டு. பணம் தட்டுப்படலாம். கல்வியில் கவனம் குறையலாம். மன அமைதி இருக்காது. எடுத்த கருமம் தாமத மாக நிறைவேறும். வீடு, வாகனங்களால் செலவு ஏற்பட லாம். உடல் ஆரோக்கியம் சிறிது பாதிக்கலாம். தொழில் துறையில் எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்காது. நண்பர்களின் உதவி தேவைப்படும்.

**கடகம் : புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

சுக்கிரன், புதன், சூரியன் போன்ற கிரகங்க ளால் நன்மையுண்டு. சனி, ராகு, கேது போன்ற கிரகங்கள் ஓர் அளவு நன்மைசெய்யும். பணம் தட்டுப்பட லாம். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எடுத்த கருமம் தாமதமாக நிறைவேறலாம். வீடு, வாகனங்க ளால் லாபம் இருக்கும். பிரயாண வாய்ப்புண்டு. தேக ஆரோக் கியம் சிறப்பாக இருக்கும். தொழில் முன்னேற்றம் இருக்கும். நண்பர்களின் உதவி இ

**சிங்கம் : மகம், பூரம், உத்தரம் 1**

புதன், சூரியன், குரு போன்ற கிரக நன்மையுண்டு. சனி, செவ்வாய், ராகு கிரகங்களால் ஓர் அளவு நன்மையுண்டு. பணம் த லாம். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி எடுத்த கருமம் தாமதமாக நிறைவேறும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்புண்டு உடல் ஆரோக்கியம் உண்டு. தொழில்துறை முன்னேறும். பெரியோ ரின் ஆசீர்வாதம் கிடைக்கும். நண்பர்கள் உதவுவ.

**கன்னி : உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2**

சுக்கிரன், சனி, சந்திரன் போன்ற கிரகங்களால் நன்மையுண்டு. குரு, புதன், ராகு போன்ற கிரகங்க ளால் ஓர் அளவு நன்மையுண்டு. பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். வீடு,வாகனம் செலவை ஏற்படுத்தலாம். எடுத்த கருமம் தாமதமாக நிறைவே றும். உடல் ஆரோக்கியம் உண்டு. திருமண வாய்ப்புண்டு. தொழில் துறையில் எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்காது. நண்பர்கள் உதவுவர்.

**துலாம் : சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3**

சுக்கிரன், குரு, புதன் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். ராகு, கேதுக்கள் ஓர் அளவு நன்மை செய் யும். பணம் தட்டுப்படலாம். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்காது. எடுத்த கருமத்தை இலகுவில் வெற்றி கரமாக செய்து முடிப்பீர்கள். வீடு, வாகனம் செலவை ஏற் படுத்தலாம். திருமண வாய்ப்புண்டு. பிரயாண வாய்ப்புண்டு. உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தொழில் துறையில் எதிர்பார்த்த லாபம் இருக்காது.

**விருச்சிகம்: விசாகம் 4, அனுஷம், கேட்டை**

சுக்கிரன், செவ்வாய் ஆகிய கிரகங்கள் நன்மை செய்யும். ராகு, புதன் ஆகிய கிரகங்களால் ...மையுண்டு. பணம் தட்டுப்படலாம். கல்வியில் ...லாம். மன அமைதி இருக்காது. எடுத்த கருமம் ... நிறைவேறும். வீடு, வாகனம் லாபம் தரும். ...கியம் சிறப்பாக இருக்கும். பிரயாண வாய்ப்பு ...ில் துறையில் எதிர்பார்த்த லாபம் இருக்காது. ...தவுவர்.

**...ு : மூலம், பூராடம், உத்தராடம் 1.**

குரு, சுக்கிரன், சனி போன்ற கிரகங்களால் ...மையுண்டு. செவ்வாய், சூரியன், புதன் ஆகிய ... ஓர் அளவு நன்மையுண்டு. பணம் தட்டுப்பட ...யில் கவனம் குறையலாம். மன அமைதி இருக் ...வாகனம் லாபம் தரும். பிரயாண வாய்ப்புண்டு. ...ாய்ப்புண்டு. எடுத்த செயலை தாமதமாக நிறை ... தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தொழில் ...பரிதாக முன்னேற்றம் இருக்காது.

**...கரம் : உத்தராடம் 2,3,4 திருவோணம், ...விட்டம் 1,2.**

புதன், சுக்கிரன், சந்திரன் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். ராகு, கேதுக்கள் ஓர் அளவு நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக் கும். மன அமைதி இருக்கும். வீடு, வாகனம் லாபம் தரும். எடுத்த செயலை இலகுவில் செய்து முடிக்கலாம். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தொழில் துறையில் முன் னேற்றம் இருக்கும். நண்பர்களால் உதவி இருக்கும்.

**கும்பம் : அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3**

குரு, சுக்கிரன், புதன் போன்ற கிரகங்களால் நன்மையுண்டு. கேது, சூரியன் ஆகிய கிரகங்களால் ஓர் அளவு நன்மையுண்டு. பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். வீடு, வாகனம் லாபம் தரும். எடுத்த செயலை தாமதமாகத் தான் நிறைவேற்றலாம். திருமண வாய்ப்புண்டு. பிரயாண வாய்ப்புண்டு. உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தொழில் துறை சிறப்பாக இயங்கும்.

**மீனம் : பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி**

புதன், செவ்வாய், சனி போன்ற கிரகங்களால் நன்மையுண்டு. கேது, சந்திரன் ஆகிய கிரகங்களால் ஓர் அளவு நன்மையுண்டு. பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எடுத்த கருமங்கள் தடைப்பட்டு நிறைவேறும். வீடு, வாகனம் லாபம் தரும். பிரயாண வாய்ப்புண்டு. திருமண வாய்ப்புண்டு. உடல் ஆரோக்கியமாக இருக்கும். தொழில் துறையில் எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்காது.



# மனைவிக்கு மரியாதை செய்கிறாரா மாதவன்?

'அலைபாயுதே' மூலம் திரையுலகில் அடிக்க ஆரம்பித்த மாதவன் அலை தொடர்கின்றது. சினிமாவில் நடிகராக இருப்பதினால் தங்களது தலைக்குப் பின்னால் ஒளி வட்டம் தெரிவதாக நினைத்துக் கொண்டிருக்கும் ஹீரோக்களின் மத்தியில் சாதாரண மனிதனாகப் பழகும் விதத்திலேயே தனித்து ஜொலிக்கிறார்.

மாதவனா? ஹீ இஸ் ஹான்ட்ஸம் என்று இளம் ரசிகைகளும் மாதவனா! 'ப்ரெண்ட்லி ஹீரோ' என்று ஆண்களும் மாதவனா! அடடா எங்களுடைய பக்கத்து வீட்டுக்காரனைப் போலிருக்கிறானே! என்று வயதானவர்களும் சொல்லும் அளவிற்கு மாதவன் சினிமாவின் மூலமாக ஒவ்வொருவர் வீட்டிற்குள்ளும் நுழைந்துவிட்டார்.

படப்பிடிப்புத் தளத்திலும் கூட தயாரிப்பாளர்கள் முதல் கடைநிலைத் தொழிலாளி வரை எல்லோருடனும் கலகலப்பாகப் பழகுவதனால் அவரிடம் எப்போதும் ஒரு கலகலப்பு ஒட்டிக் கொண்டிருக்கின்றது.

டார்ஜிலிங் ...

பரவசம்'' படப்பிடிப்பின் இடைவேளையில் அவரது மனைவி சரிதாவுடன் எதைப்பற்றியோ சீரியஸாக உரையாடிக் கொண்டிருந்தார்.

மாதவனிற்கு பெண் ரசிகைகள் அதிகம். அதனால் அவருடைய குடும்பத்தில் பிரச்சினை என்றும் மனைவியைச் சமாளிப்பதற்காகவே தனது எல்லா ஷூட்டிங்குகளுக்கும் மனைவி சரிதாவை அழைத்து வருகிறார் என கூறப்படுகின்றது.

இப்போது பார்த்தாலே பரவச ஷூட்டிங்கிலும் சரிதாவை மாதவனுடன் பார்க்கும் போது அது உண்மையென்றே நினைக்கத் தோன்றுகின்றது.

மனதில் தோன்றிய கேள்வியை மாதவனிடமே கேட்டுவிட நினைத்து மாதவனின் அருகில் சென்ற நாம் நம்மனதில் பட்டத்தை பட்டென்று சொல்லாமல் வேறு விஷயங்களுடன் பேச்சை ஆரம்பித்தோம்.

கே: 'பார்த்தாலே பரவசம்' படத்தில் இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையாக நடிக்கிறீர்களாமே!

ப: ஆமாம்

கே: ரொமான்டிக் ஹீரோ என்ற இமேஜைத் தாண்டி விட்டீர்கள் போலுள்ளதே!

ப: அப்படிச் சொல்ல முடியாது. ஏனென்றால் இரண்டு குழந்தைகளுக்கு அப்பா ஆனாலும் ரொமாஸ் செய்ய முடியும் என்று நினைப்பவன் நான்.

கே: டி.வி. சீரியல்களின் மூலம் திரைப் பயணத்தை ஆரம்பித்தவர் நீங்கள். ஆனால் சமீபத்தில் டி.வி. சீரியல்களில் நடிக்க மாட்டேன் என்று அதிரடி அறிவிப்புச் செய்தது ஏன்?

ப: இந்தி டி.வி. சீரியல்களில் அறிமுகமானதனால் எனக்கு மும்பையிலேயே வாய்ப்புகளும் வருகின்றன. டி.வி சீரியல்களில் நடிக்க ஒப்பந்தமானால் மும்பைக்கும் சென்னைக்குமாக அலைய வேண்டியுள்ளது. இப்போதிருக்கும் பிஸியான சூழ்நிலையில் என்னால் இப்படி நேரத்தை வீணாக்க முடியாது.

கே: உங்கள் குடும்பத்தில் ரசிகைகளினால் பிரச்சினை ... னால் நான் ...

மனைவி சரிதாவை ஷூட்டிங்குகளுக்கு அழைத்து வருகிறீர்கள் என்றும் கூறுகிறார்கள். இதற்கு என்ன சொல்கிறீர்கள்.

ப: ஹ்ஹஹா! (சிரிக்கிறார்)

பொதுவாக நான் மனைவிக்கு மரியாதை செய்ய நினைப்பவன். எனது தொழிலைப் பொறுத்தவரையில் பெண்களைச் சுற்றியே வாழவேண்டிய சூழ்நிலை.

சினிமாவிலும் கதாநாயகிகளுடன் நெருக்கமாக நடிக்க வேண்டும். சினிமாவை விட்டு வெளியில் வந்தால் அங்கும் ஆண்களை விட பெண்களே அதிக ரசனைத் தன்மை கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

இதனால் சூழ்நிலையை உணர்ந்த நானே முந்திக் கொண்டேன். எனது படங்களின் படப்பிடிப்பு நடைபெறும் இடங்களுக்கு மனைவியையும் அழைத்து வரத் தொடங்கினேன். அதனால் அவளால் எனது தொழிலைப் பற்றிப் புரிந்து கொள்ள முடிந்தது.

கே: திருமணத்துக்கு முன் சரிதா வேலை செய்தாராமே உங்களுடன் விளம்பரப் படங்களில் பணியாற்றினாரா?

ப: இல்லை ஜெட் ஏர்வேஸில் ஏர் ஹொஸ்டர்ஸாக வேலை செய்தார். இப்போது என்னை அன்பாகக் கவனித்துக் கொள்வதே அவரது வேலை.

கே: உங்களுடைய திருமணம் காதல் திருமணமா?

ப: ஆமாம்.

கே: உங்களது முதல் சந்திப்பைப் பற்றி...!

ப: இரண்டு பேரும் தொழிற்கல்வியை ஒன்றாகப் படித்தோம். படித்து முடித்த பின்னர் சரிதா ஏர் ஹோஸ்டர்ஸ் வேலைக்குச் சேர்ந்தார். வேலை கிடைத்த பின்னர் அவர் ஒரு டின்னர் பார்ட்டி வைத்தார். அதற்கு என்னையும் அழைத்திருந்தார். அன்று அவரைச் சந்தித்தபோதே எனக்குள் பட்டாம் பூச்சி பறப்பதை உணர்ந்தேன். அவளுடைய எளிமையும் தன்னடக்கமும் என்னை அவளின் பக்கம் இழுத்துக் கொண்டு சென்றது. ஸோ.. என்னுடைய வாழ்க்கையிலும் இவள் போன்ற ஒருத்தி தான் துணையாக வரவேண்டும் என்று எண்ணினேன். மாதவன் கூறியபடி சரிதாவைப் பார்க்க சட்டென்று மாதவனின் தோள் மீது சாய்ந்து கொண்டு மெல்லிய புன்முறுவல் பூக்கிறார் சரிதா.

—ஷாம்.



மாதவன் மனைவி சரிதாவுடன்

## காதலுக்குப் பச்சைக் கொடி

அபிராமி காதலுக்குப் பச்சைக் கொடி காட்டி விட்டார் என்ற செய்தி காதில் எட்டியதும் விபரமறிவதற்காக அபிராமியைத் தேடிய போது 'ஷக்தி சிதம்பரம்' படப்பிடிப்பில் அகப்பட்டார்.

''என்ன அபிராமி காதலுக்குப் பச்சைக் கொடி காட்டி விட்டீர்களாமே'' கேட்டால் நீங்கள் எப்போதுமே விஷயத்தை அரைகுறையாகத் தான் கேள்விப்படுவீர்களா? என்று முகம் சிவக்க நம்மிடமே எதிர்க்கேள்வி கேட்டவர், தொடர்ந்து கூறுகையில், காதல் திருமணத் தைத்தான் விரும்புகிறேன். அப்போது தான் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு வாழமுடியும் என்று ஒரு பத்திரிகைப் பேட்டியொன்றில் கூறியிருந்தேன். அதனைத் தான் இப்படித் திரித்து காதலுக்குப் பச்சைக் கொடி என்று எழுதி விட்டார்கள் இவ்வாறு விளக்கம் தருகிறார்.

## இனி இவர்கள்...!

*பிரபுவின் படமொன்றில் மோனல், விந்தியா நடிக்கப் போகின்றார்கள்.

*'கபடி கபடி' படத்திற்குப்பிறகு 'சினிமா பார்க்கலாம்' படத்தில் நடித்து வருகிறார் பாண்டியராஜன்.

*'தவசி'யை முடித்த கையோடு 'ராஜ்ஜியம்' படத்தில் பிஸியாகியுள்ளார் விஜயகாந்த்.

*'ஆயிரம் பொய் சொல்லி' படத்தில் நடித்து முடித்து விட்ட பிரபு இப்போது சார்லி சாப்ளினில் நடித்து வருகிறார். இதில் பிரபுவிற்கு ஜோடி அபிராமி.



ரஜினிகாந்த்

## ...மருத்து கேரளாவி... விசேஷ சிகிச்சை

படையப்பாவிற்குப் பின்னர் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் படமொன்றை எதிர்பார்த்து அவரின் ரசிகர்கள் காத்துக் கிடக்கின்றனர்.

கடந்த மாதம் அமெரிக்கா சென்றிருந்தார் ரஜினி. புதிய படம் பற்றிய முடிவுகளை எடுக்கவே அவர் அமெரிக்கா சென்றார் என பத்திரிகைகளும் பரபரப்பாக செய்திகளை வெளியிட்டன.

ஆனால் இப்போது என்னடாவென்றால் பரபரப்பில்லாமல் திரும்பி வந்து பாலக்காட்டில் இயற்கை சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கிறார். தனது உடலுக்கும் மனதுக்கும் புத்துணர்ச்சி

...காந்த் இந்த ...கொள்கிறார். ...திகள் ...க்கின்றன. ...ன்னர் தனது ...லைகளில் ...நருங்கிய ...க்கின்றன. ...ள கூற்றநாடு ...யே ரஜினி ...ம் நிலையம் ...தை நலச் ...ஜினி ...ருக்கிறார்.

மையத்தைச் சுற்றிலும் மரங்கள் 'செடி கொடி'கள், பறவைகளின் ஒலி, வீட்டுக்கு அருகில் ரம்மியமாக ஓடும் ஆறு என்று மனதைக் கவரும் ரம்மியமான சூழலில் சிகிச்சை நடக்கிறது.

மனதையும் உடலையும் பொலிவாக்குவதற்காகவே சூப்பர் ஸ்டார் இந்த சிகிச்சையைப் பெற்று வருகின்றார் என்று கூறப்பட்டாலும் ரஜினிக்கு உடல் நலக்குறைவு என்று தமிழ்த்திரையுலகில் செய்தி உலவி வருகின்றது. இந்த வதந்தியினால் சூப்பர் ஸ்டாரின் இமேஜ் பாதிக்கப்பட்டு விடும் என்பதனால் ரஜினிக்கு எந்த நோயும் இல்லை. அவர் நூறு சதவீதம் நலமுடன் உள்ளார்.

இப்போதைய சிகிச்சை அவருக்கு புத்துணர்ச்சியை வழங்குவதற்காகவே. இதனால் அவர் மேலும் சுறுசுறுப் படைவார்.

ரசிகர்களின் விருப்பப்படி விரைவில் புதிய ... என்று ரஜினி ... இறங்குவார் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதே நேரத்தில் ரஜினிக்கு சிகிச்சையளிக்கும் உன்னி கிருஷ்ண... கூறுகையில்; எங்களுக்குத் தமிழ் புரியவி... ரஜினி ஸாருக்கு மலையாளம் புரியவில்... ...இல்லை, தெரிந்த ஆங்கிலத்தை வைத்து ஓரளவு ...வை. சமாளித்துக் கொள்கிறோம் என்றார். ர... முழுக்க முழுக்க இயற்கை முறை சிகி... ...ஜினிக்கு இயற்கை மருந்துகளும் தான் கொடுக்க... ...சையும் ...ப்படுகின்றன.

இந்த சிகிச்சை முறையில், சிகிச்சை எடுத்துக் கொள்பவர் உள்ளாடை மட்டு... அணிந்து கட்டிறப் படுத்துக் கொள்ள ... வேண்டும். அவரது உடல் முழுவதும் ... எண்ணெய் தேய்க்கப்படும். பின்னர் ...லிகை

உத்தரத்தில் தொங்கும் இரண்டு கயிறுகளைப் பிடித்துக் கொள்ளும் மருத்துவர், தனது கால்களினால் உடலின் சில குறிப்பிட்ட பகுதிகளில் மெல்ல மெல்ல அழுத்தி மிதிப்பார்.

இதன் மூலம் சிகிச்சை பெறுபவருக்கு உடல்சுருக்கு, இரத்த அழுத்தம் போன்றவை சீராகி புத்துணர்ச்சி கிடைக்கும்.

அத்துடன் உடலில் உள்ள சில குறிப்பிட்ட நரம்பில் மெதுவாக நீவி விடப்படும். பின்னர் முக்கிய தசைகளைக் கையினால் சற்று அழுத்தி மாற்றி மாற்றி பிசைய வேண்டும். இதனால் நரம்பில் முடிச்சுகள் இருந்தால் சரியாகும். தொடர்ந்து ஒரு மாதம் முழுவதும் இங்கு தங்கி சிகிச்சை பெற்றால் தோலின் சுருக்கங்கள் நீங்கி வயது குறைந்த தோற்றம் ஏற்படும். ரஜினியின் சிகிச்சை பற்றிய செய்திகள் வெளியானதும் ரசிகர்கள் கொந்தளிக்க ஆரம்பித்து விட்டார்களாம்.

நிலைமையைச் சமாளிப்பதற்காக ரஜினியின் ரசிகர் மன்றத்தலைவர் சத்யநாராயணன் இப்படி விளக்கமளித்திருக்கிறார்.

''நடிகர் மோகன்பாபுவிற்கு ஷூட்டிங்கில் அடிபட்டு விட்டது. அவர் கேரளாவில் சிகிச்சை பெற்று வருகிறார். அவருக்கு உதவியாகத் தான் ரஜினி சென்றுள்ளார்'' என்று கூறியிருக்கிறார்.


வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்... ...பர்கள்
அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்... ...த்துக்கள்!
Little Asia Exporium
கல்யாணப் பட்டுச் சேலைகள், புது ரக மனங்கவர்
சல்வார் கமீஸ்கள், ஆண்கள் பெண்கள் சிறுவர் சிறுமியர்
அனைவருக்குமான ஆடைகளை ஒரே கூரையின் கீழ் நியாயமான
விலையில் பெற்றிட இப்பொழுது வெள்ளவத்தையில்...
காலத்திற்கேற்ற மாற்றத்துடன் லிற்றில் ஏசியா எம்போரியம்
இது கடையில்ல அண்ணே, கடல்!
இல. 317, 317A, Little Asia Exporium Galle Road, Wellawatte, Colombo -06. T.P. 504470


# மும்தாஜின் முனகலுக்கு விலை பதினைந்து லட்சமா?


மும்தாஜ்

நாங்கள் என்னதான் ஆடைக்குறைப்பு செய்து கவர்ச்சியாக நடித்தாலும் படத்தில் எங்களைத் தொட்டுக் கொள்வதற்கு ஊறுகாயாகவே பயன்படுத்துகிறார்கள்.

ஆனால் மும்தாஜ் சும்மா வந்து முனகினாலே பத்துப் பதினைந்து லட்சம் என்று அள்ளிக் கொடுப்பதுடன் கதாநாயகிக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தையும் கொடுக்கிறார்கள். அவ அப்படி என்னதான் மாயம் செய்கிறாளோ தெரியவில்லை என்று மும்தாஜ்மீது எகிறிப் பாய்கிறார் கவர்ச்சி நடிகை அல்போன்ஸா.

## வரவிருக்கும் வசந்தங்கள்

'சர்வாதிகாரி' – கே. சுபாஷின் இயக்கத்தில் அர்ஜுன் நடிக்கும் படம் 'சர்வாதிகாரி'. ராஜ் பிலிம்ஸ் இன்டர் நேஷனல் சார்பில் எம். ராமநாதன் தயாரிக்கும் பத்தாவது படம் இது. அர்ஜுனுக்கு ஜோடியாக பிரபல மும்பை நடிகை ஒருவர் நடிக்கிறார்.

'கிளாஸ் மேட்ஸ் –கதாநாயகனாக மனிஷா கொய்ராலாவின் தம்பி கதாநாயகியாக சித்தார்த் நடிக்கிறார். யுக்தாமுகி, ரீமாசென் ஆகியோர் நடிக்கின்றனர். படத்தின் ஒளிப்பதிவு அஜய் வின்சென்ட்.

# தேறவில்லை தேவயானி


தேவயானி

காதல் கோட்டைக்குப் பின்னர் பரபரப்பாக வளர்ந்து திருமணத்தின் மூலம் கப்சிப்பாகியிருக்கிறார் தேவயானி.

காதல் கணவரைத் தூக்கி விடுவதற்காக திருமணத்திற்குப் பின்னர் வாய்ப்புக் கேட்டு தயாரிப்புக் கம்பனிகளின் வாசல்படி ஏறினார் தேவயானி. ஆனால் பலர் தேவயானியைக் கண்டு கொள்ளவில்லை. ஒரு சிலர் தேவயானி மேல் இரக்கப்பட்டு வாய்ப்புக் கொடுத்தார்கள்.

ஆனாலும் பழைய பொலிவு தேவயானியிடம் இல்லை என்று தயாரிப்பாளர்கள் குறை கூறிக் கொண்டிருக்கின்றனர். எது எப்படியோ திருமணத்திற்குப் பின் தேறவில்லை தேவயானி.

# அம்மா பிள்ளை அபிநயஸ்ரீ

முன்னாள் கவர்ச்சி நடிகை அனுராதாவின் மகள் அபிநயஸ்ரீ கோடம் பாக்கத்தின் இளம் கவர்ச்சிப்புயல். 'சப்தம்' 'ஐஸ்வர்யா', 'பியூட்டி' போன்ற படங்களில் நடித்து வருகிறார். பதினான்கே வயதான அபிநயஸ்ரீயை கவர்ச்சிக்களத்தில் இறக்கியதுடன் பல அறுவைச் சிகிச்சைகளின் மூலம் அங்கங்களையும் மெருகுபடுத்தியிருக்கிறார் தாய்க்குலம். திரையுலகின் நெளிவு சுளிவுகளை மகளுக்குச் சொல்லிக் கொடுத்திருப்பதுடன் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளும் வழிவகைகளையும் கற்றுக் கொடுத்து வருகிறார்.

# அதிஷ்ட ஜோடி


மோனல்

'பார்வை ஒன்றே போதுமே' படத்தின் மூலம் தமிழ்த்திரையுலகின் அதிஷ்ட ஜோடி என்ற பெயரைப் பெற்றிருக்கிறார்கள் மோனலும் – குணாலும். இந்த ஜோடியை வைத்து முரளி கிருஷ்ணா புதிய படமொன்றையும் இயக்கப் போகிறார். படத்திற்கு 'பேசாத கண்ணும் பேசுமே' என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

இன்னொரு கதாநாயகி தெரிவு நடக்கிறது. படத்திற்கு இசை அமைப்பவர் பரணி, ஒளிப்பதிவு – ஸ்ரீசங்கர், படத்தொகுப்பு பி. சாய்சுரேஷ், கலை – மணிவர்மா, நடனம் – சிவசங்கர், சம்பத்ராஜ், ரவிதேவ், கடந்த விஜயதசமியன்று படத்திற்குப் பூஜை போடப்பட்டதுடன் ஏ.வி.எம். ஆர். ஆர் ஒலிப்பதிவுக் கூடத்தில் பாடல் பதிவுடன் படப்பிடிப்பு ஆரம்பமானது.

### *கவர்ச்சி அனுசக்தி ரம்பா*

சேலம் தியேட்டர்ஸ் தயாரிக்கும் மொழிமாற்றப் படம் 'அனுசக்'. இதில் ராஜசேகர் கதாநாயகனாக நடிக்கிறார். கதாநாயகியாக கவர்ச்சி அனுசக்தியாகியிருப்பவர் ரம்பா. இவர்களுடன் எஸ்.பி. பாலசுப்ரமணியம், ஊர்வசி, மனோரமா ஆகியோரும் நடிக்கின்றனர்.


மீனா

# திரை மறைவில்

'மேளச்சத்தத்தைப் பெயராகக் கொண்ட படத்தின் ஹீரோ கண்டி ஷன் திலகமாகியுள்ளார். வானத்தில் தோன்றும் வெளிச்சம் படம் இந்தியில் தயாராவதைக் காரணம் காட்டித்தான் இத்தனை பந்தா காட்ட ஆரம்பித்துள்ளாராம்.

**

வயதுக்கேற்ற கரெக்டர் கிடைத்தால் வெளுத்துக் கட்டி விடலாம் என்ற அதிரடி ஸ்டேட்மென்ட்டுடன் களமிறங்கியிருக்கிறார். பரிமளமான நடிகை முதற்கட்டமாக 'காமராசு', 'ராயல் பேமிலி', 'சினிமா பார்க்கலாம். 'ஸ்வீட்டி' போன்ற படங்களில் நடித்து வருகிறார். அவரது சொந்தப் பெயர் ஸ்நேகா. ஏற்கனவே இவரது பெயரில் ஒரு நடிகை தமிழ்த் திரையுலகைக் கலக்கி வருவதனால் ஸ்நேகா பரிமளமாக மாறியிருக்கிறார்.

**

'பத்ரி' படத்தின் நாயகியான 'பூமி' பூர்வீகம் பஞ்சாப். இந்த பஞ்சாப் பைங்கிளி யின் காதலர் தமிழராம்.

**

இரண்டெழுத்து மலர் நடிகை. அவரை அறிமுகப்படுத்திய இயக்குநரைக் காதலிப்பது தெரிந்த விஷயம். சமீபத்தில் இருவரும் திருமணம் செய்து கொண்டதாகவும் பத்திரிகைகளில் செய்தி வந்தது. ஆனால் இப்போது என்னடாவென்றால் நடிகை யும் இயக்குநரும் பேசிக் கொள்வதில்லையாம்.

**

தாடிக்கார நான்கெழுத்து இயக்குநருக்கும் காதலித்து மணந்த அவரது ஆசை மனைவிக்கும் இடையில் அண்மைக் காலமாக பெரும் தகராறாம். அதனால் கோபமடைந்த இயக்குநர் மனைவியைப் பிரிந்து நண்பரின் வீட்டில் வாழ்கிறாராம்.

**

சமீபத்தில் தென்னாபிரிக்கா சென்று வந்திருக்கிறது 'காதலே சுவாசம்' படயூனிட். இவர்கள் சென்ற சமயம் கடுங்குளிராக இருந்தமையினால் நடுங்கிக்கொண்டே நடித்து முடித்திருக்கின்றனர். அதிலும் மிகவும் பாதிக்கப்பட்டவர் 'பிஷ்' நடிகைதானாம். மெல்லிய சேலையைக் கட்டிக் கொண்டு காலைக் குளிரில் நடிக்கும் போது அம்மணி செத்துப் பிழைத்து விட்டாராம்.

**

சென்னையில் உள்ள பழைய எம்.எல்.ஏ ஹொஸ்டலுக்கும் புதிய எம்.எல்.ஏ. ஹொஸ்டலுக்கும் தடைதாண்டிப் பாய்ந்து கொண்டிருந்தார் தமாஷான ரமேஷ் நடிகர். விஷயத்தை ஆராய்ந்தால், பழைய எம்.எல்.ஏ. ஹொஸ்டலில் 'தயா' படத்தின் ஷூட்டிங்கும் புது ஹொஸ்டலில் 'ஐ லவ் யூடா' படத்தின் ஷூட்டிங்கும் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இரண்டு படத்திலும் 'ரமேஷானவர் நடிக்கிறார். அதனால் தான் இந்த ஹொஸ்டல் சுவர் தாண்டலில் ஈடுபட்டிருக்கிறார்.

**

நின்று பேச முடியாத அளவுக்கு பரபரப்பாகியிருக்கும் 'ரன்' நடிகை, சந்தர்ப்பம் கிடைக்கும் போது தன் காதல் கதையை ஆதிமுதல் அந்தம் வரை சொல்லத் தொடங்கி விடுகிறார். பக்கத்திலிருப்பவர் சக நடிகரா, நடிகையா? லைட்போயா யாரென்று பார்ப்பதில்லையாம்.

# 'ஹலோ மாமா'வில் நாகார்ஜுன்-சிம்ரன்

டைரக்டர் கே. எஸ். ரவிக்குமார் தெலுங்கில் இயக்கிய 'பாவ நச்சாடு' என்ற படம் இப்போது தமிழிற்கு வருகின்றது. 'ஹலோ மாமா' என்று பெயரிட்டிருக்கிறார்கள். கதாநாயகனாக நாகார்ஜுனா நடிக்கிறார். இவருக்கு ஜோடியாக சிம்ரன், ரீமா சென், சுமா ரங்கநாத் ஆகியோர் நடிக்கிறார்கள். இவர்களுடன் வித்தியாசமான பாத்திரத்தில் மனோரமா, ராஜா ரவீந்தர் ஆகியோர் நடித்துள்ளனர். நகைச்சுவையுடன் கூடிய கவர்ச்சி கலந்த கதை வசனத்தை ரவிசங்கர் எழுத பாடல்கள் பழனி பாரதி, முத்து லிங்கம்.


நாகார்ஜுன சிம்ரன்




# சுகதேகியாக இருந்தால் உடல் மெலிவு குறித்து கவலை வேண்டாம்

## முட்டை, கௌப்பி, கடலை, உடல் நிறையை அதிகரிக்கும்

கே: எனது வயது 17 (ஆண்) நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவன். பாடசாலை நேரம் தவிர வீட்டிலே தோட்டத்திலும் உழைக்க வேண்டிய தேவை எனக்கு இருக்கிறது. இதற்கான உடல் ஆரோக்கியத்தில் கவனமாக இருக்கிறேன். இருந்த பொழுதும் என் உடல் மிகவும் மெலிவாக இருக்கிறது. எனக்கு எந்தவிதமான நோயும் இல்லை. கெட்ட பழக்கங்களில் ஈடுபாடும் இல்லை. நான் எவ்வளவு முயற்சி செய்தும் என் உடல் மெலிவைப் போக்க முடியவில்லை. பலவகையான 'ரொனிக்', சிறந்த பால்மா வகைகள் என பலவற்றைப் பாவித்தும் பலன் கிடைக்கவில்லை. தினந்தோறும் இறைச்சி, மீன் என்று வாங்கிச் சமைப்பதற்கு எம் பொருளாதார நிலை இடம் கொடுக்காவிட்டாலும் வாரத்தில் இரண்டு நாட்கள் மச்சம் சமைப்போம். பாடசாலையில் என்னை சுள்ளித்தடி என்று பகிடி செய்கிறார்கள். எனது உடம்பு பருப்பதற்கு ஏதாவது நல்ல 'ரொனிக்' இருந்தால் அறியத்தருவீர் களா? எந்த பால்மாவகை சிறந்தது. உடல் நிறை கூடுவதற்கு வேறு என்ன செய்யலாம்? உங்கள் ஆலோசனையை எதிர்பார்க்கிறேன்.

ப : *சுகதேகியான உங்களுக்கு எந்தவிதமான ரொனிக்கோ விசேட பால்மாவகைகளோ தேவையில்லை. இவை நோயாளர்களுக் கும் சிறுவர்களுக்கும் கர்ப்பிணித் தாய்மாருக்குமே தேவை. தேவையற்ற முறையில் இவ்வாறான உணவு வகைகளையும் 'ரொனிக்' வகைகளையும் வாங்குவதில் பணத்தை விரயமாக்க வேண் டாம். இந்தப் பணத்தில் தினம் தோறும் ஒரு முட்டை வாங்கி உண்ணுங்கள். உங்கள் உணவுக்கு மேலதிகமாக மாலைவேளையில் கௌப்பி அல்லது கடலை அவித்து சாப்பிடுங்கள். இது புரதச்சத்து நிறைந்தது. ஒவ்வொருநாளும் உணவிலே மரக்கறி இலைவகைகளை அதிகமாகச் சேருங்கள். இது குடலின் தொழிற்பாட்டைக் கூட்டி உணவில் சமிபாடு அகத்துறிஞ்சல் என்பவற்றை அதிகரிக்கச் செய்வதுடன் பசியையும் கூட்டும். இதனால் நீங்கள் சாதாரணமாகச் சாப்பிடும் உணவின் அளவைக் கூட்டிக்கொள்ளலாம். குடலிலே பூச்சி (புழு) இருந்தாலும் உடல்மெலிவும் இரத்தக்குறைவும் காணப்படலாம். எனவே நீங்கள் பூச்சி மருந்தையும் ஒரு தடவை பாவித்துக் கொள்ளுங் கள். மனச் சஞ்சலம், கவலை, பதற்றம் என்பவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். இவற்றைக் கடைப்பிடித்து வந்தால் உங்கள் உடல்நிறை சிறிதுசிறிதாக அதிகரிக்கும். இதற்கு தொடர்ச்சியான முயற்சி அவசியம்.*

கே: எனது வயது 17 (ஆண்) பாடசாலை மாணவன். யாருக்கும் சொல்ல முடியாமல் எனது மனதில் உறுத்திக் கொண்டிருக்கும் ஒரு விடயத்தை இந்த மருத்துவப் பகுதியில் தெளிவுபடுத்த விரும்புகிறேன். எனது ஆண் உறுப்பின் முன்பகுதி தோலினால் மூடப் பட்டுள்ளது. சிறு வயதிலிருந்தே எனக்கு இது இருந்து வருகின்றது. இதன் இயக்கத்திலோ தொழிற் பாட்டிலோ எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. ஆனால் சிலசமயம் சிறுநீர்கழிக்க ஆரம்பிக்கும் போது ஆணுறுப்பின் முன்பகுதி வீங்கி வருகின்றது. சிலசமயம் சிறுநீர் கழித்தபின் எரிவு இருக்கும். ஆண்குறியின் முனைப்பகுதியை மூடியிருக்கும் தோலை மேலே உயர்த்த முடியாது உள்ளது. எனது இந்தப் பிரச் சினைகள் எல்லாவற்றிற்கும் காரணம் என்ன? இவற்றிற்கு ஏதாவது சிகிச்சை தேவையா. இந்த முன்தோலை விரியச் செய்வதற்கு என்ன செய்ய வேண்டும்.

ப : *உங்களுக்குக் காணப்படும் இந்த முன்தோல் சுருக்கத்தை* – **Phimosis** *பைமோசிஸ் என்று சொல்லுவார்கள். சாதாரணமாக முன்தோல் உயர்த்தக் கூடியதாக இருக்க வேண்டும். இவ்வாறு உயர்த்த முடியாமல் முன் தோலில் சுருக்கம் இருப்பதையே பைமோசிஸ் என்று சொல்லுவார்கள். பைமோசிஸ் கடுமையாக இருந்தால் சிறுநீர்கழிக்கும் போது இந்த முனைப் பகுதியில் சிறுநீர் தேக்கமடைவதால் இப்பகுதியில் வீக்கம் ஏற்படலாம். உங்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த முன்தோல் சுருக் கத்தை [illegible] மூலம் நிவர்த்தி செய்து கொள்ளுதல் அவசியமாகும். இவ்வாறு செய்யா விடின் உங்களுக்கு கிருமி தொற்றுதல்கள், சிறுநீரகத்திலே சில பாதிப்புகள் அல்லது மீண்டும் மீண்டும் சிறுநீரிலே கிருமி தொற்றுகை, உடலுறவின் போது சில கஷ்டங்கள் போன்றவை ஏற்பட இடமுண்டு. சிறு பிள்ளைக்கு இவ்வாறான முன் தோல் சுருக்கம் காணப்படின் உடனடியாக சத்திரசிகிச்சை செய்ய வேண் டிய அவசியமில்லை. அவர்கள் வளர்ந்து பெரியவர்களாக வரும்போது எந்தவித சிகிச்சைகளும் இல்லாமலேயே அது விரிவடைய சந்தர்ப்பம் இருக்கிறது. உங்களுக்கு 17 வயதிலும் இந்த முன் தோல் சுருக்கம் காணப் படுவதால் சத்திரசிகிச்சை மூலம் இந்த முன்தோலை அகற்றிக் கொள்வது அவசியம். பல ஆண்களுக்கு இது காணப்படுகிறது. பலர் சத்திரசிகிச்சை மூலம் இதனை நிவர்த்தி செய்திருக் கிறார்கள். முஸ்லிம் சகோதரர்கள் எல்லோருமே இந்த முன்தோல் நீக்கத்தை சாதாரணமாகச் செய்து கொள்கிறார்கள். எனவே நீங்களும் தயக்கம் காட்டாமல் சத்திரசிகிச்சை வைத்திய நிபுணரைச் சந்தித்து இதனைச் செய்து கொள்ளுங்கள்.*

> இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் சி.சிவன்சுதன். நீங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:—
> இலவச மருத்துவ ஆலோசனை
> 'சுடர் ஒளி'
> 36/2, பிரெட்றிகா வீதி,
> கொழும்பு — 06.

**ஏற்பூசி போட்ட பின்பும் ஏற்பு வலி ஏற்படுமா?**

கே : எனது அம்மம்மாவிற்கு வயது 67. அவருக்கு கால் பெருவிரலில் விறகு குத்தி ஒரு காயம் ஏற்பட்டது. இந்தக் காயத்திற்கு மருந்து செய்ததுடன் ஏற்பூசியும் போட்டோம். இந்தக் காயம் மாறுவதற்கு சிறிது காலம் எடுத்தது. அந்தக் காயம் முற்றாக மாறும் தறுவாயில் இருக்கும் பொழுது (காயம் ஏற்பட்ட தினத்திலிருந்து 2 மாதங்களின் பின்) அவருக்கு ஏற்புவலி ஏற்பட்டு இறந்து விட்டார். ஏற்பூசி போட்டபின்பும் அவருக்கு ஏற்புவலி ஏற்படக் காரணம் என்ன? அம்மம்மாவின் உயிரைக் காப்பாற்றியிருக்க முடியாதா?

ப : *ஏற்பு நோயை முற்றாகத் தடுப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக் கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் உங்கள் அம்மம்மாவிற்கு ஏற்பட்ட இந்த நிகழ்வு துர்அதிஷ்டவசமானதே. காயம் ஏற்பட்ட ஒருவருக்கு காயம் ஏற்பட்டவுடன் முதலாம் ஏற்பூசியும் ஆறு வாரங்களின் பின் இரண்டாம் ஏற்பூசியும் ஆறு மாதங்களின் பின் மூன்றாம் ஏற்பூசியும் போட வேண்டும். உங்கள் அம்மம் மாவிற்கு உஆம் ஏற்பூசி போடப்பட வில்லை. முன்பு ஏற்பூசி போடப்படாத ஒருவருக்கு ஒரு ஏற்பூசி போடுவதனால் மாத்திரம் ஏற்புவலி நோயிலிருந்து முற்றான பாதுகாப்பைக் கொடுக்க முடியாது. இது உங்கள் அம்மம்மாவிற்கு இந்த நோய் ஏற்படக் காரண மாக இருந்திருக்கலாம்.*

*இந்த ஊசிமருந்து 2°C – 8°C வரையான வெப்ப நிலையிலேயே பாதுகாக்கப்பட வேண்டும். யுத்த சூழ்நிலை காரணமாக இந்த மருந்தை இவ்வெப்ப நிலையில் பாதுகாப்ப தில் ஏற்பட்ட ஏதாவது தடங்கலும் இந்த மருந்து சரியான முறையில் தொழிற்படாமைக்குக் காரண மாக இருந்திருக்க முடியும். மூன்று ஏற்பூசிகளும் சரியான முறையில் போடப்பட்ட ஒருவருக்கு ஐந்து வருட காலத்திற்கு ஏற்புவலி நோயிலிருந்து பூரண பாதுகாப்பு இருக்கும். இந்தக் காலப்பகுதியில் ஏதாவது காயங்கள் ஏற்பட்டாலும் ஏற்பூசி போடப்பட வேண்டிய அவசியமில்லை.*

*ஏற்புவலி ஏற்பட்டபின்பும் அது ஆரம்ப நிலையில் கண்டறியப்பட்டு தகுந்த சிகிச்சை கொடுக்கப்பட்டால் அந்த நோயாளர்களைக் காப்பாற்ற முடியும். இதற்கு அதிதீவிர சிகிச்சை முறைகள் தேவைப்படும்.*

**பெண்களின் மார்பகங்களில் சமசீரின்மை காணப்படாதது ஒரு நோயா?**

கே: எனது வயது 19 (பெண்). 13 வயதில் பருவம் அடைந்தேன். மாதவிடாய் ஒழுங்காக வருகிறது. வேறு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் எனது மார்பகங்கள் இன் னும் மற்றப் பெண்களைப் போல் வளர்ச்சி அடையவில்லை. மிகவும் சிறியதாக இருக்கிறது. அத்துடன் இடதுபக்க மார்பகம் வலது பக்கத்திலும் பார்க்கச் சிறியதாக உள்ளது. இவை காரணமாக 'நான் ஒரு குறை பாடுள்ள பெண்ணா?' என்ற மனச் சஞ்சலமும் தாழ்வு மனப்பான்மையும் என்னிலே ஏற்பட்டிருக்கிறது. நான் திருமணம் செய்தால் பிரச்சி னைகள் இருக்குமா? குழந்தைகள் கிடைக் குமா? மனதுக்கு ஆறுதலான ஒரு பதிலை எதிர்பார்த்து இருக்கிறேன்.

ப : *மக்களிடையே உயரத்தில் மாறுபாடு இருப்பதுபோல நிறத்திலே மாறு பாடு இருப்பது போல உடற்பரும னில் மாறுபாடு இருப்பது போல் மார்பகங்களின் பருமனும் சிலரிலே சிறிதாகவும் வேறுசிலரில் பெரி தாகவும் இருக்கலாம். எனவே இது உங்களுக்கு உள்ள ஒரு குறைபாடு அல்ல. அத்துடன் மார்பகங்களின் பருமனில் சமச்சீரற்ற தன்மை காணப்படுவதும் பெண்களில் சாதாரணமாகக் காணப்படும் ஒரு தோற்றப்பாடாகும். எனவே இவற் றையிட்டு நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. உங்கள் குடும்ப வாழ்க்கையிலோ குழந்தை கள் பெற்றுக்கொள்வதிலோ எந்தப் பிரச்சினையும் இருக்க மாட்டாது.*

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 10.00–10.30 | சாட் ஷோ | ஆனந்தபவன் | ஆலோசனைநேரம் | பில்லர் | இப்படிக்கு நீங்கள் | | |
| 10.30–11.00 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | | |
| 11.00–11.30 | சின்னத்திரை | சனிதபதனி | புஷ்பாஞ்சலி | சீமான்களே சீமாட்டி.. | இப்படிக்கு தென்றல் | குட்டிச் சுட்டி | காலைக்கதிர் குட்டிச் சுட்டி |
| 11.30–12.00 | தேனிசை சங்கமம் | தேனிசை சங்கமம் | தேனமுது | சப்தஸ்வரங்கள் | திரை இசை | | |
| 12.00–12.30 | பி.பி.ஸி. செய்தி | பி.பி.ஸி. செய்தி | பி.பி.ஸி. செய்தி | பி.பி.ஸி. செய்தி | பி.பி.ஸி. செய்தி | சின்னச் சின்ன ஆசைகள் | |
| 12.30–13.00 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | | |
| 13.00–13.30 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கென்ட் மெட்னி | சக்தி வீக்கென்ட் மெட்னி |
| | | | | | | | |
| 13.30–14.00 | குலவிளக்கு | குலவிளக்கு | குலவிளக்கு | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00–14.30 | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | | |
| 14.30–15.00 | | | | | | | |
| 15.30–16.00 | | | | | | இளையகானம் | ரிலாக்ஸ் |
| 16.00–16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | டைம் |
| 16.30–17.00 | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | செம்பருத்தி | ஜனனி |
| 17.00–17.30 | பூஞ்சோலை | தில்லானாதில்லானா | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டு | தமிழ் கார்ட்டூன் | இயந்திரப் பறவை | சனிதபதனி |
| 17.30–18.00 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | தேனிசை சங்கமம் | தேனிசை சங்கமம் |
| 18.00–18.30 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | பெப்ஸி உங்கள்... | தந்திர பூமி | ஆலோசனை நேரம் | இப்படிக்கு நீங்கள் |
| 18.30–19.00 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | சாட் ஷோ | ஆனந்தபவன் |
| 19.00–19.30 | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | செம்பருத்தி | சப்தஸ்வரம் |
| 19.30–20.00 | சின்னத்திரை | சனிதபதனி | புஷ்பாஞ்சலி | சீமான்களே சீமாட்டி ... | இப்படிக்கு தென்றல் | இளையகானம் | பில்லர் |
| 20.00–20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30–21.00 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | இயந்திரப்பறவை | ஜன்னல் |

# வாக்காளரை வியப்பில் ஆழ்த்தும் வேட்பாளரின் குத்துக்கரணங்கள்

## டிசம்பர் 5இல் இவற்றுக்கெல்லாம் பதில்

சாதாரணமாக நடைபெற முடியாத விசித்திரமான சம்பவங்கள் பல இந்த தேர்தல் காலத்தில் மட்டக்களப்பில் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன.

இந்த தேர்தலில் எப்படியாவது வெற்றிபெற்று நாடாளுமன்றம் சென்றுவிட வேண்டும் என்கின்ற அவாவில் மட்டக்களப்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் போடும் கூத்துக்கள், அடிக்கும் 'பல்டி'கள் இங்குள்ள வாக்காளர்களை வியப்பில் ஆழ்த்தி வருகின்றன.

தமது தேர்தல்கால நகர்வுகளை வாக்காளர்கள் வெறுப்புடன் பார்த்துக் கொண்டிருப்பதையும் தமது கொள்கைகள் பற்றிய பலத்த சந்தேகங்கள் வாக்காளர்கள் மத்தியில் ஏற்பட்டிருப்பதையும் பொருட்படுத்தாமல் தேர்தலில் வெற்றி பெற்றுவிடுவதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு சில அரசியற் கட்சிகளும், சில வேட்பாளர்களும் செயற்பட்டு வருகின்றனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளரும், முன்னாள் பிரதி அமைச்சருமான கணேசமூர்த்தி தேர்தல் அறிவிக்கப்பட்டு சில நாட்களின் பின்பு கட்சி தலைமையுடன் முரண்பட்டுக் கொண்டு திடீரென்று எதிரணியான ஐ.தே.கட்சிக்குத் தாவியிருந்தார்.

அதனை தொடர்ந்து அவர் இத்தேர்தலில் ஐ.தே.க. சார்பாகப் போட்டியிடப் போகிறார் என செய்திகள் வெளியாகி இருந்தன.

பின்னர் அங்கும் ஏதோ பிரச்சினைகள் ஏற்பட்டுவிட, சுவரில் எறிந்த பந்து போன்று மீண்டும் பொ.ஐ.மு. க்கே அவர் திரும்பி வந்து இப்பொழுது கதிரைச் சின்னத்தில் போட்டியிடுகின்றனர்.

இதே போன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐ.தே.கட்சி சார்பாக கடந்த இரண்டு பொதுத் தேர்தல்களில் போட்டியிட்டவரும், அக்கட்சியின் மட்டக்களப்பு நகர அமைப்பாளருமான இராஜன் சத்தியமூர்த்தி தேர்தலின்போது தனக்கு தலைமை வேட்பாளர் பதவி கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் கட்சியை விட்டு வெளியேறினார்.

வேட்பாளர் நியமனம் தாக்கல் செய்யப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக அவர் தமிழ் காங்கிரஸ் சார்பாக தேர்தலில் போட்டியிடப்போவதாக அறிவித்திருந்தார்.

தமிழ் தேசியம் சம்பந்தமாக சுமார் இரண்டு தசாப்த காலமாக எதிரான கொள்கைகளை தனதாகக் கொண்டிருந்த இவரை உதய சூரியன் சின்னத்தின் கீழ் போட்டிபோட அனுமதிக்கக் கூடாது என்று கூட்டணித் தொண்டர்கள் மத்தியில் இருந்து எதிர்ப்புக் கிளம்பியது.

தற்பொழுது இரண்டும் கெட்டான் நிலையில் அவர் இருந்து வருகிறார்.

இதேவேளை, தமிழ் இனத்தின் விடுதலைப் போருக்கு எதிரான கொள்கைகளை கடந்த காலத்தில் கொண்டிருந்தவர் என்று கூறி கூட்டணியினரால் புறந்தள்ளபட்டிருந்த இராஜன் சத்தியமூர்த்தியுடன் கைகோத்தபடி, அதே கூட்டணியின் உறுப்பினரான செல்வேந்திரன் என்பவர் இன்று வாக்கு வேட்டைக்குப் புறப்பட்டிருக்கின்றார்.

தந்தை செல்வாவின் நாமம், தமிழ் விடுதலை வேட்கை என்று எதையுமே துணைக்கழைக்காமல், 'அண்ணன் இராஜன் சத்தியமூர்த்தியின் துணைகொண்டு வெற்றிபெறுவேன்' என்று பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்து வாக்குக் கேட்டு வருகின்றார் அந்த கூட்டணி உறுப்பினர்.

கடந்த தேர்தலில் தேசிய ஐக்கிய முன்னணியில் போட்டியிட்ட மர்சூக் என்பவர் இம்முறை முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக போட்டியடுகின்றார். அதேபோன்று கடந்த தேர்தலில் ஐ.தே.க வில் போட்டியிட்ட அப்துல் மர்சூக் இந்தத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் அணியில் போட்டியிடுகின்றார். இவர்களும் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் எதிர் அணிக்குத் தாவியவர்கள் தான்.

முன்னர் ஈரோஸ் அமைப்பு சார்பாக தேர்தலில் போட்டியிட்டு, பின்னர் கடந்த பொதுத் தேர்தலின் போது ஈ.பி.டி.பி சார்பாக போட்டியிட்ட பிரபா என்பவர் இம்முறை மற்றொரு அணியில் தேர்தல் களம் இறங்கியுள்ளார்.



### மட்டக்களப்பு தேர்தல் களம்

இப்படி, தமது கட்சி என்ன, கொள்கை என்ன என்பதை அறவே மறந்த நிலையில், ஆட்சியையும் அதிகாரத்தையும் மட்டுமே நோக்காகக் கொண்டு அணிமாறித்திரியும் வேட்பாளர்கள் ஒருபுறம் இருக்க, எப்படியாவது இத்தேர்தலில் வென்றுவிட வேண்டும் என்ற எண்ணத்தில் நிறைவேற முடியாத வாக்குறுதிகளை அள்ளி வீசும் கட்சிகளும் இங்கு இருக்கவே செய்கின்றன.

இம்முறை மட்டக்களப்பில் மூன்று முஸ்லிம்களையும், ஐந்து தமிழர்களையும் தனது அணி சார்பாக தேர்தலில் இறக்கியுள்ளது ஐ.தே.கட்சி. இந்தத் தேர்தலில் ஒரு மு[illegible]ம் வெற்றிபெறும் பட்சத்தில் அணியிலுள்ள தமிழ் வேட்பாளர் ஒருவருக்கு தேசியப்பட்[illegible]யல் நியமனம் வழங்க இருப்பதாக்க் கூறி ஐ.தே.க பிரசாரம் செய்துவருகின்றது.

ஐ.தே.கட்சிக்கு வாக்களிப்பதன் மூலம் எப்படியாவது ஒரு தமிழ் உறுப்பினரை பெற்றுவிட முடியும் என்கின்ற பிரமையை தமிழ் வாக்காளர்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்கிலேயே அந்தப் பிரசாரத்தை அது செய்து வருகின்றது.

ஆனால், ஒரு தமிழ் வேட்பாளருக்கு தேசியப் பட்டியல் நியமனம் வழங்கப்படும் என்பதற்கான எந்தவித நடைமுறைச் சாத்தியமும் கிடையாது என்பதுடன் அதற்கான சரியான உத்தரவாதமும் வழங்கப்படவில்லை என்பதுதான் உண்மை.

ஐ.தே.கட்சியைப் பொறுத்தவரையில் அது தனது தேசியப் பட்டியல் நியமனங்களை ஏற்கனவே தயார் செய்து வெளியிட்டும் விட்டது. அந்தப் பட்டியலில் உள்ள 29 பெயர்களில் மட்டக்களப்பு தமிழ் வேட்பாளர்களின் பெயர் எதுவுமே சேர்க்கப்படவில்லை.

மட்டக்களப்பு ஐ.தே.க தமிழ் வேட்பாளர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் ஒன்றும் மிகுந்த செல்வாக்குள்ளவர்கள் அல்லர்.

அப்படி இருக்கை[illegible]ல் ஏற்கனவே ஐ.தே.கவின் தேசியப் பட்டியலுக்கான அறிவிக்கப்பட்டிருக்கும் 29 முக்கியஸ்தர்களையும் மீறி மட்டக்களப்பு தமிழ் வேட்பாளர்களில் ஒருவருக்கு நியமனம் வழங்கப்படக் கூடிய சாத்தியம் இல்லை என்றே ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

இவ்வாறு இந்தத் தேர்தலில் குதித்துள்ள வேட்பாளர்களின் கொள்கைகள், அரசியல் கட்சிகளின் வாக்குறுதிகள் பலத்த சந்தேகங்களை வாக்காளர்கள் மத்தியில் ஏற்படுத்தி உள்ளன.

இந்தத் தேர்தலில் எப்படியா[illegible] வெற்றிபெற்றுவிட வேண்டும் என்கின்ற வேட்கையில் அரசியல்வாதிகள் நடத்தும் கூத்துக்கள் அனைத்துமே வாக்காளர்களால் கவனமாக அவதானிக்கப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் டிசம்பர் 5ஆம் திகதி அதற்கான பதிலை வழங்க வாக்காளர்கள் தயாராகி வருவ[illegible]யும் காணமுடிகின்றது.

—சாத்வீகன்

# வாசகர் இதயம் பேசுகிறது

"பொறுமையைக் காக்க வேண்டியவர்கள் சாத்தான் களாக மாறும் அவலம்" என்ற தலைப்பிலான தேரடி அரட் டைக்கு கல்முனையில் இருந்து வந்த மறுப்புக் கடிதத்தைப் பிரசுரித்திருந்தீர்கள். மறுப்பு வெளியிட்டு மன்னிப்புக் கோரச் சொல்பவர்கள் மீண்டும் ஒரு தடவை தேரடி அரட்டையைப் படித்துப் பார்க்கட்டும்.

**க. மதிவதனி, புலோலி.**

'சுடர் ஒளி' வார இதழ் அட்டைப் படங்கள் வாசகர்களை நன்கு கவருகின்றன. சுடர் ஒளிக்கு வயது ஒன்றுதான். ஆனால் அதன் திறமை அதிகம். வேலை வாய்ப்புகள் தொடர் பான வர்த்தமானி அறிவித்தல்களையும் பிரசுரித்தால் என்-போன்ற ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பயனடைய முடியும்.

**செ. ஸ்ரீரகுநாதன், ஆனை விழுந்தான்.**

நீ சுமந்து வரும் ஆக்கங்கள் அனைத்தும் சிறந்தவை. உன் வளர்ச் சியின் வேகம் நாளிதழில் தெரிகிறது.

உனது நாளிதழ் தமிழ் மக்களின் விடியலுக்கு துணையாய் வரவேண்டும். எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

**கு. தனேஸ்குமார், வவுனியா.**

'சுடர் ஒளி'யே உன் ஆக்கங்கள் ஒவ்வொன்றும் சூப்பர். ஆயுத முனையை விட உன்பேனா முனை கூர்மையானது. நிரூபித்து காட்டுவாய் .

**எஸ். பவுச்சா, பருத்தித்துறை.**

ஒக்டோபர் 21 இதழில் அரசியலில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளையும், கட்சிகளின் நிலை வரங்களையும் நீ தந்த விதம் சூப்பர். மற்றும் கிளிநொச்சி, மனித எலும்புக் கூடுகள் பற்றிய செய்திகள் மனதை அதிர வைத்தன. 'ஓயாத அலைகள்' வெளிவராத தகவல்களும் படு ஜோர்.

**ஜே. எம். பாரீஸ், தெல்தெனியா.**

இதயம் கவரும் பத்திரிகை சுடர் ஒளியே, உன் சுடர் முழு உலகிற்கும் பிரயோசனமான விடயங்களை அள்ளி வழங்கி வாசக நேயர்களின் இதயத்தைக் கவருகிறது. அனைத்தும் வெகுஜோர்.

**"கவிப்பிரியன் நசூர்தீன், தெல்தொட்ட.**

நவம்பர் 04, 2001 இல் வெளியான "களத்தில்" பதினொரு கட்சிகள் வடக்கில் சூடு பிடிக்கிறது", "வரலாற் றில் பின்னிப் பிணைந்த பேரம் பேசும் அரசியல்", "தமிழ் கட்சிகள் கூட்டமைப்பு குறிக்கோளை எட்டுமா?", "வேட்பாளர் கள் பட்டியலோடு ஐக்கியம் ஓயக் கூடாது திணறடிக்கும் வேட்பா ளர்கள் திக்குமுக்காடும் வாக்காளர்கள்" போன்ற அரசியல் செய் திகள் மிகவும் ஆழமாக ஆராயப்பட்டிருந்தன. வாழ்த்துக்கள்.

**கே. அக்கீத், செட்டிகுளம்.**

வாசகர் நெஞ்சங்களை கொள்ளை கொண்ட சுடர் ஒளியே உனது நாளிதழுக்கு எனது நல்வாழ்த்துக்கள்.

தொடரட்டும் உனது பணி உலகெங்கும் உள்ள தமிழ் மக்களுக்கு. என்றாலும் சிறுதவறு. 29.10.2001 சுடர் ஒளி 3ஆம் பக்கத்தில் சுடச் சுடச் செய்திகளை வெளியிடும் சுடர் ஒளியே என்பது சுடச் சுடச் செய்திகளை வெளியிடும் சுடர் ஒளியே என்று தவறுதலாகப் பிரசுரிக்கப் பட்டுள்ளது. பிழையைச் சுட்டிக்காட்டினேனே தவிர குறை கூறவில்லை.

**ஏ.எச். மொகமட் றிஸ்வி, கொழும்பு--08.**



'சுடர் ஒளி' நாளிதழ் வெளியீடு சூப்பர். ஏனைய பத்திரிகைகளை மிக விரைவில் ஓரம் கட்ட வேண்டுமானால் உங்கள் நாளிதழின் முன்பக்கம் விறுவிறுப்பான அரசியல், யுத்தச் செய்திகளுடனும் கடைசிப் பக்கம் எப்பொழு தும் கிரிக்கெட் வீரர்களின் படங்களுடனும் வெளிவர வேண்டும்.

**கிரான் ஜரான்.**

ஒக்டோபர் 28ஆம் திகதி வெளியான சுடர் ஒளி யில் தேர்தல் கூட்டமைப்பு, ஆப்கான் மீதான குண்டு வீச்சுக்கு அமெரிக்காவுக்கு பதிலடி, மலையகத்தில் தொழிற்சங்க ஒற்றுமை, கண்டியில் தமிழ் பாடசாலை நிறுவ அமைச்சர் உறுதி ஆகியவை சிறப்பாக இருந்தன.

**அ. ராஜேஸ்வரி, லோவர் கிரன்லி.**

வன்னிவாழ் தமிழ் மக்களின் இதயத்தில் இடம் பிடித்த உனது ஆக்கங்களான பி. ரமணனின் கள நிலவரமும் தேரடி அரட்டையும் அருமை. அத்துடன் பித்தன் பதில்கள் பகுதி சுவாரஸ்யமாகவும் சுவையானதாகவும் உள்ளது.

**இ. சஜீவன், புதுக்குடியிருப்பு.**

நவம்பர் வெளியான "பல்கலைப் பட்டம் பெறும் தகுதி ஜீவாவுக்கு உண்டா" என்ற பகுதியில் க. குணாவின் கேள்விகள் நியாயமானவையாகவே உள்ளன. என்னை இந்தப் பகுதி திரும்பத் திரும்ப இரு தடவைகள் வாசிக்க வைத்து விட்டது. மேலும் விளையாட்டுச் செய்தியை வழங்க முழுப்பக்கத்தையே நீ மட்டுமே ஒதுக்கியுள்ளாய்!

**இ. பரணீதரன், பண்ணாகம்.**

வண்ணப்படங்களுடனும் விறுவிறுப்பூட்டும் ஆக்கங்கள் பல வற்றுடனும் உலாவரும் சுடர் ஒளியே! உன வருகையிலி ருந்து வன்னி வாழ் தமிழ் நெஞ்சங்களில் ஒளிமயம். வாழ்க சுடர் ஒளியே! உன் சேவை பொன்மேலும் சுடர் விட்டுப் பிரகா சிக்க வன்னி நெஞ்சங்களின் இதயங் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

**கு.தயாழினி, அக்கராயன்.**

என் அன்புக்கினிய சுடர் ஒளியே! நீ தாங்கி வரும் அம்சங்கள் பிரமாதம். உனது ஒரு வருட பூர்த்தியையிட்டு சுடர் ஒளி நாளிதழ் வருவது வரவேற்கத்தக்கது. மேலும் உனது சேவை தொடர எனது மனம் கனிந்த வாழ்த்துக்கள்.

**சி.சுமணன், புன்னாலைக்கட்டுவன் தெற்கு.**

தித்திக்கும் செய்திகளை வழங்கும் சுடர் ஒளியே உனது பல்லாயிரம் வாசகர்களில் நாங்களும் இணைந்துள்ளோம்.

எமது ஆக்கங்களுக்கு சுடர் ஒளியில் இடம் கிடைத்தால் அது ஒரு வரப்பிரசாதமே.....!

**சு.ராதிகா, முல்லைத்தீவு**



"என்ன இருந்தாலும் அரசியல்வாதிக்கு ரொம்பவும் தைரியம்தான். எனக்கு நீங்க, ஓட்டுப்போட மறந்தாலும் கள்ள ஓட்டுப்போட்டு ஜெயிச்சாவது நான் உங்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை காப்பற்றுவேன்று சொல்றாரு!"

# தொழிலாளர் சம்பள கமிஷன் ஜனாதிபதியின் தேர்தல் குண்டு

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாக ஆராய ஆணைக்குழு நியமிக்கப்படும் என்பது ஜனாதிபதியின் தேர்தல் குண்டு. எத்தனையோ கமிஷன்களைக் கண்டு சலிப்படைந்தவர்கள் தோட்டத் தொழிலாளர்கள். இப்படியான உறுதி மொழிகளைக் கேட்டு அவர்கள் ஏமாறத் தயாராக இல்லை என்கிறார் ஊவா மாகாணசபை உறுப்பினரும் பதுளை மாவட்டத்தில் ஐ.தே.க பட்டியலில் போட்டியிடுபவருமான கே.வேலாயுதம்.



கே.வேலாயுதம்

பதுளையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசும் பொழுதே அவர் இப்படிக் குறிப்பிட்டார்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாக ஆராய ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெந்தி தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட் டுள்ளதாக தோட்ட உட் கட்டமைப்பு அமைச்சின் ஜனாதிபதி ஆலோசகர் எஸ். சதாசிவம் கூறுகின்றார்.

இப்பொழுது ஒரு புதிய சந்தேகம் எழுந்துள்ளது. சதாசிவம் மலையகத்தை சேர்ந்தவர்தானா? இல்லை இவரும் ஒரு தொழிற்சங்க வாதியா என்பதே அந்த சந்தேகம். அதற்கான காரணமும் உண்டு. சம்பள உயர்வு கோரி நடத்தப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டம், அனைத்து தொழிற்சங்கங்களும் இணைந்து நடத்திய போராட்டம், சத்தியாக்கிரக போராட்டம் என்பனவற்றின் போதெல்லாம் ஜனாதிபதி தலையிட்டு பல கமிட்டிகளை நியமித்தார். அப்போதைய தொழில் அமைச்சர் ஜோன் செனவிரத்ன தலைமையில் நியமிக்கப்பட்ட கமிட்டி முன்னாள் அமைச்சர் அலவி மௌலானாவின் முயற்சியால் அமைக்கப்பட்ட கமிட்டி. இறுதியாக நிதி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் தலைமையில் ஜனாதிபதியினால் அமைக்கப்பட்ட கமிட்டி ஆகியவற்றுக்கெல்லாம் என்ன நடந்தது? இந்தக் கமிட்டிகள் சமர்ப்பித்த அறிக்கைகளுக்கும் சிபார்சுகளுக்கும் என்ன நடந்தது என்பது சதாசிவத்திற்கு தெரியாதா?

ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட இடைக் கால கொடுப்பனவான 400 ரூபாவையும் இப்பொழுது வழங்கப்பட்ட 1200 ரூபாவையும் கேட்டபோது கம்பனிகளுடன் பேசவேண்டும் என ஜனாதிபதி கைவிரித்துவிட்டார்.

கம்பனிகளை ஒருபுறம் ஒதுக்கிவிட்டாலும் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, எல்கடுவ பிளான்டேசன் என்பன நேரடியாக அரசாங்கத்தின் கீழ் இயங்குகின்றன. இவை அனைத்தும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள். இங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அரசாங்கத்தின் தலைவி என்ற வகையில் ஏன் இந்த சம்பள உயர்வுகளை வழங்கக் கூடாது? ஜனாதிபதி ஒரு போதும் வழங்கமாட்டார். இது எல்லாம் சதாசிவத்திற்கு நன்கு தெரியும்.

ஆனால் ஜனாதிபதி கமிஷன் நியமித்துவிட்டார் என்று பறை அடிக் கின்றார். முதலில் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட கமிஷன்களுக்கு எல்லாம் என்ன நடந்தது என்பதை விசாரிக்க ஒரு கமிஷன் நியமிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இப்பொழுது தோட்டத் தொழிலாளர்கள் எல்லோரும் எதிர்க்கட்சியின் பக்கம் ஒன்றாக சாய்ந்துவிட்டனர். அவர்களை திசை திருப்ப வேண்டும் என்பதற்காகவே இந்தத் தேர்தல் குண்டை போட்டுள்ளார் ஜனாதிபதி. இதைக் கேட்டு தோட்டத்தொழிலாளர்கள் ஏமாற மாட்டார்கள்.

இப்படி மேலும் குறிப்பிட்டார் வேலாயுதம்.

**மலையகக் கண்ணோட்டம்**

இரா. புத்திரசிகாமணி

## டேஸ்ட் கடை தணிகாசலம்

வழமைபோல் தணிகாசலத்தின் கடை கலகலப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. தணிகாசலமும் வியாபாரத்தில் மும்முரமாக இருந்தார். இந்த சமயத்தில் அப்பாவு தலைவரும் அமிர்தம் தலைவியும் வந்தனர்.

''வாங்க தலைவரே இப்பத்தான் வர்றீங்களா''

''ஆமாங்க தணி அண்ணே இப்பத் தான் வாரோம்'' மிகவும் சலிப்பாகச் சொன்னார் அப்பாவு தலைவர்

''என்ன தலைவரும் தலைவியும் ரொம்ப சுறுசுறுப்பா நுவரெலியாவுக குப் போனீங்க. சங்கத்துக்கு பொறந்த நாள் கொண்டாடனும்னு குஷியா பொயிட்டு இப்ப சலிச்சுக்கிறீங்க''

''அந்தக் கதையை ஏன் தணி அண்ணே கேக்குறீங்க. எல்லாத் தலைவர் மாரும் வருவாங்க. தேர்தலும் வருது. எதையாவது உருப்படியா சொல்லுவாங்கன்னு போனா அங்க நடந்த கூத்து எங்களுக்கு கிறுக்கு புடிச்ச மாதிரி ஆச்சி'' என்றாள் மாதர் சங்கத் தலைவி அமிர்தம்.

''என்னம்மா நீங்க கொஞ்சம் வெவரம் தெரிஞ்ச ஆளுன்னு தானே ஒங்கள தலைவியா வச்சாங்க. ஒங்களுக்கே கிறுக்கு புடிச்சி போச்சா.''

''இன்னும் கொஞ்ச நேரம் அங்க குந்தி இருந்தா நெசமாவே பைத்தியம் புடிச்சிருக்கும் அண்ணே''

''என்ன தலைவரே, தலைவி தங்கச்சி சொல்லுது கொஞ்சம் விவரமா சொல்லுங்களேன.''

''வெவரம் என்னங்க வெவரம். தெரிஞ் சவங்களே எங்கள கோலம் கட்டி வைக்கி றாங்க அதுதான் வயித்தெரிச்சலா இருக்கு''

''அவ்வளவு மோசமா அப்புடி என்ன நடந்து போச்சி''

''கூட்டம் நல்லாத்தான் இருந்துச்சி. காயிதம் எல்லாம் ஒட்டி சோடிச்சி இருந்தாங்க''

''ஒரு விழான்னா இப்படித்தான் இருக்கும் இல்லாட்டி நல்லா இருக்காது இல்ல''

''நான் அத ஒன்னும் கொறை சொல்லலிங்க அங்க பேசின பேச்ச கேட்டுதான் குழம்பி போய் இருக்கேன்.''

''என்னங்க தலைவரே புதிரு போடுறீங்க தணி அண்ணன்கிட்ட வெவரமா சொன்னாத்தானே அவருக்கும்புரியும்''

''ஆமாங்க அண்ணே காரியதரிசி பேசுறப்ப அவர் வெள்ளை கச்சி பட்டியல்ல இருக்காராம் அதுனால எல்லாரும் வெள்ளை கச்சிக்கே ஓட்டு போடனும்னு பிரசாரம் பண்ணினாரு.''

''கச்சி எடுத்த முடிவத்தானே காரியதரிசி சொல்லி இருப்பாரு.''

''ஐயோ, ஐயோ, கச்சி முடிவாவது மண்ணாங்கட்டியாவது. பொறவு பேசின இன்னொரு தலைவரு. நான் கருப்புக்கச்சி பட்டியல்ல இருக்கேன். நீங்கள் எல்லோரும் கருப்புக்கச்சிக்கே ஓட்டு போடனும்னு சொன்னாரு.''

''இது என்னடா வேடிக்கையா இருக்கு. ஒரே மேடையில ரெண்டு கச்சிக்கு பிரசாரம் செஞ்சாங்களா?''



''அதுக்குள்ள அவசரப்படுறீங்களே, ரெண்டு பக்கம்னா கூட காரியம் இல்லீங்க''

''அப்ப அதுக்கும் மேலயும் கேட்டாங்களா''?

''ஆமாங்க அண்ணே. தலைவரு எழும்பி ஒரு போடு போட்டாரு பாருங்க, நான் கருப்புக்கச்சியும் இல்ல, வெள்ளைக் கச்சியும் இல்ல மஞ்சள்ல சுயேச்சையாப் போட்டி போடுறேன். அதனால நீங்க எல்லாரும் மஞ்சள் நெறத்துக்கே ஓட்டு போடனும்னு அடிச்சி சொல்லிப்புட்டாரு''

''ஒங்க தலைவர்மார் சொல்றதும் சரிதான். இப்ப நமக்கு மூனு ஓட்டு இருக்கு தானே. கருப்புக்கு ஒன்னு வெள்ளைக்கு ஒன்னு மிச்சத்த மஞ்சளுக்கு போட சொல்லி இருக்காங்க போல'' என்றார் தணிகாசலம் கிண்டலாக.

''இப்புடி ஓட்டு போட்டா எப்புடிங்க அண்ணே உருப்படியா இருக்கும்? போன பயணம் இப்புடி ஓட்டு போட்டுத்தான் ஒன்றரை லட்சம் ஓட்டு செல்லுபடி இல்லாமா போச்சி''

''அந்த தலைவருக்கு ஒன்னு இந்த தலைவருக்கு ஒன்னு மிச்சத்த பண்டா மத்தியாவுக்கும் போட்டுத்தானே இப்புடி ஆச்சி.''

''இப்படி ஒரே மேடையில மூனுபக்கம் பேசுறாங்க. வந்த சனங்க எப்புடி ஓட்டுப் போடுவாங்க. அதப்பத்தி இந்த தலைவர்மாருக்கும் அக்கறை இல்லிங்க. அடுத்தவரை எப்படியும் தோக்கடிக்கனும் அதுதாங்க இவுங்க லட்சியம்'' என்று ஒரு போடுபோட்டாள் அமிர்தம் தலைவி.

அப்பாவு தலைவரும் அமிர்தம் தலைவியும் கிளம்பிச் சென்றனர்.

— இராசிகா

# மலையக மக்களை அணிதிரள கோருகிறது மாணவர் ஒன்றியம்

ஒன்றிணைந்து உரிமை பெறுவோம். மாணவர் சக்தியே மாபெரும் சக்தி என்பதை உலகுக்குக் காட்டுவோம். மலையகத் தலைவர்களே அரசியல் சூழ்ச்சிகளுக்கு அடிமைப்பட்டு எடுப்பார் கைப்பிள்ளைகளாகி விடாதீர்கள்.

இப்படி மலையக சுதந்திர தமிழ் மாணவர் ஒன்றியம் மலையகத் தலைவர்களுக்கும் புத்தி ஜீவிகளுக்கும் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக சுதந்திர மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

நூற்றாண்டு காலமாகத் தொடரும் எங்கள் அடிமை வாழ்வின் அவலங்களும், கண்ணீரும்;... தேயிலைச் செடிகளுக்குள் எமது இரத்தமும் உரமாகும் துயரமும் மூன்றாம் தலைமுறையையும் தாண்டி இன்னும் தொடர்கின்றன.

எமது உணர்வுகள் எல்லாம் அடக்கப்பட்டு லயத்து வாழ்க்கை, என்ற துன்பச் சகதிக்குள், தத்தளித் துக் கொண்டிருக்கிறோம். நாம் தெளிந்திருந்தும் தெளி வற்றவர்களாக அதிலிருந்து மீண்டு வர முடியாமல் பேரினவா திகளின் அரசியல் சதி வலைக்குள் சிக்குண்டு தவிக்கிறோம்.

''அடிமை விலங்கொடித்து உங்களை மீட்போம்'' என அறை கூவிய எங்கள் தலைவர்களும் பேரின வாதிகளின் அரசியல் சூழ்சிகளால், அவர்களின் ''எடுப்பார் கைப்பிள்ளையாகி விட்டனர்.'' ஆளுக்காள் பிரிந்து நின்றமையால் எமது துயர வரலாறு இன்னும் தொடர்கிறது...

இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர் என எம்மைக் கூறுபோட்டு, ஒற்றுமையைச் சீர்குலைத்து பிரித்தாளும் பேரினவாதிகளின் அரசியல் துரோகத் தனத்துக்கு நாம் பலியாகும் அவலம் மீண்டுமொரு முறை அரங்கேறவுள்ளது.

எமக்கான கல்வியில்; பௌதீக வளங்களை வழங்குவதில் பாகுபாடு, கலை — விளையாட்டுத் துறைகளில் பாரபட்சமும் புறக்கணிப்பும், ஆசிரியர் பற்றாகுறை, ஆசிரியர் தொழில் பாண்மை விருத்தியில் பாகுபாடு, நாம் உயர் கல்வியைக் கற்பதற்கான வாய்ப்பின்மை; எமது தாய்மொழியாம் — தமிழை நிர்வாக மொழியாக நடைமுறைப்படுத்துவதில் அக்கறை யின்மை, இவை எவையும் இன்று வரையும் தீர்க்கப் படாமல் பிரச் சினைகளாகவே எம்மைத் தொடர்கின்றன... இவற்றைத் தீர்ப்பவர்கள் யார்? எப்போது...?

கண்டி, பதுளை, நுவரெலியா போன்ற எம் மண்ணிலுள்ள தொழில் நுட்பக் கல்லூரிகளில் தமிழ் மாணவர்களுக்கு இடமில்லையாம்...? தமிழில் கற்கை நெறிகளும் இல்லை. ஆனால் பெரும்பான்மை இன மாணவர்களுக்கோ, சகல கற்கை நெறி வசதிகளும் தாராளமாக வழங்கப்படுகின்றன... இந்தப் பாரபட்சத்தைத் தட்டிக் கேட்பவர்கள் யார்?...

பாலியல் வல்லுறவுகளும், காரணமின்றி சந்தேகத்தின் பேரில் கைது செய்து சிறையில் அடைத்தல், சித்திரவதை செய்தல், போன்ற வன்முறை சம்பவங்களும் அராஜகங்களும், எம் மண்ணிலும் எம்மீதும் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன.

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் நடைபெற்ற மனிதப் படுகொலைகளும்; மனித உரிமை மீறல்களும் இந்த நாடும், சர்வதேசமும் நன்கு அறிந்த விடயம், ஆனால் இன்னும் விசாரணைகள் மட்டும் முடிந்தபாடில்லை. இந்த மனித அவலம் மீண்டும் ஒரு முறை தொடராது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

இனியும் இளைய தலைமுறையினராகிய நாங்கள் கைகட்டி, வாய்மூடி மௌனிகளாக இருந்துவிட முடியாது. அநீதிகளுக்கு எதிராக குரல் கொடுக்கவும்; எமது உரிமைகளை வென்றெடுக்கவும் நாம் கரம் கோத்து களமிறங்கியுள்ளோம். கடந்த காலங்களில் சிறுகச் சிறுக முன்னெடுக்கப்பட்ட மாணவர் போராட்டங்கள் அனைத்தும் அரசியல் சாயம் பூசப்பட்டு நியாயமின்றி அடக்கப்பட்டன.

இன்றைய உலக வரைபடத்தில் உரிமையை மறுத்த அதிகார வர்க்க ஆட்சியாளர்களின் தலையெழுத்தே மாற்றி அமைக்கப்பட்டு விட்டது. இதற்குக் காரணம் அந்நாட்டில் பொங்கியெழுந்த மாணவர் சக்திதான்.. என்பது எமக்கு வரலாறு கற்றுத்தந்த படிப்பினை.

இன்னும் காலம் கடந்து விடவில்லை. மலையகத் தமிழ் கட்சிகள் அனைத்தும் சந்தர்ப்பவாத, குறுகிய அரசியல் இலாபங்களையும், குரோதங்களையும் களைந்துவிட வேண்டும். அரசியல் சித்தாந்தங்களுக்கு அப்பால் மலையகத் தமிழ் மக்களின் அபிலாஷைகள், நலன் கருதி ஒன்றிணைய வேண்டும். ஒரே குடையின் கீழ் அணிதிரண்டு ஒற்றுமை உணர்வுடன் குரல் கொடுக்க வேண்டும்.

ஜனநாய வழிமுறையில் முன்னெடுக்க உள்ள மாணவர் எழுச்சி போராட்டத்தின் ஊடாக எமது உள்ளக் குமுறலையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தி, மாபெரும் மக்கள் எழுச்சியினை, மக்கள் சக்தியினை கட்டியெழுப்புவோம். இந்தத் தர்மப் போராட்டத்திற்கு, மலையகப் பாட்டாளி மக்கள், புத்திஜீவிகள், கல்விமான் கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அதிகாரிகள் போன்ற அனைவரினதும் தார்மீக ஆதரவினை வேண்டுகிறோம்.

இப்படி மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# தீபாவளி தில்லு முல்லு சாடுகிறார் ராஜா

அரசாங்கமும் மலையகத்தில் உள்ள அரச சார்புத் தொழிற் சங்கங்களும் அப்பாவித் தோட்டத்தொழிலாளர்களின் வாக்குகளை அபகரிக்க பல்வேறு தில்லு முல்லுகளைச் செய்து வருகின்றன. என்றாலும் அவர்கள் ஏமாந்துவிடமாட்டார்கள். இப்படி இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க பொதுச் செயலாளர் ராஜா செனவிரத்ன சாடுகின்றார்.

இதுவரை காலமும் தோட்டத்தொழிலாளர்களைப் பற்றி சிறிதும் சிந்திக்காத அரசாங்கம் இப்பொழுது நீலிக் கண்ணீர் வடிக்கின்றது. தீபாவளி முற்பணமாகத் தாம் 2500 ரூபாவை பெற்றுக் கொடுத்திருப்பதாக சிலர் வானொலியிலும் தொலைக்காட்சியிலும் தீவிரமாகப் பிரசாரம் செய்கின்றனர். இது ஒரு அப்பட்டமான பொய்.

வழமையாக கொடுக்கப்படும் 1,250 ரூபா மட்டுமே தீபாவளி முற்பணம் அது பத்து தவணைகளில் செக்ரோல் மூலம் கழிக்கப்படும்.

இப்பொழுது மேலதிகமாக வழங்கப்பட்டுள்ள 750ரூபா மக்கள் வங்கி மூலம் வழங்கப்படும் வட்டிக் கடன். இதற்கு 20 வீதவட்டி அறவிடப்படும். ஐந்து மாதத்தில் கட்டாயமாகக் கடனைக் கட்டி முடிக்க வேண்டும். 750 ரூபாவுக்கு மாதம் 150ரூபா வட்டி. 5 மாதங்களுக்கும் வட்டி 750 ரூபா.

தினசரி 121 ரூபாவுக்கு உழைக்கும் ஒரு தொழிலாளி மாதக்கடைசியில் மிச்ச சம்பளமாக கையில் வாங்குவது ஆயிரம் ரூபாவுக்கும் குறைவாகவே. இதில் மாதம் 287.50 ரூபாவை செக்றோலில் பிடித்து விட்டால் மிகுதியான சொற்ப தொகையில் அந்த தொழிலாளி மாதம் முழுதும் எப்படி சமாளிப்பான்.

இதனை சிறிதும் சிந்தித்துப் பார்க்காத சுயநலவாத தலைவர்கள் தேர்தலில் தில்லுமுல்லுகளை செய்வதோடு நிற்காமல் தீபாவளி முற்பணத்திலும் தில்லுமுல்லு செய்யத் தொடங்கிவிட்டனர். இது வெட்கப்படவேண்டியதும் வேதனைப்படவேண்டியதுமான ஒரு விடயம்'' என ராஜா செனவிரத்ன குறிப்பிட்டார்.




இடம் பெயர்ந்த மக்கள் தம் இன்னல் தீர்ந்து, இன்பமாய் இருந்திட
குடிமனைகள் அனைத்திலும் குதூகல ஒளி பரவிட
வருக! தீபாவளித் திருநாளே வருக!!
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தம்மினிய தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றனர்


P.J. பர்னாண்டோ

ஸ்தாபனத்தினர்

இல. 542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
முதலாம் குறுக்கு (வள்ளுவர் அருகில்) பிரதான வீதி, நெல்லியடி.

★ தரமான மூக்குக் கண்ணாடிகள் ★ உறுதியான கட்டுப்பற்கள் ★ உங்கள் முக அமைப்புக்கேற்ப மூக்குக் கண்ணாடிகளைத் தெரிவு செய்வதற்கும் ★ சிறந்தமுறையில் தரமான, உறுதியான பற்களைக் கட்டுவதற்கும் ★ மிதந்த பற்களுக்குக் கிளிப் போட்டுக் கொள்ளவும் நீண்டகால அனுபவமுடையவர்கள் தான்

P.J. பர்னாண்டோ
உரிமையாளர் : லயன் A. ஜெயக்குமாரன்

தீபாவளி வாழ்த்துக்கள்!

தீப ஒளிபரப்பும் இத்தீபாவளித் திருநாளில் பாவம் பொடிபட பார்தனில் மக்கள் அகதி நிலை அகன்று அவர்தம் மனைகளில் நிம்மதியாய் வாழ்ந்து நிதம் ஒளி ஏற்றிட வாழ்த்துகிறோம் அகம் மகிழ!

நல்லெண்ணெய் விற்பனையில் ஓர் இராஜ முத்திரை

கலப்படம் கனவிலும் இல்லை. அதனால் வாடிக்கையாளர் மனதில் நிலைப்படமாகிவிட்ட பெயர்

V.S.P

V.S.P. லஞ்ச் ஒயில்

பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்
TEL: 2785

கொழும்பில் எமது முகவராக: மயூரா கொமினிக்கேசன்

(J19005)

No. 36B, பரகும்பா பிளேஸ், கொழும்பு - 06. Tel: 596226, 074 - 516049, 074 - 512034.

இதயம் எங்கும் இன்னொளி பரவிட, தேசமெல்லாம் தெய்வீக ஒளி பெருகிட
பாரினில் அமைதி பற்றிப் பரவிட, தேடிவரும் இத்திருநாளில்
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எம்மினிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!!




நியூ நகுலா ஜுவல்லறி
74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நியூ லலிதாஸ் ஜுவல்லறி
171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நகுலா நகை மாடம்
241G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

★ காலத்துக்குக் காலம் ஈடு, இணையற்ற புத்தம் புது டிசைன்களில் நகைகளை வடிவமைப்பவர்கள்.
★ காலத்தால் அழியாத, கற்பனைக்கும் எட்டாத அற்புத எழில் படைப்பாளர்கள்.
★ தங்க நகையுலகில் மங்காப் புகழுடன், தனக்கெனத் தனியிடம் வகித்து நிற்பவர்கள்

(J19006)

# மைக்கல் ஸ்லேட்டரும் டெஸ்ட் இலக்கமும்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் மைக்கல் ஸ்லேட்டர் தொடர்ந்தும் 356ஆம் இலக்கத் தொப்பியைப் பாவிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களுக்கு அவர்கள் டெஸ்ட் போட்டிகளுக்கு அறிமுகமான ஒழுங்கிலேயே தொப்பி இலக்கம் வழங்கப்படுகிறது.

1993 ஆம் ஆண்டில் இங்கிலாந்துக்கு எதிரான போட்டியின் மூலம் டெஸ்ட் கிரிக்கெட்டிற்கு அறிமுகமானார் ஸ்லேட்டர். அவர் 356 ஆவது அவுஸ்திரேலியாவின் டெஸ்ட் வீரர் என்று ஸ்லேட்டரிடம் தெரிவிக்கப்பட்டது.

தனது டெஸ்ட் இலக்கத்தை மிகவும் நேசித்தார் ஸ்லேட்டர். அவர் அவ்விலக்கத்தை கணுக்காலில் பச்சை குத்திக்கொண்டார். தனது காருக்கும் 356 எனும் இலக்கத்தையே கேட்டு வாங்கினார்.

ஆனால் தனது உண்மையான டெஸ்ட் இலக்கம் 356 அல்ல 357 தான் சரியானது என்ற விடயம் சமீபத்தில்தான் ஸ்லேட்டருக்குத் தெரியவந்தது.

காரணம் ஸ்லேட்டர் அறிமுகமான அதே போட்டியில் பிரெண்டன் ஜூலியனும் அறிமுகமானார். இப்போட்டியில் ஜூலியனுக்கு முன்னதாக ஸ்லேட்டர் துடுப் பெடுத்தாடினார். இதனால் இவ்விருவரில் ஸ்லேட்டரே இலக்க வரிசையில் முதலிடம் பெறுகிறார் என அவரிடம் கூறப்பட்டது.

ஆனால் ஒரே போட்டியில் இருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர் அறிமுகமானால் அவர்களது பெயர்களின் ஆங்கில அகர வரிசைப்படியே இலக்கம் வழங்கப்படும். இவ்வாறு அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் சட்ட விதிகளில் கூறப்பட்டுள்ளது. இதன்படி ஜூலியன் 356ஆவது இலக்கத்தையும் ஸ்லேட்டர் 357ஆவது இலக்கத்தையும் பெறவேண்டும்.

இந்நிலையில் இரு வீரர்களுடனும் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை பேச்சுவார்த்தை நடத்தியது. இதன் முடிவில் ஸ்லேட்டர் தொடர்ந்தும் 356ஆம் இலக்கத் தொப்பியை பாவிப்பதற்கு அனுமதிக்கப்பட்டார்.

''விதிவிலக்கான ஒரு சூழ்நிலையில் மைக்கல் ஸ்லேட்டர் 356ஆம் இலக்கத்தை பாவிப்பதற்கு அனுமதிப்பில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். எதிர்காலத்தில் பல வீரர்கள் ஒரே போட்டியில் அறிமுகமானால் அகர வரிசைப்படியே இலக்கம் வழங்கப்படும். துடுப் பெடுத்தாடும் வரிசை யின்படி அல்ல''. இவ்வாறு அவுஸ் திரேலிய கிரிக்கெட் சபையின் பிரதம நிறை வேற்று அதிகாரி ஜேம்ஸ் சதர்லண்ட் கூறினார்.'

ஸ்லேட்டர் இதுவரை 74 போட்டிகளில் பங்குபற்றி 5,132 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

# கோமாளி போல் நடத்துகின்றனர்

## சொஹைப் அக்தார் விசனம்

ஐ.சி.சி. என்னை ஒரு கோமாளி போன்று நடத்துகிறது. இவ்வாறு பாகிஸ்தான் வேகப் பந்துவீச்சாளர் சொஹைப் அக்தார் கூறினார்.

அக்தாரின் பந்துவீச்சுப் பாணியில் மீண்டும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாகவே அக்தார் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.


அக்தார்

1999ஆம் ஆண்டிலும் 2001ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலும் அக்தாரின் பந்துவீச்சுப் பாணியில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

அதையடுத்து அவுஸ்திரேலியர்களான டென்னிஸ் லில்லி டெரல், ஃபொஸ்டர் ஆகியோரிடம் விசேட பந்துவீச்சுப் பயிற்சி பெற்றார் அக்தார்.

மேற்கு அவுஸ்திரேலியப் பல்கலைக் கழகத்தில் மருத்துவப்பரிசோதனையொன்றுக்கும் அவர் உட்படுத்தப்பட்டார்.

அவரது முழங்கை மூட்டுக்கள் அசாதாரணமாக நகரும் தன்மையுடையவை என அப் பல்கலைக்கழகம் அறிக்கை சமர்ப்பித்தது.

இதையடுத்து அக்தார் வேண்டு மென்றே பந்தை எறியவில்லை என்பது ஒப்புக் கொள்ளப்பட்டது.'' இதையடுத்து தொடர்ந்தும் போட்டிகளில் பங்குபற்ற அவர் அனுமதிக்கப்பட்டார்.

எனினும் சார்ஜா போட்டிகளின்போது அவரது பந்துவீச்சில் மீண்டும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. போட்டி மத்தியஸ்தர்களும் நடுவர்களும் இதுதொடர் பாக ஐ.சி.சியிடம் புகாரிட்டனர்.

இதையடுத்து அவரது பந்துவீச்சை ஆராய்வதற்காக முன்னாள் மேற்கிந்திய வேகப் பந்து வீச்சாளர் மைக்கல் ஹோல்டிங்கை ஐ.சி.சி நியமித்துள்ளது.

இந்நிலையில் தம்மீது மீண்டும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறித்து அக்தார் கவலை தெரிவித்துள்ளார்.

''ஆனால் அவர்கள் (ஐ.சி.சியினர்) என்னை ஒரு கோமாளி போன்று நடத்துகிறார்கள். அவர்களே என்மீது குற்றம் சுமத்தினர். பின்னர் அவர்களே என்னை விடுதலை செய்தனர். இப்போது மீண்டும் குற்றம் சுமத்துகின்றனர்.

நான் ஒரு போராளி. பாகிஸ்தானுக்காக தொடர்ந்தும் கிரிக்கெட் விளையாட வேண்டுமென்பதில் நான் தொடர்ந்தும் உறுதியாக உள்ளேன். அடுத்த வருடம் நடைபெறவுள்ள மேற்கிந்தியத்தீவுகள், அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா அணிகளுடனான போட்டிகளில் பங்குபற்றுவதற்கு நான் மிகவும் ஆவலாக உள்ளேன். இவ்வாறு அக்தார் கூறினார்.


## விளையாட்டுச் செய்திகள்!

-ஆர். சேதுராமன்

# மைதானத்திற்கு வெளியே ஆஸி-நியூஸி மோதல்!

அவுஸ்திரேலிய, நியூஸிலாந்து அணிகளுக்கிடையே முதலாவது டெஸ்ட் போட்டி கடந்தவாரம் பிரிஸ்பேனில் நடைபெற்றது.

இப்போட்டியில் நியூஸிலாந்து அணி வேண்டுமென்றே நேரம் கடத்தியது. இவ்வாறு அவுஸ்திரேலிய அணியின் உப தலைவர் அடம் கில்கிறிஸ்ட் கூறினார்.


கில் கிறிஸ்ட்.


ஃபிளெமிங்

இப்போட்டியின் இரண்டாவது நாள் முடிவில் ஆட்டமிழக்காமல் 88 ஓட்டங்களைப் பெற்றார். மூன்றாவது நாள் காலையில் தனது சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இப்போட்டியில் மழை குறுக்கிட்டது. இதனால் பல மணித்தியாலங்களாக ஆட்டம் தடைப்பட்டது. இந்நிலையில் நியூஸிலாந்து வீரர்கள் வீணாக நேரம் கடத்துகிறார்கள். இவ் வாறு அடம் கில்கிறிஸ்ட் ஆத்திரமுற்றார்.

பலரும் அறிந்த எனது கோபத்தை நான் கட்டுப்படுத்திக் கொண்டேன். அணியின் தேவைக்கேற்ப அத்தருணத்தில் நான் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தேன். இவ்வாறு கில்கிறிஸ்ட் கூறினார்.

இப்போட்டியில் அவுஸ்திரேலிய அணி உப தலைவர் அடம் கில்கிறிஸ்ட்டுக்கும், நியூஸிலாந்து அணித் தலைவர் ஸ்ரீபன் பிளெமிங்கிற்கும் இடையே வாய்த்தர்க்கமொன்றுமூண்டது.

ஆனால் நியூஸிலாந்து அணித் தலைவர் ஸ்ரீபன் ஃபிளெமிங் இக்குற்றச்சாட்டை மறுத்துள்ளார். அப்போதைய சூழ்நிலையில் வேறு விதமாக எம்மால் விளையாடியிருக்க முடியாது.

நாம் வேண்டுமென்றே நேரம் கடத்தவில்லை. கில்கிறிஸ்ட் ஒரு ஆவேச குணம் கொண்ட வீரர். அதனால் மைதானத்திலும் வெளியிலும் ஆக்ரோஷமான தாக்குதல்களை மேற்கொள்கிறார். இவ்வாறு ஃபிளெமிங் கூறுகிறார்.

# "உலகக் கிண்ணத்திற்கு அரங்குகள் தயார்"

உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளை நாளைக்கே ஆரம்பிக்கலாம். இவ்வாறு சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் கூறினர்.

ஜப்பானிலுள்ள உலகக் கிண்ண கால்பந்தாட்ட அரங்குகளை பார்வையிட்ட பின்னரே இவர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

கடந்த வாரம் இத்தாலி, ஜப்பான் அணிகளுக்கிடையில் நட்புறவு கால்பந்தாட்டப் போட்டியொன்று நடைபெற்றது. இப் போட்டியை பார்வையிடுவதற்கு முன்பாக ஃபீஃபா குழுவினர் உலகக் கிண்ணப் போட்டி மைதானங்களுக்கு விஜயம் செய்தனர்.

''4 வருடங்களுக்கு முன்னர் இவ்வரங்குகள் ஒரு கனவாகவே இருந்தன. ஆனால் இப்போது உலகின் அற்புதமான 10 கால்பந்தாட்ட அரங்குகள் ஜப்பானில் உள்ளன. சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனம் இதற்கு முன் இவ்வளவு சிறந்த அரங்குகளில் உலகக் கிண்ணப் போட்டிகளை நடத்தியதில்லை.'' இவ்வாறு சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் உப தலைவர் அன்ரானியோ மத்தார்ரெஸ் கூறினார்.

ஆசிய கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் உபதலைவர் பீட்டர் வேலப்பனும் ஆமோதித்தார்.

சகல போட்டிகளுக்குமுரிய அனைத்து ரிக்கெட்டுக்களும் விற்பனை யாகிவிடும் என்று என்னால் உறுதி கூற முடியும். ஆனால் போட்டிகளை நடத்தும் இரு நாட்டின் அரசாங்கங்களும் அதிகாரிகளும் பாதுகாப்பு விடயத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். கடந்த செப்டெம்பர் 11 ஆம் திகதி நியூயோர்க்கிலும் வாஷிங்டனிலும் நடைபெற்ற தாக்குதல்கள் சகல விடயங்களையும் மாற்றிவிட்டன.

சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனம் ஜப்பான், தென் கொரியா அரசாங்கங்களுடன் இப்பிரச்சினை குறித்து தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.'' இவ்வாறு மத்தார் ரெஸ் கூறினார்.

இதேவேளை இத்தாலிய கால்பந்தாட்ட சங்கத்தின் முன்னாள் தலைவர் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக பின்வருமாறு கூறியுள்ளார். பயங்கரவாத அச்சுறுத்தல்களிலிருந்து உலகக்கிண்ணப் போட்டிகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளில் சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனம் மட்டுப்படுத்தப்பட்ட அழுத்தத்தையே ஏற்படுத்த முடியும். மக்களின் பாதுகாப்புக்குப் போட்டியை நடத்தும் இருநாடுகளின் அரசாங்கங்களுமே பொறுப்பேற்க முடியும். இவ்வாறு இத்தாலிய கால்பந்தாட்டச் சங்கத்தின் முன்னாள் தலைவர் கூறினார்.

# இலங்கை, மேற்கிந்திய டெஸ்ட்

இலங்கை மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் நவம்பர் 13 ஆம் திகதி முதல் நடை பெறுகிறது.

இவ்விரு அணிகளுக்கிடையில் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரொன்று நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும். இலங்கை மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனேயே மிகக்குறைந்தளவு போட்டிகளில் பங்குபற்றியுள்ளது.

இவ்விரு அணிகளுக்கிடையே இதுவரை மொத்தம் மூன்று போட்டிகள் மாத்திரமே நடைபெற்றுள்ளன. அவற்றில் ஒரு போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வென்றுள்ளது. ஏனைய இரு போட்டிகளும் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றன.

1993ஆம் ஆண்டில் மேற்கிந்திய அணி இலங்கைக்கு வந்தது. அதன்பின் முதல் தடவையாக தற்போது அவ்வணி இலங்கைக்கு வந்துள்ளது.

1993ஆம் ஆண்டில் மேற்கிந்திய அணியில் விளையாடிய வீரர்களில் அணித் தலைவர் கார்ல் ஹூப்பர், பிரையன் லாரா ஆகியோர் மாத்திரமே தற்போது இலங்கைக்கு வந்துள்ளனர்.

இதேவேளை இலங்கை 'ஏ' அணிக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும் இடையிலான மூன்றுநாள் போட்டிகள் இரண்டும் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றன. இரண்டு போட்டிகளிலும் மழையின் குறுக்கீடு இருந்தது.

ஆனால் முதலாவது போட்டியில் கார்ல் ஹூப்பரும் இரண்டாவது போட்டியில் அஸ்லி கைல்ஸும் சதம் குவித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

டெஸ்ட் போட்டி அட்டவணை

நவ.13-17: முதலாவது டெஸ்ட் - காலி

நவ.21-25: இரண்டாவது டெஸ்ட் - கண்டி

நவ.29-டிச.3: மூன்றாவது டெஸ்ட் - எஸ்எஸ்ஸி


நுவரெலியா மாநகரசபை பிரதி முதல்வரும் மாவட்ட கால்பந்தாட்ட லீக்கின் செயலாளருமான எஸ். நேருஜி மாநகரசபை உறுப்பினர் எச்.எம். அபேசிங்க ஆகியோர் நுவரெலியா கல்வே சுப்பர் ஸ்டார் விளையாட்டுக் கழகத்திற்கு நாற்காலிகளை வழங்குவதைப் படத்தில் காணலாம். மாநகர முதல்வரின் செயலாளர் ஏ. சுப்ரமணியம் சுப்பர் ஸ்டார் விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் பலரும் காணப்படுகின்றனர்.







அனுப்ப வேண்டிய முகவரி:
இளஞ்சுடர்
36/2,
பிரெட்ரிக்கா வீதி
கொழும்பு–6

## விண்வெளிப்பயணத்தில்........!

* பிறகோள்களில் ஈர்ப்புவிசை குறைவாயுள்ளமையினால் அங்கு நடப்பதற்கு நாற்காலியொன்றினைத் தயாரிக்க வேண்டும்.
* விண்ணில் இருந்து பூமிக்கு வருகையில் புவியீர்ப்பின் காரணமாக வேகம் அதிகரிக்கும். இவ்வேக அதிகரிப்பைக் குறைக்க வீழ் காவலிகள் பயன்படுத்தப்பட வேண்டும்.
* விண்வெளியில் மேல்நோக்கிச் செல்லும்போது ஈர்ப்புவிசை குறைவதால் பயணிகளின் இதயத்திற்கு குருதி செல்லும் அளவு குறைகின்றது.
* விண்வெளி வீராகளின் சுவாசத்துக்கு தேவையான ஒட்சிசனை சிலிண்டர்களில் எடுத்துச் செல்ல வேண்டும்.
* விண்வெளி வீரர்கள் தமது பயணம் முழுவதும் கட்டுலச் சமிக்ஞை மூலமே தொலைப்பன்னி இலக்கங்களை அழுத்தல் ,தொலைக் காட்சி களை இயக்குதல் போன்ற செயற்பாடுகளை செய்தல் வேண்டும்.



பு.சுகேந்திரன்
தரம்–10C
யாழ் இந்துக்கல்லூரி

*தாயின்பெயரைமுதலெழுத்தாகப்பயன்படுத்தும்நாடுஎது?.....ஸ்பெயின்.
*உலகின்மிகப்பெரியஅருங்காட்சியகம்எங்குள்ளது?..........நியூயோர்க்.
*எட்டுமாதங்கள்தொடர்ச்சியாகபறக்கும்பறவைஎது?–டெர்ன்பறவை.

ஷியாமா சலாகுதீன்–கண்டி.

# இளஞ்சுடர்

ஷர்மிலா

## முதன் முதலில்....

* 'மீனாஸ்' என்பவரே முதன் முதலாகக் கடற்படை ஒன்றை அமைத்தவர். அவர் இந்தப் படையைக் கொண்டு 'சைகிளடீஸ்' என்னும் தீவுக் கூட்டத்தில் இருந்த கடற்கொள்ளைக் காரர்களை அடக் கினார்.
* பிரான்ஸிலுள்ள பாரீஸ் நகரத்தில் 1890 இல் பஸ் ஓடியது
* முதன் முதலாக கேள்விக்குறி பயன்படுத் தப்பட்டது இலத்தீன் மொழியிலேயே.
*முதன் முதலாக டெலிபோன் டிரக்ரியை வெளியிட்டது இங் கிலாந்து.
* முதன் முதலாக இத்தாலி நாட்டிலேயே பெண்களுக்கான தனி ஸ்கூட்டரைத் தயாரித்தார்கள்.

உஷா–திருமலை



## சிறுவர் கைவண்ணம்



ஏஷான்,
தரம் – 04A,
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி, முகத்துவாரம்.



வா.துளஸிதரன்,
தரம் – 09C.
நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்,
நெல்லியடி,

## உங்களுக்குத் தெரியுமா?

*கிவி பறவைகள் இரையின் வாசனையை வைத்தே வேட்டையாடுகின்றன.
*தேனீக்களின் கண்களில் ஆறாயிரத்து முந்நூறு லென்ஸ்கள் உள்ளன.
* உதடு அசைவதைப் பார்த்தே இன்னொருவர் என்ன பேசுகிறார் என்பதைப் புரிந்து கொள்ளும் கலையை 'லிப்ரீடிங்' என்று கூறுகின்றனர்.

கமலகாந்தன்–இந்துக்கல்லூரி

## நெப்போலியனின் தாய்ப்பாசம்

18ம் நூற்றாண்டிலே ஐரோப்பாக் கண்டத்தை ஆட்டிப்படைத்த மாவீரன் நெப்போலியன். ஒரு சமயம் ஆங்கிலேய வீரன் ஒருவன் நெப்போலியனிடம் சிறைப்பட்டான். அவன் ஒருநாள் சிறையில் இருந்து தப்பி ஓடினான். பின்பு கடற்கரையில் கிடைத்த மரக்கிளையினால் படகு ஒன்றைச் செய்து கடலைக் கடந்து இங்கிலாந்துக்குச் செல்ல உள்ளம் துடித்தான். ஆனால் பிரான்ஸ் வீரர்களிடம் பிடிபடவே திட்டம் தோல்வி கண்டது. நெப்போலியனின் முன்பு ஆங்கிலேய வீரன் நிறுத்தப்பட்டான். ''நீ படகில் கடலைத் தாண்ட முயற்சித்தது உண்டா?''

''ஆம் அனுமதி தந்தால் கடல் கடந்து சென்று இறுதிக் காலத்திலாவது வயது போன தாயாரை மகிழ்ச்சியோடு வைத்திருப்பேன்.'' என்றான்.

தாய்ப்பாசத்தை அறிந்து மாவீரனின் மனம் உருகியது. பிரான்ஸ் சிறையில் இருந்து தப்பி ஓடிய குற்றத்தை மன்னித்தான். பொற்கிளி ஒன்றையும் படகு ஒன்றையும் வழங்கி வயதான தாயாரைக் காப்பாற்ற அனுப்பி வைத்தான். ஆங்கிலேய வீரன் நெப்போலியனின் தாய்ப்பாசத்தை எண்ணி வியந்து மகிழ்ச்சியுடன் சென்றான்.

**த. சுதர்ஷினி,** தரம் –10, யா/உடுவில் மகளிர் கல்லூரி.

## நாம் கற்கும் கல்வி

நாம் கற்கும் கல்வி–
புனிதமான கல்வி
நாம் கற்கும் கல்வி –
நமக்கு சொந்தமான கல்வி
நாம் கற்கும் கல்வி–
நமக்குஇன்பம்தரும்கல்வி
நாம் கற்கும் கல்வி–
இலவசக் கல்வி
நாம் கற்கும் கல்வி –
கட்டாயக் கல்வி
நாம் கற்கும் கல்வி–
நிலைத்து நிற்கும் கல்வி
நாம் கற்கும் கல்வி –
கலைமகள் தந்த கல்வி

பா.சிந்துரூபன்,தரம்–10B,
யா/இணுவில்மத்தியகல்லூரி.

## நம்ப முடிகிறதா.....!

*கவிஞர் என்றாலே நிறையப் படித்தவர். இலக்கண, இலக்கியங் களைக் கரைத்துக் குடித்தவர் என்று தானே நாம் நினைத்துக் கொண்டிருக் கிறோம். ஆனால் எழுதப் படிக்கத் தெரியாமலே புகழ் பெற்ற கவிஞர் டங்கன் மாக் இன்டைர். 1724 இல் பிறந்த அவர் சொல்லும் கவிதைகளை அவருக்குத் தெரிந்த, சீடர்கள் தான் எழுதி உதவி செய்தனர்.

*அதிக மாகச் சாப்பிட்டால் தான் நன்கு படிக்க முடியும். விளையாட முடியும். அதற்கான சக்தி கிடைக் கும் என்று கூறு வார்கள் அல்லவா? ஆனால் அதிகமாகச் சாப்பிடும் கோழிகள் குறை வாகச் சாப் பிடும் கோழி களை விடக் குறைவாகவே முட்டையிடுகின்றன.

*ஜப்பான் நாட்டைச் சேர்ந்தவர்கள் நீண்ட ஆயுளைப் பெற்றிருக் கிறார்கள். அவர்களின் சராசரி ஆயுட்காலம் 75 இற்குமேல் இருக்கிறது.

அ.ரமேஷ்,தரம்–10,பண்டாரவளை

## நல்லதைப் பேசு அது போதும்



நாக்கும் பற்களும் ஓய்வாக இருந்த ஒரு பொழுதில் நாக்கு பற்களைப் பார்த்துக் கூறியது. அழகான பற்களே! உங்களது கருணையை நான் என்னவென்று பாராட்டுவது..

என்னைச் சுற்றிப் பாதுகாப் பாக இருக்கிறீர்கள். நீங்கள் இத் தனை பேர் இருந்தும் என்னைத் தாக்குவதில்லை.

மேலும் உணவுகளை அரைத்துக் கொடுத்து எனக்கு சுவையானதாக்கித் தருகிறீர்கள். அப்படிப்பட்ட உங்க ளுக்கு நான் என்ன கைமாறு செய்யப்போகிறேன்.

இன்று நான் உங்களுக்கு ஏதாவது செய்தேயாக வேண்டும் போலுள்ளது. உங்களுக்கு விரும்பியதைக் கேளுங்கள். தருகிறேன் என்று கூறியது. இதனைக் கேட்ட பற்கள் பெரிதாகச் சிரித்தன.

நாக்கிற்குக் கோபம் வந்துவிட்டது. ஆனாலும் கோபத்தை அடக்கிக் கொண்டு மௌனமாக இருந் தது. உடனே பற்கள் ''நாக்கே! நாங் கள் உன்னைப் பாதுகாப்பதென்னவோ உண்மைதான் ஆனால் நீ ஏதாவது தாறுமாறாகப் பேசி விட்டால் உடைபடப் போவது நாங்களே. உன்னை ஒருவரும் ஒன்றும் செய்வதில்லை.அதனால் நீ எங் களுக்கு உதவி விரும்பினால் உன்னை அடக்கி நல்லதைப் பேசு அது போதும். அதுதான் எங்களுக்கு நீ செய்யும் உபகாரம் என்று கூறின. நாக்கும் உண்மையை உணர்ந்து கொண்டது.





## அறிவியல் விந்தைகள்

*கரட், தக்காளி போன்ற ஒரு சில காய்கறிகள் சிவப்பு நிறமாகக் காணப்படுவதற்குக் காரணம் அவற்றில் விற்றமின் A அடங்கியிருப்பதே. இந்த விற்றமின் A க்கு ஆதாரமாக விளங்குவது கிரிஸ்டலைன் ஹைட்ரோ கார்பன் எனப்படும் அணுக்களே இந்த ஹைட்ரோ காபன் அணுக்கள் கரோட்டீன் என்ற மூலப்பொருளைக் கொண்டுள்ளது.

கரோட்டீனின் நிறம் சிவப்பு. அதனாலேயே இந்த காய்கறிகள் சிவப்பு நிறமாகக் காணப்படுகின்றன. இதே போலவே தவளை,பச்சோந்தி போன்ற உயிரினங்களின் நிறமாற்றத்திற்கு நிறவுருமணிகள் காரணமாகின்றன.

எஸ்.எம் றியாஸ்–கஞத்துறை.

## விநோத உடைப் போட்டியில் முதல் பரிசு

கிளிநொச்சி உருத்திரபுரம் எள்ளுக்காடு (சக்திபுரம்) பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி அண்மையில்நடைபெற்றது. அதில் இடம்பெற்ற விநோத உடைப் போட்டியில் சுடரொளி உடையலங் காரத்துடன் தோன்றிய துஷந்திகா சிவலிங்கம் முதல் பரிசைத் தட்டிக்கொண்டார்.

தகவல்: **சி. ஜெனார்த்தினி,**
உருத்திரபுரம்,கிளிநொச்சி.



# வாழ்க்கையின் வெற்றி உங்கள் கைகளிலே

அன்பும் சந்தோஷமும் நிறைந்த ஒரு வாழ்க்கையை எதிர்பார்த்தே எல்லாப் பெண்களும் திருமண பந்தத்தில் இணைகின்றனர். பணத்தாலும் பதவியாலும் பெற்றுத்தர முடியாத மனத்திருப்தியை இந்த சந்தோஷம் கொண்டு வரும்.

தனது வீட்டிலேயே இத்தனை காலமும் இருந்து வளர்ந்த ஒரு பெண்ணுக்கு கணவன் வீடு என்பது புதிய அனுபவம். இதனை சம்பந்தப்பட்ட பெண்ணும் அவளின் கணவன் வீட்டாரும் புரிந்து கொள்ள வேண்டும். குடும்பத்தில் இந்த புரிந்துணர்வு இல்லாமல் போகும் போது சந்தோஷம் தொலைந்து விடுகிறது.

நான் தான் பெரியவர் என்ற மனநிலையை விட்டு விலகும்போது பல பிரச்சினைகள் இல்லாமல் போகின்றன. மாமி, மருமகள், நாத்தனார் என்ற பேதங்களை மறந்து, இது எமது குடும்பம் என்ற எண்ணம் தோன்றினால் ஒரு குடும்பம் எப்போதும் நிம்மதியையும் சந்தோஷத்தையும் இழக்காது.

பென் குயின் பறவைகள் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். இவை தம் காலுக்கடியில் வைத்து முட்டையை அடைகாக்கின்றன. குஞ்சு பொரிக்க சில மாதங்களாகும்.

பெண் பென்குயின் உணவு தேடப் போகும்போது ஆண் பென்குயின் உதவிக்கு வரும்.

ஆண் பென்குயின் முட்டையை பொறுப்பேற்ற பின்பு பெண் பென்குயின் உணவைத் தேடி ஐந்நூறு கிலோ மீட்டர் தூரம் வரை கடல் பகுதிக்குப் போய் விடும். அது திரும்பி வர மாதங்களாகும்.

சில சமயங்களில் இரை தேடிப்போன பென்குயின் திரும்பி வராமல் இருப்பதும் உண்டு. அப்போது அடைகாக்கும் பென்குயின் சாப்பிடாமல் இருந்து இறந்து போகும்.

பென்குயின் குஞ்சுகள் ஒரே இடத்தில் வளர்கின்றன. இந்த குஞ்சுகளை எல்லாப் பென்குயின் பறவைகளும் சேர்ந்து பாதுகாக்கின்றன. பென்குயின்கள் வேலையைப் பிரித்து செய்து வாழும் பறவைகள்.

இந்த பென்குயினின் வாழ்க்கையை ஒவ்வொரு குடும்பத்தினரும் எடுத்துக் காட்டாக வைத்துக் கொண்டால் பிரிவுகள் ஏற்படுவது அபூர்வமாக இருக்கும்.

எனது வீட்டில் எந்தநாளும் சண்டை தான். வாழ்க்கையே வெறுத்து விட்டது. இவ்வாறு சிலர் அலுத்துக்கொள்வார்கள். குடும்பம் என்றால் சில முரண்பாடுகள் ஏற்படுவது இயற்கை தான். ஆனால் அதுவே வாழ்க்கையாகி விடக் கூடாது.

எந்த ஒரு சந்தர்ப்பத்திற்கும் முகம் கொடுத்து அதனை வெற்றிகரமாக எதிர்கொள்வதில் தான் பெருமை இருக்கிறது. எனக்கு வாழ்க்கையே வேண்டாம் என்பதிலும் பார்க்க நான் வாழ்ந்து காட்டுவேன் எனும் போது வாழ்க்கை அர்த்தப்படுகிறது.

குடும்பங்களில் குழப்பங்கள் ஏற்பட பெண்களே காரணம் என்ற பொதுவான குற்றச்சாட்டு இருக்கின்றது. இதனை இன்னும் எத்தனை நாட்களுக்கு அப்படியே விட்டு விடப் போகின்றீர்கள்.

ஒரு பெண் தான் மாமி, மருமகள் அல்லது நாத்தனார் என்ற எந்த ஒரு இடத்திற்கு வரும் போதும் தன்னை சரியான பாதையில் வழி நடத்திக் கொள்ள வேண்டும். அப்போது வீண் பழிகளும் பிரச்சினைகளும் ஏற்படுவதிலிருந்து விடுபடலாம்.

இதற்காக நீங்கள் உங்களுடைய எந்த ஒரு உரிமையையும் இழக்கத் தேவையில்லை. மற்றவர்களுக்காக உங்கள் ஆசாபாசங்களை விட்டுக் கொடுக்க வேண்டும் என்பது பொருளல்ல.

நீங்கள் நீங்களாகவே வாழுங்கள். கூடவே மற்றவர்களுடனும் சேர்ந்து வாழுங்கள்.

# நல்ல வரவேற்பு வேண்டுமா!

எமது சொந்த வேலைகளுக்காக வெளி இடங்களுக்குச் செல்லும் போது நண்பர்களின் அல்லது உறவினர்களின் வீடுகளில் நாம் தங்குவது வழமை. அவ்வாறு தங்கும் போது அவர்களுக்கு தொந்தரவு ஏற்படாதவாறு நாம் நடந்து கொள்ள வேண்டும்.

நாம் தங்கப் போகும் வீட்டில் உள்ளவர்களுக்கு ஏதேனும் விசேட வேலைகள் உள்ளனவா என்று முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்காக ஓரிரு தினங்களுக்கு முன்னதாகவே நீங்கள் வருவதை தொலைபேசி மூலம் தெரிவித்து விடுங்கள். குறிப்பாக நீங்கள் அங்கு செல்ல இருக்கும் தினம் காலையில் உங்கள் வருகையை உறுதிப்படுத்தி விடுவது நல்லது.

பொதுவாக உறவினர்களின் அல்லது நண்பர்களின் வீடுகளுக்கு நாம் செல்லும் போது இனிப்பு வகைகளை எடுத்துச் செல்வோம். ஆனால் இவ்வாறு தங்கப் போகும் போது வீட்டு சமையலுக்கு பயன்படுத்த கூடிய பொருட்களை கூடியளவு எடுத்து செல்லலாம்.

மற்றவர்கள் வீட்டில் தங்கியிருக்கும் போது வெளியே சென்றால் இரவாக முன்பு திரும்பி வந்து விடுவது நல்லது. ஏனென்றால் நீங்கள் தங்கியிருக்கும் வீட்டிலிருப்பவர்களின் நித்திரையை குழப்பக் கூடாது தானே!

நீங்கள் விரும்பிச் சாப்பிடும் உணவு தான் வேண்டும் என நினைக்காமல் அவர்கள் வீட்டில் சமைப்பதை மகிழ்ச்சியாக உண்ணுங்கள். தொலைக் காட்சி பார்ப்பது போன்ற விடயங்களில் வீட்டுக்காரருக்கே முன்னுரிமை கொடுங்கள். நேரம் கிடைத்தால் சின்ன, சின்ன வேலைகளில் உதவியாக இருங்கள்.

தொலைபேசி போன்ற செலவை ஏற்படுத்தும் உபகரணங்களை பாவிப்பதை இயன்றளவு தவிர்ப்பது நல்லது.

இப்படியெல்லாம் இருந்து பாருங்கள். நீங்கள் யார் வீட்டிற்கு சென்றாலும் நல்ல வரவேற்புக் கிடைக்கும்.



# வெப்பத்தால் வரும் கரும் புள்ளி

முகப்பருக்களை போலவே பிரச்சினைக்குரிய விடயம் தான் முகத்தில் தோன்றும் கரும் புள்ளிகள்.

குறிப்பிட்ட வயதெல்லைக்குள் உள்ள பெண்களுக்குத் தான் முகப்பரு பிரச்சினை இருக்கிறது. கரும்புள்ளிகள் அப்படியல்ல. பொதுவாக எல்லா வயதுப் பெண்களுக்கும் ஏற்படக் கூடியவை. இவை மூக்கு பகுதியிலேயே அதிகமாக ஏற்படுகின்றன.

தோலின் எதிர்ப்புச் சக்தி குறைவாக இருக்கும் போது அதிகளவான வெப்பத்தை உடலால் தாங்க முடியாமல் போகிறது. இதனாலேயே முகத்தில் கரும்புள்ளிகள் ஏற்படுகின்றன. சிலருக்கு பாரம்பரியமாகவும் இது ஏற்படலாம்.

இதற்கு உடலுக்குள் மட்டும் குளிர்ச்சியான உணவுகளை உட்கொண்டால் போதாது. தோலையும் குளிர்ச்சியாக வைத்திருக்க வேண்டும். சூரியக் கதிர்கள் உடலைத் தாக்காமல் கவனித்துக்கொள்வது அவசியம்.

இளநீரில் அதிகளவான உயிர்ச் சத்துகள் உள்ளன. இளநீரைக் குடிப்பதுடன் அதனை தோலில் தடவி வந்தாலும் நல்ல பயன் கிடைக்கும்.

ஆனால் சளித் தொல்லை உள்ளவர்கள் குளிர்ச்சியான பொருட்களைப் பாவிக்கும் போது சற்று அவதானமாக இருந்தால் நல்லது. ஏனெனில் கரும்புள்ளிகள் போய் தடிமன் வரக் கூடாது அல்லவா?

இந்த பிரச்சினை உள்ளவர்கள், கரும்புள்ளிகளை அகற்றுவதற்காக தற்போது பெற்றுக் கொள்ளக் கூடிய 'பிளாஸ்டர்களை' உபயோகிக்கலாம்.

## பெண்

பசீனா

# தட்டிக் கேட்க தைரியம் தேவை

எந்த ஒரு கெடுபிடியும் இல்லாமல் பஸ்ஸில் போய்வர வேண்டும் என நினைத்தால் அது ஒரு போதும் நடக்காத காரியமாகிவிடும். பஸ்ஸில் பிரயாணம் செய்யும் பெண்களுக்கு ஏற்படும் இன்னல்கள் அந்தளவுக்கு அதிகரித்திருக்கின்றன.

'உங்ளே போ, உள்ளே போ என்ற நடத்துனரின் குரலுக்கு மதிப்பளிக்கும் சில ஆண்கள், பெண்களின் கௌரவத்திற்கு மதிப்பளிக்க மறந்து போகிறார்கள். பக்கத்தில் உள்ள பெண்ணை இடிப் பதும் உடம்பில் கை வைப்பதுமாக பல சேட்டைகள் நடக் கின்றன. பஸ்ஸில் 'பிரேக்' போடும் போது அதனை பல ஆண்கள் தமக்கு சாதகமாக பயன் படுத்தி கொள்கிறார்கள்.



சில ஆண்கள் நடந்து கொள்ளும் விதம் பற்றி எழுத மட்டுமல்ல, நினைக்கவே அருவருப்பாக இருக்கும்.

இவ்வாறான சந்தர்பங்களில் சம்பந்தப் பட்ட பெண்கள் என்ன செய்கிறார்கள்?

தனக்கு தொல்லை கொடுக்கும் ஆணை முறைத்துப் பார்ப்பார்கள். தங்களுக்குள்ளே முணுமுணுப்பார்கள். ஆனால் வெளிப் படையாக கண்டிக்க பலர் அஞ்சுகின்றனர். இதனால் சில ஆண்கள் அச்சமின்றி தவறான செயல்களில் ஈடுபடுகின்றனர்.

தன்னிடம் அநாகரிகமாக நடந்து கொள்ளும் ஆணின் ஷேர்ட்டை பிடித்து உலுக்கி நான்கு அறைவிட வேண்டுமென பாதிக்கப்படும் பெண்கள் மனதிற்குள் துடிப்பார்கள். ஆனால் ஏதோ ஒன்று அவர்களை தடுத்து விடுகிறது.

அவன் தவறு செய்கிறான் என்பதை அனைவரும் அறிவார்கள். ஆனால் அதனை தட்டிக் கேட்கும் தைரியம் வருவதில்லை. பகிரங்க எதிர்ப்பை தெரிவித்தால் பதிலடி எப்படி இருக்குமோ என்ற அச்சம் ஏற்படுகிறது.

சன நெரிசல் அதிகமான பஸ்ஸில் அடுத்தவர் மேல் படாமல் பயணம் செய்ய முடியுமா? இது பல ஆண்களின் நியாயம் தேடும் கேள்வி. உடம்பில் படுவது வேறு, வேண்டும் என்றே அத்து மீறி நடந்து கொள்வது வேறு என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு பெண்ணுக்கும் சுயகௌரவம் இருக்கிறது. அதற்கு மரியாதை கொடுப்பது சமுதாயத்தின் கடமை.

பெண்களுக்கு இன்னல் ஏற்படும் போது தட்டிக் கேட்கும் அல்லது சம்பந்தப்பட்ட பெண்ணுக்கு உதவி செய்ய முன் வரும் ஆண்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் இவ்வாறானவர்கள் நூற்றுக்கு எத்தனை பேர் இருக்கிறார்கள் என்றால். மிகக் குறைவானவர்களே உள்ளனர்.

யாருக்கு என்ன நடந்தால் எமக்கென்ன என்று நினைப்பவர்களே அதிகமாக இருக்கின்றனர். இந்த மனநிலை மாற்றமடைவது அவசியம். தவறுகள் நடக்கும் போது தட்டிக் கேட்கும் தைரியம் சமுதாயத்தில் வளரும் போது, குற்றச் செயல்கள் குறைந்து விடுகின்றன.

# பங்கிட்டுச் செலவிடுங்கள்

தொழிலிற்குச் சென்று பணம் தேடுவது கணவனின் கடமை. அந்தப் பணத்தைக் கொண்டு வீட்டை நிர்வகிப்பது மனைவியின் பொறுப்பு என்று ஒரு காலம் இருந்தது. இது மாறி தற்போது கணவன், மனைவி இருவரும் தொழில் செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இதனால், வீட்டுச் செலவுகளை யார் செய்வது, இருவருடைய வருமானத்தையும் எப்படிப் பங்கிடுவது? முதலான கேள்விகள் எழுகின்றன.

பொதுவாகப் பெண்கள் தங்கள் வருமானத்தை சொந்தத் தேவைகளுக்குச் செலவிடவே விரும்புவார்கள். வீட்டுச்செலவுகளை ஆண்கள்தான் செய்யவேண்டும் என எதிர்பார்ப்பார்கள்.

இதற்குக் காரணம் கணவன் மனைவி இருவருக்கிடையேயும் உள்ள பரஸ்பர நம்பிக்கையின்மை தான். முதலில் ஒருவர் மீது மற்றவர் நம்பிக்கையை வளர்க்கவேண்டும். அப்போதுதான் இருவரும் குடும்பப் பொறுப்புகளை ஏற்க முடியும்.

கணவன் — மனைவி இருவருமாகச் சேர்ந்து செலவுப் பட்டியலைத் தயார் செய்து வருமானங்களைப் பங்கிடுங்கள். எந்தச் செலவை யார் ஏற்பது என்று ஆரம்பத்திலேயே முடிவு செய்வது நல்லது.


கணவன் மனைவி இருவரும் சேர்ந்து ஒரு தொழிலைச் செய்வதாயின் அவரவருக்குச் சேரவேண்டிய பங்கை நியாயமாகப் பிரித்து எடுங்கள். இவ்வாறான விடயங்களில் கவனமாக இருக்கவேண்டும். நாம் அதிகம் பொருட்படுத்தாத விடயங்கள் நாளடைவில் சூறாவளியாக மாறிவிடக்கூடியவை.


விற்பனைப் பெண் உதவியாளர்கள்

ஆடை விற்பனை நிலையமொன்றுக்கு, ஆங்கில மற்றும் தமிழ் மொழியில் தேர்ச்சியுடைய விற்பனைப் பெண் - உதவியாளர்கள் தேவை. நேர்முகப் பரீட்சைக்கு காலை 10.00 மணி முதல் பகல் 12.00 மணிவரை நேரில் வரவும்

சிம்போசியம்
இல. 256B, காலி வீதி,
பம்பலப்பிட்டி.





எங்கள் இனிய தீபாவளித் திருநாள் வாழ்த்துக்களுடன்.....

உங்களுக்குத் தேவையான அனைத்து வகை மூக்குக் கண்ணாடிகளையும், முகத்தோற்றத்திற்கு ஏற்றாற் போல் வடிவமைத்துத் தருவதில் என்றும் முன்னணியில்...

கண்ணாடியை தீர்மானிப்பது நீங்கள் மெருகூட்டுவது நாங்கள்

Carvalho Opticals, 48, Reclamation Road, Colombo -11. T.P. 434368



# அமெரிக்காவுக்குப் பேரிடி பின்லேடன் போட்ட குண்டு

அமெரிக்காவையும் ஐரோப்பிய நாடுகளையும் கடந்த சில வாரங்களாக பீடித்திருந்த அந்த்ரக்ஸ் கிருமிப் போர்ப் பரபரப்பு ஓரளவு அடங்கி வருகிறது.

சவூதி கோடீஸ்வரரும் அமெரிக்கா மீதான தற்கொலைத் தாக்குதல்களின் சூத்திரதாரி என்று கருத்தபடுபவருமான ஒஸாமா பின்லேடன் தற்பொழுது மற்றொரு குண்டைத் தூக்கிப் போட்டுள்ளார்.

தம்மிடம் அணு ஆயுதங்கள் மற்றும் இரசாயன ஆயுதங்கள் இருப்பதாகவும் அவற்றின் மூலம் அமெரிக்காவைத் தாக்கப் போவதாகவும் அவர் அச்சுறுத்தி உள்ளார்.

அமெரிக்காவை மட்டும் அல்ல உலக நாடுகளையே இது பரபரப்பில் ஆழ்த்தி விட்டுள்ளது.

அமெரிக்காவில் ஏற்கனவே சிலர் உயிரிழக்கக் காரணமாக இருந்த அந்த்ரக்ஸ் உயிரியல் இரசாயனப் பவுடரை பின்லேடனின் தீவிரவாத இயக்கமே அனுப்பி வருவதாக ஊகிக்கப்படுகின்ற போதிலும் இதற்கு இதுவரை எந்த ஒரு சான்றாவது கிடைக்கவில்லை.

அமெரிக்காவில் சமீபத்தில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பு ஒன்றில் அந்த்தரக்ஸ் பவுடரை ஈராக்கே அனுப்பி வருவதாக கணிசமான அளவு மக்கள் நம்புகின்றனர்.

ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்காவின் தாக்குதலுக்குப் பின்னர் அந்த்ரக்ஸ் கிருமிப் போர் ஆரம்பிக்கப்பட்டதால் பின்லேடன் மீது முத்திரை குத்தப்பட்டதில் ஆச்சரியம் இல்லை.

உருது மொழியில் வெளிவரும் ஓசாப் என்னும் பத்திரிகையின் ஆசிரியரான ஹமீட்டுக்கு வழங்கிய பேட்டியிலேயே அணு ஆயுத, இரசாயன ஆயுதத் தாக்குதல் குண்டைத் தூக்கிப் போட்டுள்ளார் பின் லேடன்.

பாகிஸ்தானில் இருந்து வரும் டோன் பத்திரிகை இந்தப் பேட்டியைப் பிரசுரித்திருக்கிறது.

அமெரிக்கா எமக்கு எதிராக அணு ஆயுதங்களையும் இரசாயன ஆயுதங்களையும் பயன்டுத்தினால் நாமும் அத்தகைய ஆயுதங்களினால் திருப்பித் தாக்குவோம் என்று பின்லேடன் பேட்டியில் தெரிவித்திருந்தார். தற்பாதுகாப்புக்காக தம்மிடம் அத்தகைய ஆயுதங்கள் இருப்பதாகவும் அவர் கூறி இருந்தார்.

கடந்த 7ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி புஷ் உரை நிகழ்த்துகையில் பின்லேடன் பேரழிவு தரும் ஆயுதங்களால் தாக்கக் கூடும் என்று ஐரோப்பிய நாடுகளை எச்சரித்திருந்தார்.

தம்மிடம் அணு ஆயுதங்கள் இருப்பதாக பின்லேடன் தெரிவித்திருப்பதில் உண்மை கிடையாது என்று ரஷ்ய ஜனாதிபதி புட்டீன் கூறுகிறார். பிரிட்டனும் இதே கருத்தையே கூறி இருக்கிறது. என்றாலும் அமெரிக்கா உட்பட பல உலக நாடுகள் இதனை அசட்டை செய்யத் தயார் இல்லை.

பின்லேடன் தனது பேட்டியில் அணு, மற்றும் இரசாயன ஆயுதங்களை எங்கிருந்து பெற முடிந்தது என்பதற்கு பதில் கூற மறுத்து விட்டார்.

இந்தக் கேள்விக்கு அவர் Go to the next question என்று பதில் அளித்து மழுப்பி விட்டார்.

இந்தப் பேட்டியை அடுத்து அமெரிக்க இரட்டைக் கோபுரங்கள் மற்றும் பென்ரகன் மீதான தாக்குதல்களுக்கு பின்லேடன் பின்னணியில் இருந்ததுக்கு ஆதாரம் கிடைத்திருப்பதாக பிரிட்டிஷ் பத்திரிகையான சண்டே டெலிகிராப் கூறுகிறது.

அந்த இரட்டைக் கோபுரங்கள் அமெரிக்காவின்



பின்லேடன்

பொருளாதாரச் சக்தியைப் புலப்படுத்தி வந்தன. எல்லா வகைகளிலும் இந்தத் தாக்குதல் பெரியது என்று பின்லேடன் பேட்டியில் தெரிவித்திருந்தார்.

டோன் பத்திரிகையில் வெளியான பின்லேடனின் பேட்டியில் மேலும் தெரிவிக்கப்பட்டிப்பதாவது.

பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்திக் கொண்டு எதிரியானவன் முஸ்லிம்களின் எல்லைப் பகுதிக்குள் தனது நடவடிக்கையை நகர்த்தினால் அவனைத் தாக்குவதற்கு அனுமதி உண்டு. வீட்டுக்குள் புகுந்த கொள்ளைக்காரன் வீட்டில் உள்ள சிறுவனை பணயக் கைதியாகப் பிடித்துக் கொண்டால். அந்தச் சிறுவனின் தந்தை அந்த கொள்ளைக்காரனைத் தாக்கலாம். அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் பலஸ்தீனத்திலும் செச்சினியாவிலும், காஷ்மீரிலும், ஈராக்கிலும் முஸ்லிம் சமூகத்தைப் படு கொலை செய்து வருகின்றன. ஆகவே அமெரிக்காவைப் பழிவாங்கும் உரிமை முஸ்லிம்களுக்கு இருந்து வருகிறது.

இஸ்லாமிய விதிப்படி சமய நம்பிக்கையற்ற நாஸ்திகனின் நிலத்தில் அதிக காலம் வாழக் கூடாது.

அமெரிக்கா மீதான தாக்குதல் பெண்களையும் குழந்தைகளையும் இலக்குவைத்து நடத்தப்படவில்லை. அமெரிக்காவின் பொருளாதார வலுவையும் அதன் இராணுவ கட்டமைப்பையும் குறிவைத்தே அந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் கொலைக்கு எதிரானவர்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யுத்தத்தின் போது இறந்து கிடந்த ஒரு பெண்ணைப் பார்த்து இந்தப் பெண் ஏன் கொல்லப்பட்டாள் என்று கேட்டார். 13 வயதுக்கு மேற்பட்ட ஒரு சிறுவன் முஸ்லிம்களுக்கு எதிராக ஆயுதம் தூக்கினால் அவன் கொல்லப்பட வேண்டியவனே.

வியட்நாம் யுத்த காலப் பகுதியில் முழு அமெரிக்க மக்களும் அமெரிக்காவுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தனர். அதே மாதிரி எழுச்சி இன்றும் ஏற்பட வேண்டும்.

இப்படி பின்லேடன் தெரிவித்தார்.

செப்டெம்பர் 11 அமெரிக்கா மீதான தாக்குதல்களை சில முஸ்லிம்களே மேற் கொண்டிருந்தனர் என்று பின்லேடன் ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

இது குறித்து அவரிடம் கேட்கப்பட்ட போது:—

தாக்குதல் நடத்திய சந்தேக நபர்கள் பட்டியலை அமெரிக்கா உடன் வெளியிட்டது. அவர்கள் அனைவரும் முஸ்லிம்கள். அவர்களில் 15 பேர் சவூதி அரேபியர்கள். இருவர் ஐக்கிய அரபு ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள். ஒருவர் எகிப்தியர். எமக்குக் கிடைத்த தகவலின்படி அவர்கள் அனைவருமே விமானப் பயணிகள் என்று பின்லேடன் பதில் அளித்தார்.

பேட்டியில் அமெரிக்க மக்களுக்கு ஒரு வேண்டுகோளையும் பின்லேடன் விடுத்தார்.

அமெரிக்க மக்கள் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். நீங்க்ள் எத்தனையோ வரிகளை உங்கள் அரசாங்கத்துக்குச் செலுத்துகிறீர்கள். உங்கள் ஜனாதிபதியை நீங்களே தெரிவு செய்கிறீர்கள். அவர் தலைமையிலான அரசு ஆயுதங்களை உற்பத்தி செய்கிறது. அவை இஸ்ரேலுக்கு வழங்கப்படுகின்றன.

பலஸ்தீனர்களைப் படுகொலை செய்ய இஸ்ரேல் அவற்றைப் பயன்படுத்துகிறது.

இதன்மூலம் முஸ்லிம்களுக்கு எதிரான படுகொலைகளை அமெரிக்கா செய்வது உறுதியாகி விட்டது. நான் அமெரிக்க மக்களுக்கு அறை கூவல் விடுகின்றேன். முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக அமெரிக்கா கடைப்பிடிக்கும் போக்கை கைவிடும்படி நீங்கள் உங்கள் அரசை நிர்பந்தியுங்கள்.

இப்படி பின்லேடன் கோரிக்கை விடுத்தார்.


— ஆதித்யன்

## பித்தன் பதில்கள்

வினோத்,
திருகோணமலை.

கே : என் மனைவி குழந்தைத் தனமாய் அடம் பிடிக்கிறாள் என்ன செய்ய?

ப : *தூக்கி வைத்து நிலா காட்டுங்கள்.*



பாரதிதாசன்,
வவுனியா.

கே : பித்தா கடிஜோக் ஒன்று கூறுங்களேன்.

ப : *ஓர் இளம் பயணி நீண்ட தூரம் நடந்து களைத்து விட்டார். இரவாகி விட்டது. ஒரு வீட்டின் கதவைத் தட்டி இங்கு தங்கலாமா என்று வீட்டுக் காவலாளியைக் கேட்டார். மன்னிக்க வேண்டும் இளம் பெண்கள் இங்கு இருக்கிறார்கள் என்று பதில் வந்தது. அடுத்தடுத்த வீடுகளையும் தட்டினார். அதே மாதிரிப் பதில்களே வந்தன. அலுத்துப் போன பயணி பொறுமை இழந்தார். இன்னொரு வீட்டைத் தட்டி இளம் பெண்கள் இங்கே இருக்கிறார்களா என்று கேட்டு விட்டார். ஏன் என்றான் காவலாளி. நான் இன்றிரவு இங்கே தங்க வேண்டும் என்றான் அந்த அப்பாவிப் பயணி.*

பௌர்னன்நிஷா, ஒந்தாச்சிமடம்.

கே : அறுபது வயதில் கலியாணம் செய்பவர்கள் முதலிரவு வைத்துக் கொள்வார்களா?

ப : *வயாக்ரா இருக்கிறதே...!*

பே. ஹர்சனா, கந்தளாய்.

கே : பித்தா நீ குளிக்கும் போது சோப் போடுவதில்லையாமே? இது உண்மையா?

ப : *ஆ... கடவுளே என் சுதந்திரக் குளியலில் சோப் போடாததை மட்டுமா பார்த்திருப்பீர்கள்.*

கூ. சுரேந்திரன், விநாயகபுரம்.

கே : இளைஞர்களுடன் சீறிப் பாயும் ஒரு சில நாற்பதைத் தாண்டிய நாயகர்கள் யுவதிகள் என்றதும் உரசிக் கொண்டு வழிந்து பேசுவது ஏன்?

ப : *வலிப்பு வந்ததும் இரும்பைப் பிடிப்பது போல.*

சஞ்சீவன், திருநெல்வேலி.

கே : ஒரு பெண்ணை காடையர்களிடம் இருந்து காப்பாற்றினேன். அழகாக இருக்கிறாள் காதலைச் சொல்லவா?

ப : *இந்த எம்.ஜி.ஆர். விளையாட்டுகள் தானே வேண்டாம் என்று சொல்லுறது.*

சுனித்ரா, பண்டாரவளை


கே : மேற்கிந்திய தீவுகள், ஸிம்பாவ்வே தொடர்களையும் மின்சாரத் தடையின்றி பார்க்க முடியுமா?

ப : *கடந்த ஞாயிறுடன் மின்வெட்டு முற்றாக நிறுத்தப்பட்டுவிட்டது. இனி மழைகுறுக்கிட்டு போட்டிகள் நிறுத்தப்படுமா என்பது தான் பிரச்சினை.*

ராகவன், சுன்னாகம்.

கே : பெண்கள் கராட்டி பழகுவது குறித்து?

ப : *நல்லதொரு தற்காப்புக் கலை இருந்தும் மாமியார், கணவர் கவனம்.*



ஜெயந்தி,
வவுனியா.

கே : அண்மையில் ஜனாதிபதி உரையின் போது எல்லாவற்றையும் கவனித்தீர்களா?

ப : *சொன்னவற்றைத் தானே திரும்பச் சொல்லப் போகிறார் என்ற சலிப்பில். அவர் செல்ல நாய் ஆழ்ந்து தூங்கியதையும் கவனித்தேன்.*

சுந்தரம், கல்லாறு.


கே : காமம் இல்லாத காதல் உண்டா பித்தா?

ப : *புகையில்லாத நெருப்பு உண்டா நண்பா?*

வேல்தாஸ்,
புதுக்குடியிருப்பு.

கே : அரசியல்வாதியின் உண்மைகள் எவ்வளவு காலம் உறங்கும்.

ப : *வேட்பு மனுத் தாக்கல் செய்யும் வரை.*



நௌசாத்,
மூதூர்.

கே : நம் நாட்டு கிரிக்கெட் விளையாட்டு வீரர் அரசியலில் குதித்துள்ளாரே?

ப : *அரசியலும் ஒரு கண்கட்டி விளையாட்டுத் தானே.*

ரமீஸ், காத்தான்குடி

கே : பித்தனே நடிகைகளைப் பற்றி கிசுகிசுக்கள் தான் ஏராளமாக வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் எந்த நடிகையும் தன்னைப்பற்றிய அந்தரங்கங்களைத் திறந்து கூறியதில்லையே?

ப : *ஏன் இல்லாமல்! பல நடிகைகள் திறந்த புத்தகமாகியிருக்கிறார்கள் இப்போது கூட நடிகை ரோஜா 'முள்ளில் ரோஜா' என்ற தலைப்பில் புதிய அந்தரங்க தொடர் ஒன்றை இந்தியாவின் பிரபல சஞ்சிகை ஒன்றில் எழுதப் போகின்றார்.*

றொபட், மருதானை.

கே : ஜாதகத்தால் நன்மை உண்டா?

ப : *வேண்டாதவர்களை பொருத்தமில்லை என்று விலக்கி விட முடிகிறதல்லவா?*

எம். யாழினி, வத்தளை.

கே : பதவி ஆசை கொண்டு கட்சி மாறியவர்கள் தேர்தலில் தோற்றுப் போனால் எவ்வாறு மக்களுக்கு முகம் கொடுப்பார்கள்?

ப : *சொந்த முகம் என்பது அவர்களுக்கு இருந்தால் தானே.*

உமாகாந்தன், தெகிவளை

கே : 'செவாலியே சிவாஜிகணேசன் விருது' நடிகர் சரத்குமாருக்குக் கிடைத்துள்ளதாமே உண்மையா?

ப : *ஆமாம் 21ஆவது சினிமா எக்ஸ்பிரஸ்ஸின் விருது வழங்கும் விழாவில் சரத்குமாருக்கு இவ்விருது வழங்கப்பட்டிருக்கின்றது.*

ஜெகன், திருகோணமலை

கே : உலகின் முதல் நிலை டென்னிஸ் வீராங்கனை என்ற பெருமையை மூன்று வாரங்களில் பறிகொடுத்துவிட்டாரே ஜெனிபர் கெப்ரியாட்டி?

ப : *"ஒரு நாள் மாத்திரம் முதலிடத்தில் இருந்தால் கூட எனக்குப் போதும்" என்று கூறியவர் தானே கெப்ரியாட்டி.*

டி. கவிதா, வத்தளை

கே : இம்முறை தமிழ் மக்களின் தீபாவளி பற்றி பித்தா என்ன சொல்கிறீர்?

ப : *நரகாசுரன் அரக்கன் அழிந்த தினமே தீபாவளி. பேரினவாத அரசியல் அசுரர்கள் என்று அழிகிறார்களோ அன்றே தமிழர்களுக்குத் தீபாவளி.*



ஜீவாவுக்கு யாழ் பல்கலை கௌரவப் பட்ட சர்ச்சை

# முதுமாணி பட்டத்துக்கு ஜீவா தகுதியானவரா?

டொமினிக் ஜீவா தப்புத்தப்பாகக் கதைக்கிறார். யாழ். பல்கலைக்கழகம் அவருக்கு வழங்க இருந்தது இலக்கியத்திற்கான முதுமாணி (M. Lit) பட்டமே தவிர முதுகலைமாணி (M.A.) பட்டம் அல்லவே?

முதுமாணிப்பட்டம் வழங்க முயன்றதை அவமதிப்பாக எப்படிக் கொள்ளலாம்? வேண்டுமென்றால், இவரைவிடவும் தகுதி வாய்ந்த எஸ். பொன்னுத்துரை, சொக்கன் போன்றவர்கள் தமக்குக் கௌரவப்பட்டம் வழங்கப்படாததை அவமதிப்பாகச் சொல்லலாம்.

இலக்கிய கலாநிதிப் பட்டமே தனக்கு வேண்டுமென்று ''தன்வாயாலேயே'' சொல்ல ஜீவா வெட்கப்படவில்லை!

''ஈழத்து மார்க்சிம் கார்க்கி'', ''ஈழத்துப் பாரதி'' என்றெல்லாம் தன்னை நினைக்கும் பிரகிருதியிடம் (ஆதாரம்: பழைய மல்லிகை இதழ்கள்) வெட்கத்தையோ, தன்னடக்கத்தையோ எதிர்பார்க்க முடியாது தான்!

முதுமாணிப்பட்டத்திற்கு (M.Lit) டொமினிக் ஜீவா தகுதியானவரா?

முதலாவது சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற இவரது 'ரிஷி மூலம்' இதோ!:

''... சென்னையிலிருந்து மீண்டதும், சில ஏதுக்களிலே தொற்றி, ஈராண்டு காலம் அஞ்ஞாதவாசம் இயற்றினான். அப்பொழுது அவன் சிலருடைய இயற் பெயர்களையே புனைபெயர்களாகக் கொண்டு கரந்துரைந்தான். அவனுடைய அக்காலப் படைப்புக்களைத் தமது சுய விந்துச் செழுமையென அச்சிலர் உரிமை கொண்டாடினர். அவ்வாறு அவனுடைய படைப்புக்களைத் தன்னுடைய பெயரில் வெளியிட்ட வேறொருவன் புனைக்கதைக்கான முதலாவது சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற 'கூத்தும்' நடந்தேறியது.''

— எஸ். பொன்னுத்துரை

(தனது 'Ã' சிறுகதைத் தொகுதி முன்னுரையில் — 1966)

ii) இவர் சிறந்ததோர் சஞ்சிகை ஆசிரியரா? இதுவரை வெளிவந்துள்ள 274 மல்லிகை இதழ்களிலும் இடம் பெற்ற ஆக்கங்களில் தரமானவற்றின் விகிதாசாரத்தை விட பல பத்து மடங்கானவை தரங்குன்றியவையே.

நல்லவற்றைப் பிரித்து இனங்காணும் இரசனைத் தேர்ச்சியும், கூரிய நோக்கும் இவரிடம் இல்லவே இல்லை. இதைத் தவிர, 'வியாபார நோக்கையே' அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதால் ஏற்படும் 'குளறுபடிகள்' ஏராளம், ஏராளம்! உதாரணம் : மாஸ்கோவில் ஒலிம்பிக் போட்டிகள் நடை பெற்றபோது, மல்லிகையில் 'ஒலிம்பிக் சிறப்பிதழ்' வெளியிட்டுள்ளார்! இலக்கியத்திற்கும் விளையாட்டிற்கும் என்ன சம்பந்தம்? எவ்வளவு சிறுபிள்ளைத்தனம்!

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டுமென, 1960 களில் குழு அமைத்து டொமினிக் ஜீவா போராடினார் என்பது பெரிய 'டுப்'.

அக்காலங்களில் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகமொன்று (அதுவும் இந்துப் பல்கலைக்கழகம்) அமைக்கப்பட வேண்டுமெனக் கோரி வந்தவர் அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் (சீனியர்) தான்.

ஆனால், உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறக் கூடாது என 1974 இல் 'பெட்டிசம்' போட்ட குழுவில் இவரும் இணைந்திருந்தார் என்பதே வரலாறு.

யாழ். பல்கலைக்கழகத்தில் ''தில்லு முல்லுகள்'' நிகழ்வதாகச் சொல்லும் டொமினிக் ஜீவாவுக்குப் பின்னால் விரிவுரையாளர் பதவிக்குப் 'பறதிப்பட்ட' அந்த ''புவியியல் துறை மூத்த அறிஞரே'' நிற்பதாக இங்கு கதை அடிபடுகிறது. அவர் பல்கலைக்கழக நிர்வாகத்துறையில் இருந்த போது புரிந்த ஊழல்களை விவரித்தால் ''காட்டாறாய்'' பெருகும்!

— சி. சிவபாலன்

# பட்டணம் வந்து கெட்டுப்போகும் மலையகத்து 'பட்டாம்பூச்சிகள்'!

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்பதை வேத வாக்காகக் கொண்டு கடல் கடந்து பல நாடுகளில் எமது பெண்கள் பணிப் பெண்களாகத் தொழில் புரிகின்றனர். தமது குடும்பத்திற்காகவே பல்வேறு தியாகங்களைச் செய்து, பெரும் துன்பங்களுக்கு மத்தியில் உழைத்து வருகின்றனர். அங்கு இவர்கள் பட்டுவரும் துன்பங்களும் துயரங்களும் கணக்கிட முடியாதவை. தொழில் வாய்ப்புத் தேடி மலையகப் பெண்களும் வெளிநாடு செல்கின்றனர். வெளிநாடுகளில் உழைத்து வந்த மலையகப் பெண்கள் இங்கு நிம்மதியாக வாழ்கிறார்களா என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது. அவர்கள் இங்கு பல்வேறு சமூக சீரழிவுக்கு உள்ளாகிவிடுகின்றனர்.

அடுத்து ''கெட்டுப் பட்டணம் போ'' என்பது மலையகத்தில் வழக்கத்தில் உள்ள ஒரு பழமொழி. கெட்டு நொந்து போனவர்கள் எல்லாம் பட்டணத்தில் போய் புதிய வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதே அதன் பொருள்.

ஆனால் இன்று கிராமப் புறங்களில் அமைதியாக வாழ்ந்த இளம் மலையக யுவதிகள் கெட்டுப் போவதற்காகவே பட்டணம் போகின்றனர்.

ஆம் தலைநகரில் மத்திய கொழும்பிலும் ஏனைய புறநகர் புறங்களிலும் அமைந்துள்ள ஆடைத் தொழிற் சாலைகளில் ஆயிரம் ஆயிரம் மலையக இளம் யுவதிகள் தொழில் புரிகின்றனர்.

இப்படி தொழில் புரியும் எல்லா யுவதிகளுக்கும் வேலை செய்யும் இடங்களில் தங்குமிடவசதிகள் கிடைப்பதில்லை. 95 வீதமான யுவதிகள் புறாக் கூடுகள் போன்ற சிறு அறைகளில் தங்குகின்றனர். நான்கு ஐந்து பேராகக் கூடி சமைத்துச் சாப்பிடுகின்றனர். மற்றும் சிலர் போர்டிங் என்ற பெயரில் சிறைக் கூடங்களில் இருப்பது போல் அடைந்து கிடக்கின்றனர்.

பொது குளியல் அறை, பொதுவான கழிப்பறை, காற்று வர முடியாத படுக்கை அறை என துன்பப்படுகின்றனர். மூன்று வேளை உணவு என ருசித்துச் சாப்பிட முடியாது. ஏதோ பசிக்காக இடத்தை நிரப்புகின்றோம் என கிடைத்ததை அள்ளிப் போட்டுக் கொண்டு காலத்தைக் கழிக்கின்றனர். இது அவர்கள் உழைக்கும் பணத்திற்கு ஏற்படும் கேடு.

நகரத்திற்கு வந்து ஓரிரண்டு மாதங்கள் அமைதியாக இருந்த இப் பெண்கள் படிப்படியாக கொழும்பு நாகரீகத்திற்கு அடிமையாகின்றனர். பட்டணத்தில் ஊறிய பழைய பெண்கள் சிநேகிதிகளாகி விடுகின்றனர்.

இவர்களின் சேர்க்கையால் புதிய புதிய பொழுதுபோக்குகள், திரைப்படங்கள், ஆண் நண்பர்கள் என இவர்களுடைய வாழ்க்கையும் தொடர்புகளும் விரிவடைகின்றன.

ஆடை தயாரிப்பு நிலையங்களில் பணி புரியும் எந்தப் பெண்ணுக்கும் ஆண் சிநேகிதர்கள் இல்லாமல் இல்லை. இந்த பெண்கள் தொழில் செய்யும் இடங்களில் வட்டமிடும் இளவட்டங்கள் அங்கு ஏற்கனவே தொழில் செய்யும் யுவதிகளின் மூலம் இவர்களின் பெயர் ஊர் என்பனவற்றை அறிந்து வைத்துக் கொள்கின்றனர்.

திடீரெனப் போய் பெயர் சொல்லி அழைக்கின்றனர். பின் அப்பாவை தெரியும். அல்லது மாமாவை தெரியும் மிஞ்சியும் போனால் சகோதரி நெருங்கிய நண்பன் என்றும் உறவு கொண்டாடி விடுகின்றனர்.

ஆரம்பத்தில் சிறு சிறு உதவிகளை செய்து அந்த யுவதியின் நம்பிக்கையைப் பெற்று கடைசியில் காதலர்களாக மாறிவிடுகின்றனர்.

இந்த வேலைத் தலங்களில் வேலை முடிந்து யுவதிகள் வெளி வருவதற்குமுன் அங்கே இளைஞர் கூட்டம் கூடி நிற்கும்.

வெளியே வரும் யுவதிகள் தத்தம் ஜோடிகளுடன் கை கோத்து செல்வது ஓர் அலாதியான காட்சி. களைப்பு தீர முதலில் ஹோட்டலில் தேநீர். பின் ஒரு படம். படிப்படியாக இரவுகளை வெளியில் கழிக்கவும் ஆரம்பித்து விடுகின்றனர்.

உற்றார் உறவினர் அருகில் இல்லை. தட்டிக் கேட்க ஆளும் இல்லை. இதனால் சுதந்திரப் பறவைகளாக வட்டமடிக்கின்றனர். நிரந்தரமாக கணவன் மனைவியாக மாறி வாழ்பவர்களும் சிலர் உண்டு. ஆனால் தம்மையே இழந்து வயிற்றில் கருவந்தவுடன் காணாமல் போன காதலர்களும் உண்டு.

இப்படி கைவிடப்பட்ட கன்னித் தாய்மார் வீட்டிற்குப் பெற்றோரிடம் செல்லவும் முடியாது.

தனித்து வாழவும் முடியாது தமக்கென ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்றனர். தான் வாழ வேண்டும். தன் குழந்தையை காப்பாற்ற வேண்டும். இதற்கு இவர்களிடம் பொருள் இல்லை. இவர்களிடம் இருக்கும் ஒரே மூலதனம் இவர்களின் அழகிய உடல் மட்டுமே. விதி வசத்தால் பிழைக்க வந்த இடத்தில் விலை போகின்றனர்.

இதற்கு இப்பெண்களை மட்டும் குறை கூற முடியாது. இவர்களின் பெற்றோர், பிள்ளையின் பணத்தை மட்டும் எதிர்பார்ப்பவர்கள். பிள்ளையின் எதிர்காலம் பற்றி சிந்திப்பதில்லை. கட்டுக் காவல் இல்லாத இடத்தில் கயவர்களின் தொல்லை பற்றி சித்திப்பதும் இல்லை.

இங்கு தொழிலுக்காக வந்த பெண்களும் ஏதோ புது உலகத்திற்கே வந்து விட்டோம் என்று ஆகாயத்தில் மிதக்க ஆரம்பித்து விடுகின்றன. வாய்ப்பை எதிர் பார்த்திருந்த கழுகுகள் கொத்திக் கிழித்து விடுகின்றனர். எனவே தலை நகரில் தொழில் புரிய வந்த நமது சகோதரிகள் முன் எச்சரிக்கையுடன் நிதானமாக நடந்து கொண்டால் இப்படியான இக்கட்டான நிலைகளைத் தவிர்க்கலாம் என்பது உறுதி.

— வெளிமடை நீலா

# சிகரெட் ஜோதிடர்(!)

கிளிஜோதிடம், கைரேகை ஜோதிடம் என்று கேள்விப்பட்டிருப்போம். இப்பொழுது சிகரெட் ஜோதிடம் ஒன்று அறிமுகமாகி இருக்கிறது.

அதுவும் இங்கு அல்ல. தமிழ் நாட்டில் வாணியம்பாடியை அடுத்துள்ள அம்பலூரிலே. இங்குதான் இந்த சிகரெட் ஜோதிடர் இருக்கிறார். தத்தகவுண்டர் என்பது இவரது பெயர். ஜோதிடம் பார்க்கச் செல்வோர் ஒரு ரூபாவுக்கு கற்பூரம் கொண்டு போகவேண்டும். முதலில் கற்பூரத்தை வாங்கி நான்காக உடைத்து ஒரு பகுதியை கொளுத்துவார். பின்பு ஊதிபத்திக் குச்சி ஒன்றை எரிய வைத்துவிட்டு சிகரெட்டைப் பற்ற வைப்பார்.


ஒரு ரூபா கற்பூரமும் இரண்டு சிகரெட்டுக்களும் எரிந்து முடியும் முன் அனைத்தையும் சொல்லி முடித்துவிடுவார். இதுதான் சிகரெட் ஜோதிடம்.

தேங்காய் உரிக்கும் போது தனது கை மோதிரத்தை ஒருவர் தொலைத்துவிட்டார். ''உனக்குத் தெரிந்தவர்கள் தான் எடுத்திருக்கிறார்கள். நாளைக்கு அது கிடைத்துவிடும் என்றார் ஜோதிடர். அப்படியே நடந்தது.

மந்திரங்களைப் பயன்படுத்தி தெய்வங்களை கட்டுப்படுத்தும் சக்தி தனக்கு இருக்கிறது என்கிறார் இந்த ஜோதிடர்.

'மந்திரம் கால் மதி முக்கால்' என்பது போல் தன்னிடம் வருபவர்களின் பிரச்சினைகளை முதலில் அறிந்து கொள்கிறார். பின்னர் அச்சொட்டாக சகலவற்றையும் சொல்லி முடித்துவிடுவார்.

இந்த சிகரெட் ஜோதிடரின் வார்த்தைகள் புண்ணுக்கு புனுகு பூசுவது போல் இருப்பதால் கூட்டம் அலைமோதுகிறது. ஏனைய கள்ளச் சாஸ்திரிகள் போன்று சூலம், காளி என வரிசையாகப் படங்கள் இல்லாமலேயே இவர் ஜோதிடம் சொல்வது தனி அலாதி.





''அந்த அரசியல்வாதி ஏன்டா 'பாய' சுற்றி இடுப்புல வச்சிக்கிட்டு போறாரு?''

''அவருக்கு எப்போதும் எதையாவது சுருட்டிக்கிட்டே இருக்கனும். அதுதான் பழக்கதோஷத்தில 'பாய' சுரட்டி எடுத்துக்கிட்டுப் போறாரு!''



''உங்களோட ஸீட்டை ஏன் மாற்றச் சொல்றிங்க. அந்த இடம் நல்ல வசதியா கத்தானே இருக்கிறது''

''அந்த ஸிட்டுல தூங்கினா கெட்ட கெட்ட கனவா வருது சார்.....!''

# ஜேர்மனியில் அரங்கேறும் ஈழத் திருமகள்



செல்வி திருமகள் திருச்செல்வத்தின் பரதநாட்டிய அரங்கேற்றம் ஒக்டோபர் 6ஆம் திகதி ஜேர்மனியின் யூலிச் நகரில் மிக விமரிசையாக நடந்தேறியது.

இவர் ஜேர்மனிய திருமறைக்கலாமன்ற பொறுப்பாளராக கடமையாற்றும் திருச்செல்வத்தின் புதல்வியும், நாட்டியகலா நர்த்தகி, நாட்டிய விஷாரத் ஸ்ரீமதி ஜெயந்தி யோகராஜாவின் மாணவியுமாவார்.

ஜேர்மன் — ஒல்லாந்து ஆன்மீகப் பணியக இயக்குநர் அருட் திரு. பேனாட் றெக்னோ இவ்விழாவுக்கு தலைமை வகித்தார்.

இந்நிகழ்வில் திருமறைக் கலாமன்ற இயக்குநர் கலைத்தூது நீ. மரிய சேவியர் அடிகளார் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் அருட்திரு பேனாட் றெக்னோ அடிகளாருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தது ஜேர்மனிய திருமறைக் கலாமன்றம்.

இக் கலை நிகழ்வில் கலைஞர்கள், அறிஞர்கள், ஆதரவாளர்கள் என பெரும் திரளானோர் கலந்து கொண்டமை விழாவை மேலும் மெருகூட்டியது.

புலம் பெயர்ந்து போனாலும், தமிழர்கள் தம் கலை கலாசார விழுமியங்களை மறந்து விடாது இன்றும் வாழ்கிறார்கள் என்பதனை இந்நிகழ்வு பறைசாற்றியது.

# கம்பன் கழகத்தின் இசை வேள்வி

கொழும்பு கம்பன்கழகம் ஆண்டுதோறும் நடத்திவரும் ''ஸ்ரீராம நாமகானாமிர்தம்'' இசைவிழாவினை எதிர்வரும் 25ஆம் திகதி முதல் டிசம்பர் 2ஆம் திகதி வரை நடத்த ஒழுங்கு செய்துள்ளது.

இவ்வாண்டும் நம்நாட்டின் பிரபல கலைஞர்களும், இளம் கலைஞர்களும், தமிழ்நாட்டின் பிரபல இசைக்கலைஞர்களும் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பிக்கவுள்ளனர்.

கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் தினமும் மாலை 5 மணியிலிருந்து 8.30 மணிவரை நிகழச்சிகள் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

முதல்நாள் நிகழ்வினை உயர் நீதி மன்ற நீதியரசரும் கொழும்புக் கம்பன் கழகப் பெருந்தலைவருமான சி.வி. விக்னேஸ்வரன் தொடக்கி வைப்பார்.

ஆண்டுதோறும் இயல், இசை விழாக்களை நடத்திவரும் கொழும்பு கம்பன் கழகம், இவ்வாண்டு முதல் நாட்டியவிழா ஒன்றினையும் நடத்தத் திட்டமிட்டுள்ளது. இந்நாட்டிய விழாவில் இலங்கையின் பிரபல நடன ஆசிரியர்கள் நிகழ்ச்சிகளை வழங்கவுள்ளனர்.

டிசம்பர்மாத இறுதிப் பகுதியில் இவ்விழா நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# விழியால் மொழி பேசிய மாணவர்

ஷஷ்யா செவிப்புலன் குறைந்தோருக்கான வாய் மொழி பயிற்சி நிலையத்தின் இரண்டாவது வருட பூர்த்தி விழாவும் கலை நிகழ்ச்சிகளும் கடந்த 5ஆம் திகதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றன.

இந்தியாவில் இருந்து வருகை தந்த கலாநிதி லீலா பற்றிக், அருணாசலம் செட்டியார் மற்றும் பலர் மங்கள விளக்கேற்ற விழா ஆரம்பமானது.

மண்டபம் மட்டுப்படுத்தப்பட்ட கூட்டத்தினரால் இன,மத பேதம் இன்றி காட்சி அளித்தது.

விழியால்மொழி பேசிய மாணவ— மாணவியரின் நடன நிகழ்ச்சியுடன் விழா ஆரம்பமானது. பின்னணி இசையுடன் கூடிய நடனம் மிக அருமை. தாளத்திற்கேற்ப கால்கள் நடனமிட்ட காட்சி ரசிகர்களை மிக கவர்ந்தது. கரகோஷம் வானைப் பிளந்தது.

அதைத் தொடர்ந்து பாடசாலை ஆசிரியர்களால் பாடசாலைக் கீதம் இசைக்கப்பட்டது. பேச்சு பயிற்றுவிக்கப்பட்ட மாணவ — மாணவியரால் மூன்று பாடல்கள் பாடப்பட்டன.

மாணவ — மாணவியரால் பாண்டு வாத்திய இசை வழங்கப்பட்டது.

மற்றும் பல நிகழ்வுகளும் இடம் பெற்றன.

ஆண்டு விழாவா — கலைவிழாவா என திகைக்க வைத்த நிர்வாகிகள் குமார் நமசிவாயம், சந்திரா நமசிவாயம் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

பேசமுடியாத சிறுவர் — சிறுமியரை வைத்து ஊர்பேச விழா எடுத்து வெற்றி கண்ட நிர்வாகத்தினரின் பணி தொடர்கதையாக வேண்டும்.

— எம்.எச். செல்வம்

# அறவழிக் கல்வி நூல் வெளியீட்டு விழா

''அறவழிக் கல்வி'' (Moral Education) என்னும் கலாநிதி சின்னத்தம்பி எழுதிய ஆங்கில நூலின் வெளியீட்டு விழா சிறப்பாக நடந்தேறியது. இந்த வெளியீட்டு விழா ஒக்டோபர் 30 ஆம் திகதி பம்பலப்பிட்டி தொடர்மாடி கேட்போர் கூடத்தில் நிகழ்ந்தது.

கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இவ்விழா இடம்பெற்றது.

வெளியீட்டு நிகழ்வில் சிறப்பதிதியாக கலந்து கொண்ட பேராசிரியர் சந்திரசேகரன் பேசுகையில், ஒழுக்கக் கல்வி பாடசாலைகளிலும், பல்கலைக் கழகங்களிலும் முக்கியத்துவம் பெற வேண்டும்.

65 பக்கங்களில் 7 அத்தியாயங்களில் ஒழுக்கக் கல்வியின் முக்கியத்து வத்தை சரளமான ஆங்கிலத்தில், சிந்தனைத் தெளிவுடன் எழுதியுள்ளார் நூலாசிரியர். இவருக்குள்ள நீண்டகால கற்பித்தல் அனுபவம் இத்தகைய ஒரு பயனுறுதி மிக்க சிறந்த நூலை எழுத உதவியுள்ளது என்றார்.

இவர் தொடர்ந்து பேசுகையில் பெற்றோர்கள் ஆசிரியர்கள் மட்டுமன்றி, கல்வித்துறை அதிகாரிகளுக்கும், ஒழுக்கக் கல்வி பற்றிய சீரிய கருத்துக்களை இந்நூல் வழங்குகிறது. எவ்வாறாயினும் இந்த நூல் தமிழாக்கம் செய்யப்பட்டு வெளிவந்தால், தமிழ் பேசும் வாசகர்களுக்கும் பயனுள்ளதாக அமையும் என்றும் சொன்னார்.

விழாவில் மற்றும் பலரும் உரையாற்றினர். விழா இனிதே முடிவடைந்தது.

# நல்லதோர் இசை விருந்து...




பத்மலிங்கம் இசைக் கச்சேரி நடத்துகிறார்



நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர்

கொழும்பு தமிழ்ச் சங்கம் வழங்கும் மாதாந்த இசை நிகழ்ச்சியின் ஐந்தாவது நிகழ்வு கடந்த 3ஆம் திகதி நடைபெற்றது.

இது இலங்கைக் கலைக் கழக கர்நாடக சங்கீத பரதநாட்டியக் குழுவின் ஆதரவிலேயே நடைபெற்றது.

இசை நிகழச்சிக்கு முன்னர், ''நான் சற்று உங்களுடன் உரையாட விரும்புகிறேன்'' என்று கேட்டுக்கொண்ட எஸ். பத்மலிங்கம், இசைத்துறைவிரிவுரையாளர் ஆனார்.

கலையமுதம்

அவையினர் இசைபயில் மாணவர்கள் ஆனார்கள்.

கச்சேரிக்கு முன்னர் இரத்தினச் சுருக்கமாக இசை பற்றிய தகவல்களை அவர் தந்தார்.

விளங்க முடியாத ஒன்றை விளக்க முனைவதே இசை. இசையை ரசிப்பது என்பது சாதாரணவிடயமல்ல, நல்ல இசைஞானம் உள்ளவர்களால் மட்டுமே தூய இசையை ரசிக்க முடியும் என்றார்.

அவர் தொடர்ந்து பேசுகையில். இசை ஒரு முடிவிலி, இசை ஒரு பெரும் தேன்கடல்.

முப்பது வருடங்களாக நான் பாடிக் கொண்டிருக்கிறேன். இருந்தும் இவ்விசைத் துறையில் நான் துறை போனவன் என்று சொல்லிக் கொள்ளத் துணியவில்லை என் இதயம், என்று இசை நிகழ்வின் நாயகன் அவையடங்கிக் கொண்டார்.

பின்னர் அவை அடக்கத் தொடங்கினார். அருமையான குரல் வளத்தால் அற் புதமாகப் பாடிய பத்மலிங்கத்தின் பாட் டுக்கு, டி.எஸ்.பாலமுரளி, (வயலின்), ஏ. ரகுநாதன் (மிருதங்கம்) ஆகியோர் பக்கவாத்தியம் வாசித்தார்கள். இசையில் மயங்கிய அவையினர் கைத்தாளம் போட்டு ரசித்தார்கள்.

— இலக்கியன்

# வவுனியா வளாக மாணவர் மோதல்

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்களிடையே கடந்த சில நாட்களாக முறுகல் நிலை இருந்து வந்தது. இதன் எதிரொலியாக 18 மாணவர்கள் வகுப்புகளில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

மோதல்களில் இரு மாணவர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றனர்.

மாணவர்களிடையில் ஏற்பட்ட முறுகல் நிலைக்கும் மோதலுக்கும் புதிய மாணவர்களுக்கும் மூன்றாம் வருட மாணவர்களுக்கும் இடையிலான பிரச்சினையே காரணம் என்று கூறப்படுகிறது.

கடந்த 5ஆம் திகதி தொடக்கம் இந்த மோதல் நிலை அங்கு உருவாகி வந்தது. 5ஆம் திகதி வீதியில் இரு மாணவர் கோஷ்டிகளுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. அடுத்த நாள் மோதல் பூங்கா வீதிப்பகுதியில் இடம் பெற்றது.

5ஆம் திகதிச் சம்பவம் தொடர்பாக 12 மாணவர்களும் 6ஆம் திகதிச் சம்பவம் தொடர்பாக 6 மாணவர்களுமாக மொத்தம் 18 மாணவர்கள் வகுப்புக்களில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

இந்த மோதல்களுக்கெல்லாம் ராக்கிங்கே பிரதான காரணம் ஆகும்.



மனைவி: ''ஏனப்பா..... வேலை வெட்டிக்குப் போகாம இப்படி எந்த நேரமும் படுத்துத் தூங்கித் தூங்கி என்னத்தைக் கண்டீங்க.....?''

கணவன்: ''இரண்டு தடவை ரம்பாவையும் ஒரு தடவை ஜோதிகாவையும் கனவில் கண்டேனடீ.....!''

பெண்: ''எவ்வளவு வேணும்னாலும் எடுத்துக்கோங்க..... போகும்போது இவரை மட்டும் அவுட்டு விட்டிடுங்க.....''

திருடன்: ''ஏன்?''

பெண்: ''என் வீட்டுக் காரர் வெளியூர் போயிருக் கிறாரு. இவர் அடுத்த வீட்டுக் காரருங்க''



Accredited by National Gem & Jewellery Authority
வெளிநாட்டு ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்

ARUL 3 அருள்

3, Sea Street, Colombo 11. T.P. 436331

Nathan: 436331 or Siva: 077 600476




## முதியவருக்கு கௌரவிப்பு

வன்னோரிக்குளம் யோகர் சுவாமி திருவடி நிலையம் அண்மையில் முதியோர் தின விழாவைக் கொண்டாடியது. முதியோர் இல்லத்தில் உள்ள ஆகக்கூடிய வயதுடைய. சின்னத்துரை (மாம்பழச் சுவாமி – வயது 101) என்பவருக்கு கிளிநொச்சி அரச அதிபர் இ.ஐயாத்துரை மலர் மாலை அணிவிக்கிறார்.

(2ஆம் பக்கமும் பார்க்க)

# பிறந்த தின வாழ்த்து

செல்வப் புதல்வன்

## மிதுஷாந்தன்

HAPPY BIRTHDAY



19 - 11 - 2001

கண்டி பலகொல்ல கெங்காளையில் வசிக்கும் யோகேந்திரா – சுப்புலக்ஷ்மி தம்பதியினரின் செல்வப் புதல்வன் மிதுஷாந்தன் தனது முதலாவது பிறந்த தினத்தை 19-11-2001 அன்று தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, பெரியப்பா, தாத்தா, பூட்டி, ராஜா மாமா, ஆச்சிமார், சித்திமார், மாத்தளை மாமாமார், அத்தைமார், ராஜா பபீ, சூட்டா, டார்லிஸ் அம்பிட்டிய செல்வி அத்தை மற்றும் உற்றார் உறவினர்கள் மாத்தளை முத்துமாரியம்மன் துணையுடன் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகிறார்கள்.

*அன்பு ராஜா மாமா, பம்பலப்பிட்டி.*


வெளிவந்து விட்டது!

# லக்ஷ்மி

பஞ்சாங்க கலண்டர் – 2002



அழகிய வண்ணப் படங்களுடன் கூடிய இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய தினங்கள், பெரியார்களின் பிறந்த தினங்கள், நினைவு தினங்கள், சிந்தனைக்குரிய பொன் மொழிகள் அனைத்தையும் இலகு முறையில் பார்ப்பதற்கு ஏற்ப பழைய நேரத்திற்கமைய பஞ்சாங்கக் கணிப்புடன் வடிவமைக்கப்பட்டுள்ளன.

அன்பளிப்பு

கேதார கௌரி

சகலவிதமான கன்கவர் வர்ணக் கலண்டர்கள், டயறிகளை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் ஓடர்களுக்கு முந்திக்கொள்ளுங்கள்!



தொடர்புகளுக்கு:

லக்ஷ்மி அச்சகம்

ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு – 13.

தொலைபேசி: 448545, 473533

பக்ஸ்: 330588



TBC கலையகம்

Rajey Creation

பெருமையுடன் வழங்கும்





சங்கர்மகாதேவன்

S.P. பாலசுப்ரமணியம்

அனுராதாஸ்ரீராம் மகாலக்ஷ்மி ஸ்ரீநிவாஸ்

DRUMS இசையில் புதிய சரித்திரம் படைத்து முன்னணியில் திகழும் சிவமணி.

இணைந்துவழங்கும்

# ராக மாலை 2001





திகதி 23.11.2001 மாலை 6.00

LONDON - WEMBLEY ARENA வில்

தொலைபேசித் தொடர்புகளுக்கு

07979393380/ 07762127159/ 0208 864 8170/ 0208 868 8566

Arena Hotmail:08707331043

TBC S.W.2 - 21590 kHz

ஐக்கிய இராஜ்ஜியத்திலிருந்து 24மணி நேரத் தமிழ் ஒலிபரப்பினை நடாத்தி வரும்தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்(T.B.C)தின் தேசத்தின் நேசங்களுக்கான சிற்றலை (S.W) ஒலிபரப்பு தினமும் ஐக்கிய இராஜ்ஜிய நேரம் 12.30மணிக்கும் ஐரோப்பிய நேரம் 1.30மணிக்கும், இந்தியாவில் , தாயகத்தில்6.00 மணிக்கும்,இலங்கையில் 6.30 மணிக்கும் 13 மீற்றர் அலைவரிசையில் 21590 கிலோஹேட்ஸ்ஒலிவரிசையில் தென்னாபிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகளிலும் ஒலிக்கிறது எமது தேசத்தின்நேசங்களுக்கான ஒலிபரப்பு


இப்பத்திரிகை கொழும்பு—06, வெள்ளவத்தை பிரக்கும்பா பிளேஸ் 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர்பிரைசஸ் ஸ்தாபனத்தினால் 2001 நவம்பர் 18ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.